10

3 1761 10767286 7

# THE LIFE OF

# MAJESTY GEORGE V.

*King of England and Emperor of India.*

---

BY

SV. M. NARAYANASAMI CHETTY,

*Editor of Swadesa Samrakshani and Agent Swadesamitran,*

(PATTUKOTTAI.)

---

PRINTED AT THE ALEXANDRA PRESS,

KUMBAKONAM.

1913

*[Registered.*

gc-Sh 6
no.30
ROBARTS

# THE LIFE OF
# HIS MAJESTY GEORGE V.

*King of England and Emperor of India.*

இங்கிலாண்டின் அரசரும், இந்தியாவின் சக்ரவர்த்தியுமாகிய
ஐந்தாவது

# ஜார்ஜ் சக்ரவர்த்தி சரித்திரம்.


BY

**SY. M. NARAYANASAMI CHETTY,**

*Editor of Swadesa Samrakshani and Agent Swadesamitran.*

(PATTUKOTTAI.)

இஃது

சுதேச சம்ரக்ஷணி பத்திராசிரியரும்,

சுதேசமித்திரன் ஏஜண்டுமான,

பட்டுக்கோட்டை,

சிவ. மா. நாராயணசாமி செட்டியாரால்,

எழுதப்பட்டது.



PRINTED AT THE ALEXANDRA PRESS,

KUMBAKONAM.

1913.



[Copy Right Registered.]


[விலை அணா 6.

# தீர்க்காயுசு.

எப்பொழுது உண்டாகும்? நோயற்ற வாழ்விைல் வாழ்ந்தாலன்றோ! இல்லத்தில் அல்லல் நீங்கி சுகமாய் வாழ்வதற்கு நம்முன்னோர்ஏற்படுத்தியபொன்போன்ற விதிகளை அநுசரிக்கவேண்டும். இந்து சாஸ்திரங்களை ஆராய்ச்சிசெய்து, இல்லறத்தில் நடத்திக்கொள்ள வேண்டியதைப்பற்றியும் சுகவழியைக்காட்டி, நல்ல ஆரோக்கியத்துடன் எப்பொழுதும் திடகாத்திரமாயும், நீண்ட ஆயுளோடுமிருக்கக் கூடிய விஷயத்தைப்பற்றியும் 170-பக்கங் கொண்டசிறந்தபுத்தகமொன்றைஇயற்றி யிருக்கிறோம். விலாசத்தை தெரிவிப்போருக்கு விலையில்லாமலும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி

## மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்.

கிளை ஆபீஸ்கள்.
22. பிராட்வே, மதிராஸ்.
27. Dam Street, Colombo.
கோப்பிகடைபேலி, கொழும்பு.

**M. A** நெல்லையப்ப முதலியார்,
சின்னகடைத்தெரு, திருச்சிறுப்பள்ளி.

VINAYAGA VILLA,
PURASAWAKUM, VEPERY,
*Madras, 30th August 12.*

# CERTIFICATE.

*THE Author, Mr. SV. M. Narayanasamy Chettiar, Swadesamitran Agent, has doubtless taken considerable pains in compiling this book. It will be of immence value, not only to the old but also to the young, as the life of His Majesty King George V, the Emperor of India is written in a style easy and simple. The author has presented before the tamil knowing public, in an interesting way, the boyhood of His Majesty. Considering the maiden attempts of the author, I may say that he has succeeded in publishing this little work.*

*(Sd.) K. C. Subrahmanian,*
**Barrister-at-law.**

மிஸ்டர் கே. ஸி. சுப்பிரமணியன் பாரிஸ்டர் அட் லா சென்னை

# முன்னுரை.

## குறள் வெண்பா

அறிவுக் கொளியாகி யானந்த நீங்காக்
குறியுடைத் தெங்கோன் குணம்.

உலகத்திலுள்ள தேசங்களெல்லாவற்றையும்விட சகல வளங்களும் நிறைந்து, சீருஞ் சிறப்பும் பெற்று அறிவிற்சிறந்த ஞானிகளுக்கு உறைவிடமாகவிருப்பது பரதகண்டமென்னும் நம்மிந்திய நாடென்பதை யாரும் மறுக்கமுடியாது. இம்மகா தேசத்திலிருந்துதான் இட்சுவாகு, அரிச்சந்திரன், நளன், மனு, மாந்தாதா, சிபி, ஸ்ரீராமன் முதலிய சக்ரவர்த்திகள் மற்றைய தேசங்களெல்லாவற்றையும் நீதியும் சத்தியமுந் தவறாது அரசாட்சிபுரிந்து வந்தார்கள். மற்றைய தேசாதிபதிகள் யாவரும் இந்தியச்சக்ரவர்த்திகளுக்கும் மன்னர்களுக்கும கப்பங்கட்டி வந்தார்கள். அதுபோலவே மதசம்மந்தமாகவும் தலைமைபெற்ற வசிட்டர், நாரதர், வியாசர் முதலிய மகரிஷிகளெல்லாரும் உதித்து தர்மாதர்மங்களையும், உயர்ந்த நாகரீகச் செயல்களையும் மற்றதேசங்களில் பரவச்செய்து பெருங்கீர்த்தி பெற்றிருந்தார்கள். இப்போதும் பல மகாபுருஷர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இதை மேல்நாட்டு நவீன நாகரீகர்களே ஒப்புக்கொள்வதுமன்றி, உலகத்திலுள்ள சகல மதங்களையும் ஆராய்ச்சிசெய்துவரும் தியாசாபி மதஸ்தாபகர்கள் அதன் தலைமைஸ்தானத்தை ஸ்தாபிக்கத் தகுந்த இடத்தை நாடி உலகமெல்லாந்தேடியும், அதற்கேற்ற உன்னத க்ஷேத்திரம் கிடைக்கப்பெறாமல், சென்னையைச் சார்ந்த அடையாற்றில் தலைமை ஆபீசை (Head Office) ஸ்தாபித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட க்ஷேத்திரத்தையும் மகா உன்னதமும், பரிசுத்தமும் வாய்ந்த ஒப்புயர்வற்ற மகா மேருகிரியாகிய இமாலயத்தையும் வடக்கிற்கொண்டிருக்கும் நம்மிந்தியதேசத்தை ஆளும் சக்ரவர்த்தி எவரோ

அவரே உலகத்திலுள்ள சக்ரவர்த்திகளுக் கெல்லாம் சிரேஷ்ட ரென்றும், தெய்வானுக்கிரகம் பெற்றவரென்றும் பெரியோர்க ளாலும் சக்ரவர்த்திகளாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வளவு மேன்மைதங்கிய இந்திய ஏகாதிபத்தியமானது பதினேழாம் 17-ம் நூற்றாண்டில் ஐரோப்பிய வியாபாரிகளாகிய புத்திமான்களால் சாமார்த்தியமாயும் சுலபமாயும் அவர்களின் புண்ணியவசத்தால் அடையப்பெற்று, பின்பு 1858-ம் வருஷத்தில் பிரிட்டிஷ் நாட்டிற்கு அரசியாயும், மகாலெக்ஷ்மியின் அவதாரமாயும் விளங்கிய விக்டோரியா அரசியாரின் நேர் ஆளுகையில் அங்கீகரிக்கப்பட்டது. தற்காலம் மேற்குறிப்பிட்ட விக்டோரியா அரசியாரின் பௌத்திரரும், இந்திய ஏகாதிபத்தியத்திற்கு பிரிட்டிஷ் வம்சத்தில் வந்த 3-வது சக்ரவர்த்தியுமான 5-வது ஜார்ஜ் மகா ராஜாசக்ரவர்த்தியவர்களின் ஆளுகையிலிருக்கிறது. ஸ்ரீ ராமன், யுதிஷ்டிரர் முதலிய நீதிவழுவா நெறிமுறை மன்னர்களின் சரித்திரங்களாகிய இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களை நாம் பூஜிப்பதுபோல, இப்புருஷோத்தமரின் சரித்திரமும் ஆசிரிக்கத் தக்கதாகவிருக்கிறது. அதை உதாரணமுகத்தால் விளக்குமிடத்து முன்னிருந்த சக்ரவர்த்திகளால் நிவர்த்திக்கப்படாமலிருந்த உடன் கட்டையேறுதல், அடிமைவர்த்தகம், நரபலியிடுதல் முதலிய கொடுஞ்செயல்களை நிவர்த்தித்து பிரதி மனுஷவர்க்கத்திற்கும், சரீரம், வாக்கு, எழுத்து முதலிய சுதந்திரங்களைத் தாராளமாய்க் கொடுத்து நிர்ப்பயமாய் உலகிலுலாவும்படி செய்திருப்பதே போதிய சான்றாகும். அல்லாமலும் இதிகாசங்களிற் கண்ட ராஜநீதிகளும் ஜனுபிமானமும் தர்மங்களும் இதிலுமில்லாமற்போகவில்லை.

தற்காலம் இந்தியராகிய நமக்குள் பொதுவாழ்க்கை குறைந்து பொறாமை, அசூயை, ஜாதிபேதம், உணவு வித்யாசம் முதலியவைகளால் இந்தியர் அளவுக்குமீறி பீடிக்கப்பட்டு இராஜாங்க வியவகாரங்களில் ஞான சூனியர்களாய் கீழ்மைப்பட்டிருக்கிறோம். அந்த விஷயத்தில் பிரிட்டிஷார் நம்மைத் திருத்தி ஒற்றுமையுண்டாக்கி

வருகிறார்கள். அந்தவகையில் அதாவது இராஜாங்க விஷயத்தில் நம் அறிவு விருத்தியடையவேண்டுமானால் மக்களின் தூல சரீரம் சோற்றாலும் தண்ணீராலும் போஷிக்கப்பட்டு கொழுமை பெறுதல்போல இராஜாங்க அறிவு காங்கிரஸ் கான்பரன்சுபோன்ற மகா சபைகளாகிய இராஜரீகக்களங்களில் நின்று பேசுவதினாலும், சமாசாரப்பத்திரிகைகளைப் படிப்பதினாலும், அரசர்களுடையவும், சக்ரவர்த்திகளுடையவும், தேசங்களினுடையவும், தேசாபிமானிகளினுடையவும் சரித்திரங்களைப் படிப்பதினாலேயும் விரிந்து முதிர்ந்து கொழுமைபெறல் வேண்டும். இதுகாரணம் பற்றியே மேல் நாட்டார் அநேக நூற்களை பற்பல காலங்களில், பற்பல பாஷைகளில் பலவேறு நூற்களாக இயற்றி உலகினற்கு உதவி புரிந்து வந்திருக்கிறார்கள்.

அதை நிகர்த்து நமது சொந்த பாஷையாய் முற்றமுடிந்த இலக்கண இலக்கிய வமைதிவாய்க்கப்பெற்றதாய் படித்தறிவதற்கினியதாயுள்ள தமிட்பாஷையிலும் புதியமுறையில் அத்தகைய நூற்கள் எழுதி வெளியிடவேண்டியதவசியமென்றே ஆன்றோர் பலர் எண்ணுகிறார்கள். இத்தகைய நூற்களால் விளையும் நன்மைகள் பல. அவற்றுள் முக்கியமானவை மூன்றாகும், ஒன்று தமிட்பாஷையில் நல்ல வசனநடை யேற்படுவதும், இரண்டாவது இராஜாங்கவமைப்பும், முறைகளுமின்னதென தெரிந்துகொள்வதும், மூன்றாவது மந்தபக்குவமுடையார்க்கு நீதிகள் எளிதிற்படும்படி செய்வதுமவசியமென்றே ஆன்றோர் பலர் எண்ணுகிறார்கள். செய்யுள் நடையிலெழுதப்படும் நூற்களைக் காட்டிலும் வசனநடையி லெழுதப்படும் நூற்கள் சொற்பெருக்கமுடையனவாயும், எளிதில் விளங்கக் கூடியனவாயுமிருப்பதனால் சிறிது கல்வியுடையாரும் எளிதில் படித்தறியக்கூடிய தகுதிபெற்றிருக்கின்றன. இதனை திருஷ்டாந்தத்தால் விளக்குமிடத்து செய்யுள் நடையைக் கற்கண்டுக்கும் வசன நடையை அதன் பாகுக்கும் ஒப்பிடலாம்.

ஆகவே, தற்சமயம் பொதுஜன அறிவு விருத்திக்கு வசன நூற்களை யெழுதி வெளியிடுவதும் ஆன்றோர் கடமைகளிலொன்றாகும். அதிலும் இராஜவிசுவாசம் இந்தியர்களாகிய நம்முடன் கூடப்பிறந்தே வளர்ந்து வருகிறதானாலும் நம் சக்ரவர்த்தியவர்களின் சரித்திரத்தை படிப்பதால் அவரிடத்தில் அன்பும், அவருடைய நல்ல குணங்களையும் திருவாக்கியங்களையும் கேட்பதால் உயர்நடையும், உண்மையும், தைரியமும் விருத்தியாகி தேசத்திற்கு நன்மை பயக்குமென்பது திண்ணம். அதை யொட்டியே "திருவுடை மன்னரைக்காணில் திருமாலைக்கண்ட தொக்கும்." எனப் பெரியோர் கூறியிருக்கின்றனர்.

இப்புத்தகத்தைப் பள்ளிக்கூடமாணவர்கள் படிப்பதால் அவர்களுக்கு இராஜபக்தியும் ஐரோப்பிய பிரஜைகளிடத்தும், அன்பும், விசுவாசமும், உண்டாகுமென்பது திண்ணம். இப்புத்தகத்தை அச்சிடுவதற்கு பொருளுதவி செய்தவர்களும் கருணைநிதியாய் விளங்குபவர்களுமான திருவாவடுதுறை, தருமபுரம் ஆதீன மஹாசந்நிதானங்களின் திருவடிகட்கு எமது சாஷ்டாங்க வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இயற்கையாய் நமக்குள்ள இராஜபக்தியாலும், தேசாபிமானத்தாலும் நம் சிற்றறிவிற் கெட்டியவரையில் இச்சரித்திரத்தை எழுதமுன்வந்தோம். இதிற்காணப்படும் சொற்குற்றம், பொருட்குற்றம், வாக்கியக்குற்ற முதலிய எல்லாகுற்றங்களையும் அறிவிற்சிறந்த பெரியோர்கள் பாராட்டாமல் குணங்களைமட்டும் கொண்டு எம்மைக் கடைக்கணித்தருள்வார்களென்ற முழுநம்பிக்கையுடன் இதை வெளியிடத்துணிந்தனம்.

தஞ்சாவூர்,
1—1—1913.

சிவ. மா. நாராயணசாமி செட்டி,
சுதேசமித்திரன் ஏஜண்டு.

# அட்டவணை.


| அத்தியாயம். | உட்பிரிவு. | விஷயங்களின் தலைப்புகள். | பக்கம். |
|---|---|---|---|
| | 1 | மிஸ்டர் K. C. சுப்பிரமணியன் பாரிஸ்டர் | |
| | 2 | அட்லா அவர்களின் சாற்றுரை இங்கிலீஷ் | iii |
| | | முன்னுரை ... | iv |
| | 3 | அட்டவணை ... | viii |
| 1 | | லண்டன் நகரம் ... | 1 |
| 2 | | இங்கிலீஷ் இராஜவம்சம் ... | 5 |
| | 1 | இங்கிலீஷ் பாஷையினுற்பத்தி ... | 8 |
| | 2 | இங்கிலீஷ் ராஜவம்ச அட்டவணை ... | 10 |
| 3 | | ஜார்ஜ் மன்னரின் இளமைப் பருவம் ... | 12 |
| 4 | | ஜார்ஜ் மன்னரின் யௌவனம் ... | 16 |
| 5 | | மேரி ராணியாரின் சரித்திரம் ... | 19 |
| 6 | | ஜார்ஜ் மன்னரின் விவாக மஹோற்சவம் | 28 |
| 7 | | ஜார்ஜ்மன்னர் இளவரசுப்பட்டம்பெற்றது | 29 |
| 8 | | பொதுவிஷயங்களில் ஊக்கம் ... | 33 |
| 9 | i | ஜார்ஜ் மன்னரின் சுற்றுப் பிரயாணம் ... | 38 |
| | ii | சென்னைக்கு விஜயம் செய்தது ... | 43 |
| | iii | கில்டு ஹாலில் இளவரசர் பேச்சு ... | 50 |
| | iv | இங்கிலீஷ் ராஜ்பத்தின் பெருமை ... | 52 |
| | v | இந்தியருக்கனுப்பிய செய்தி ... | 54 |
| 10 | i | லண்டன் மகுடாபிஷேகம் ... | 55 |
| | ii | முடிசூட்டு வைபவம் ... | 61 |
| 11 | | சக்ரவர்த்தியின் குணாதிசயம் ... | 62 |
| | | சக்ரவர்த்தியின் குடும்பப் படம் | |
| 12 | i | சக்ரவர்த்தியின் குடும்பம் ... | 65 |
| | ii | அயர்லாண்டுதேச யாத்திரை ... | 66 |
| | iii | இளவரசரின் சரித்திரம் ... | 68 |

| | | | |
|---|---|---|---|
| 13 | i | ஜார்ஜ் சக்ரவர்த்தியின் ஜாதகம் ... | 70 |
| | ii | ரேகை சாஸ்திரம் ... | 73 |
| | iii | அஸ்தரேகைக் குறிகள் ... | 74 |
| | iv | இந்திய ஆபரணங்கள் ... | 77 |
| 14 | i | டில்லிமாநகரின் பூர்வம் ... | 81 |
| | ii | டில்லி பட்டணத்தின் பூர்வச் சின்னங்கள் | 84 |
| | iii | ஜார்ஜ் சக்ரவர்த்தி வருகை ... | 87 |
| | | தர்பார் காம்புகள் ... | 88 |
| | | தர்பார் கிரீடமும் சிம்ஹாசனமும் ... | 90 |
| 15 | i | டில்லி மகுடாபிஷேகம் ... | 91 |
| | ii | சிம்ஹாசனப் பேச்சு ... | 92 |
| | | இராஜ விளம்பரம் ... | 95 |
| | | தர்பார் நன்கொடைகள் ... | 96 |
| | | டெல்ஹி தலைநகரமானது ... | 99 |
| | | தர்பார் விருந்தாடிகள் ... | 100 |
| | | வேடிக்கை விநோதங்கள் ... | 101 |
| | | ராஜ விருந்தாடிகள் ... | 102 |
| 16 | i | இராஜ பக்தி ... | 103 |
| | ii | மகுடதாரண வைபவம் ... | 104 |
| | iii | வாழ்த்து தந்திகள் ... | 105 |
| | iv | கல்கட்டாவில் சக்ரவர்த்தி ... | 106 |
| | v | இந்தியாவின் எதிர்காலம் ... | 110 |
| | vi | முடிவுரை ... | 112 |
| | vii | பிழைதிருத்தம் ... | 113 |

# பிழை திருத்தங்கள்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 18 | இங்கிருக்கும் | அங்கிருக்கும் |
| | 19 | அகலமுடையதாயிருக்கிறது | அகலமுடையதாயிருக்கின்றன. |
| 5 | 3 | மேசரும் | மேசலாம் |
| | 4 | ரூ. 20 | 22 பவுன்கள் |
| | 5 | ரூ. 350, 500 | 35 40 பவுன்கள் |
| 6 | 17 | ஜாதியார் | ஜாதியாராக |
| | 26 | பாத்தியமுண்டு | பாத்திய முண்டென்பன |
| 7 | | அரசனுகவிருந்தான் | அரசனுக ஆட்சிபுரிந்து வந்தான் |
| 8 | 13 | ஸ்தாபித்தார் | ஏற்படுத்தினர் |
| 16 | 4 | எவ்வர்ணம் | மெயளவணம் |
| 23 | 13 | நிச்சயிக்கப்பட்டது. | எண்ணமுண்டாக |
| 29 | | மன்னரின் | மன்னர் |
| 33 | | விரும்பு | விருப்பு |
| 43 | 18 | சமுத்துரம் | சமுத்திரம் |
| 53 | 16 | 80 | 60 |
| 54 | 14 | தெறிந்து | தெரிந்து |
| 64 | 14 | நடைபெற்றதெல்லாம் | நடைபெற்ற காலமுழுதும் |
| 73 | 32 | 1153 | 1853 |
| 84 | 1 | சின்ன்ங்கள் | சின்னங்கள் |
| 96 | 16 | இராஜகீதம் | இராஜகீதங்கள் |



**GEORGE V AND QUEEN MARY**

5வது ஜார்ஜ் சக்கிரவர்த்தியும் மேரி ராணியும்

THE GUARDIAN PRESS MADRAS

# ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தி சரித்திரம்.

## முதலாவது அத்தியாயம்.

### லண்டன் நகரம்.

நமது சக்கிரவர்த்தியின் சரித்திரத்தை எழுதப்புகுந்த நாம் முதலில் சக்கிரவர்த்தி வசிக்கும் நகரத்தின் சிறப்பைக்கூறி வம்ஸ முதலியவைகளைக் கூறுவது முறையாதலின் முதலில் **லண்டன்** நகரச்சிறப்பை சிறிது கூறுகிறோம்.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட அண்டகோடிகளில் ஒன்றாகி சிரேஷ்டமாய் விளங்குவது நமது **ஏஷியா** கண்டம். அதன் பெரும் பிரிவினையாகிய பரதகண்டமென்பதும் மானிடர்க்குப் பிறப்பிடமும், மறைகளுக்கு உறைவிடமும், மகான்களுக்கு சிறப்பிடமுமான மகாபுராதன இந்திய தேசத்தை ஆளும் சக்கிரவர்த்தியாக 5-வது ஜார்ஜ் சக்ரவர்த்தி விளங்குகிறார். அம்மஹாசக்ரவர்த்தியான இங்கிலீஷ் **அரசர்** தற்கால நாகரீகத்தில் பிரசித்திபெற்று விளங்கும் ஐரோப்பா கண்டத்தின் **பிரிட்டிஷ்–அயில்ஸி**லுள்ள **இங்கிலாண்டு** தேசத்தின் இராஜதானிப்பட்டணமாகிய **லண்டன்** மாநகரில் வசிக்கிறார். அம்மகா நகரமாகிய **லண்டன்** பட்டணம் இப்போது உலகத்திலுள்ள பட்டணங்களிலெல்லாம் சிறந்ததும் பேரழகு வாய்ந்ததுமான நிலமகள் முகமோ திலகமோ, என்று கண்டோர் கொண்டாடுஞ் சிறப்பும், செல்வமும் வாய்ந்த ஒரு புராதன பட்டணமாயிருக்கிறது. இப்பட்டணம் உலகத்தில் பிரசித்திபெற்ற **தேம்ஸ்** நதியின் வடகரையில் கட்டப்பட்டிருக்கிறது.

இப்பட்டணம் சுமார் 1500 வருஷங்களுக்கு முன்னமேயிருந்ததாக சரித்திராசிரியர்கள் கூறியிருக்கிறார்கள். இப்பட்டணம் இந்தியாவையும் உலகத்தில் 5-ல் ஒரு பாகமுள்ள ராஜ்யங்களையும் 6-ல் ஒருபங்குள்ள ஜனங்களையும் ஆளும் **பிரிட்டிஷ் அரசர்** தங்கும் பாக்கியம் பெற்றிருக்கிறது அம்மகாராஜா வசிக்கும் அரண்மனைக்கு, **பக்கிங்ஹாம் அரண்மனை** என்று பெயர். இதைச் சுற்றிலும் அநேக அரண்மனைகளுண்டு. அவ்வரண்மனைகளின் அமைப்பையும், சிறப்பையும் நம்மால் யெழுதிமுடியாது. இங்குள்ள ஒரு இரத்தினத்தின் விலையைக்கொண்டு ஒரு பெரிய தேசத்தை விலைக்கு வாங்கலாம். அப்படிப்பட்ட விலைமதிக்கப்படாத இரத்தினங்களும், பொருள்களும், எவ்வளவோ குவிந்திருக்கின்றன. பற்பலதேச அரசர்களும், தேசாதிபதிகளும், பிரபுக்களும், பிரஜைகளும் பாதகாணிக்கையாக வைத்த பொருள்கள் மட்டிலடங்காதனவாம். அவைகளரசருக்கே சொந்தம்.

கிறிஸ்தவ ஆலயங்களில் மிகப் பெரிதும் அழகும் புராதனமுமான "வெஸ்டுமினிஸ்டர் ஆபே" என்னும் அதி உன்னதமானதேவாலயமிருக்கிறது. இங்கிருக்கும் சிலபெரிய தெருக்கள் சுமார் 20 மயில் நீளமும், அதற்குப்போதுமான அகலமுமுடையதாயிருக்கிறது. தெருக்களின் மத்தியில் ரயிலும், பக்கங்களில் டிராம்வண்டிகளும், மோட்டார்வண்டிகளும், குதிரைசாரட்டுகளும், பைசிக்கிள்களும், ஜனநடப்புகளும், தனித்தனியாய் பிரிக்கப்பட்டிருப்பதுடன், தந்திமரங்களும், டெலிபோன் மரங்களும் இருந்துகொண்டிருக்கின்றன. இப்பட்டணம் சுமார் 200 சதுரமையிலிருக்கும். 70-லெக்ஷம் ஜனங்கள் வசிக்கிறார்கள். லண்டன் பாலத்

னைச்சுற்றி Cathedral of St. Paul's கேதிர்டிரால் ஆப் செண்ட் பால்ஸ் என்னும் கிறிஸ்துவாலயமுமிருக்கிறது. இந்நகரம் கப்பல் போக்கு வரவுக்குத் தகுந்த தேம்ஸ் நதிக் கரையிலமர்ந்திருப்பதால் வியாபார வசதிகளும் கைத்தொழிற் பெருக்கங்களும் ஏராளமாய் விருத்தியடைந்திருக்கின்றன. கடல் மார்க்கமாயும் தரை மார்க்கமாயும் நடக்கும் பெருத்த வியாபாரங்களே லண்டனை பெருத்த ஐஸ்வரியமுள்ள நகரமாக செய்திருக்கின்றன. இந்நகரத்திலுள்ள இயந்திரவேலைச் சாலைகளில் வேலைசெய்யும் ஜனங்கள் அந்நகரத்தில் வசிக்க இடமில்லாமல் அதற்கு வெளியே தூரத்தில் வசிக்கிறார்கள்.

இந்நகரத்தில் அழகும் பலமும் வாய்ந்த விசித்திரமான கட்டிடங்களும், தேவாலயங்களும், "பராளும் மன்றில்" என்ற திராவிடமொழியினின்றும் மருவிய, பார்லிமேண்ட் என்னும் பொருக்குறிய கட்டிடங்களும் மாடமாளிகை கூட கோபுரங்களும் எத்தனையோ விருக்கின்றன. இங்கு சுமார் 20 அடிக்கு வரையிலுள்ள பெத்தை வீடுகளிருக்கின்றன. உலகத்திலுள்ள மியூஸியங்களெல்லாவற்றையும் விட மேலானதும் பெரிதும் விலைபெற்றதுமான கண் காக்ஷிசாலைகள் பல விருக்கின்றன. அவைகளிலுள்ள பொருள்கள் பல கோடிக்கணக்கான மதிப்புள்ள வைகளாயிருக்கும். நகரத்தினிடையிடையே சிங்காரவனங்களும் பங்களாக்களும் இராஜ சிங்காரவனங்களுமிருக்கின்றன. இதனழகையும் ஐஸ்வரியத்தையும் யெழுதினல் விரியும். இதற்கென்றே தனியாய் தமிழில் ஒரு புஸ்தகமெழுதப்பட்டிருக்கிறது. அதைப்படித்தால் அதன்பெருமை நன்றாய்த்தெரியும். இதையல்லாமல் அங்கே கோடீஸ்வரர்களான அநேகபிரபுக்களும்,

மகாபுத்திமான்களும், ராஜதந்திரிகளும், ஞானிகளுமிருக்கிறார்கள்.

இங்குள்ள ஜனங்கள் நல்ல நாகரிகமுள்ளவர்கள்; பெரும்பாலாருக்கு ரொட்டி, வெண்ணெய், மாம்ஸம், பழங்கள், சாராய முதலியவைகளே விசேஷ ஆகாரமாயிருக்கிறது. சிலர் அரிசி அன்னமும், சாம்பார், ரச முதலிய இந்திய மாதிரி ஆகாரங்களையும் சாப்பிடுகிறார்கள். இங்கும் சமஸ்கிருத வித்வான்களும் தமிழ் வித்வான்களுமில்லாமற் போகவில்லை. பல பாஷாவித்துவான்களுமிருக்கிறார்கள். பல மத ஆராய்ச்சி சங்கங்களுமிருக்கிறது. இங்கே அநேக ஆங்கிலேயர்கள் மாம்ஸ பக்ஷணம் மதுபானம் பண்ணுதவர்களாய் Vegetarians, சைவர்களாயிருக்கிறார்கள். இந்தியர்கள் லண்டனுக்குப்போனால் அங்கு தங்குவதற்கு **மிடில் டெம்பிள்** என்னுமிடத்தை பிரத்யேகப்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கு தனியிடங்களும் சிலதனியான பெரிய விடுதிகளுமிருப்பதாக அறிகிறோம். லண்டனுக்கு வரும் இந்து பிராமணர்களும் மற்றவர்களும் ஜாதி மத ஆசாரங்களுக்கு விரோதமின்றி வசிக்கவேண்டிய வசதிகளிருக்கிறது. தற்காலம் சுமார் மூவாயிரம் இந்தியர்களுக்கதிகமாக இங்கிலண்டில் வசிக்கிறார்கள். லண்டனில் எந்த தேசத்தாரும் எந்த மதஸ்தரும் தாராளமாய் அங்கே போய் வசிக்கலாம். ஆனால் அந்நியர் அத்தேசத்தில் நிலையாய்த் தங்கி வசிக்கிறவர்கள் அல்லது குடியேறினவர்கள் அதிகமாயிருப்பதாகத் தெரியவில்லை.

இனி லண்டனுக்குப் போகும் வழியைப்பற்றி பேசுவோம். **பம்பாய்** துறைமுகத்தில் கப்பலேறினால் மெயில் ஸ்டீமரில் 16-ம் நாள் லண்டன் நகர்போய்ச் சேரலாம். பம்

பாயைவிட்டு ஸ்டீமர் ஐந்தாம் நாள் ஏடன் நகர் போகும். அங்கிருந்து சுயேஸ்காலுல் வழியாய் ஜிப்ரால்டர் போய் அங்கிருந்தபடி லண்டன் நகர்போய்ச் சேரும். 3-வது வகுப்பு பாசஞ்சருக்கு சுமார் ரூ 120-ம், 2-வது வகுப்புக்கு ரூ 350-ம், முதல் வகுப்புக்கு ரூ 500 சொச்சமும் ஸ்டீமர் சார்ஜு ஏற்பட்டிருக்கிறது. கப்பலில் இஷ்டப்படி பலவித சவுகரியங்களும் அமைக்கப்பட்டிருக்கும்.

---

## இரண்டாவது அத்தியாயம்.

### இங்கிலீஷ் ராஜவம்ஸம்.

இப்போது நம்மை ஆண்டுவரும் அரசனை பிரிட்டிஷ் அரச னென்றும், இங்கிலீஷ் அரச னென்றும் அழைக்கிறார்கள். அவருடைய ராஜ்யத்திற்கு "கிரேட்பிரிட்டன்" என்று பெயர். அதில் இங்கிலாண்டு அண்டு வேல்ஸ், ஸ்காட்லாண்டு, அயர்லாண்டு என்ற மூன்று தேசங்களுமடங்கும். இப்போது பிரிட்டீஷ் அரசருக்கு அநேக ராஜ்யங்கள் சேர்ந்து, அவைகள் குடியேற்ற நாடுகளென்றும், ஆதரவு பெற்றநாடுகளென்றும், சிநேகபான்மையான நாடுகளென்றும், அடைக்கலம்புகுந்த நாடுகளென்றும், பல வகையாகப்பிரிக்கப்பட்டு உலகத்தில் 5-ல் ஒரு பாகம் சொந்தமாயிருக்கிறது. அவைகள் ஆஸ்டிரேலியா, கெனடா, நேப்பால், தென் ஆபிரிக்கா, இந்தியா, பர்மா, சிலோன் ஏடன் முதலிய பல தேசங்களாகும். இவைகள் பிரிட்டிஷ் அரசரின் கீழ் ஆளப்படுகின்ற வென்றாலும், அரசரின் கீழ் பார்லிமெண்டும் லார்டுசபையும் உதவியாயிருக்கின்றன. அப்படிப்பட்ட அநேக ராஜ்யங்களை ஆளும் ராஜவம்ஸத்தின் சரித்திரத்தை கீழே விவரித்திருக்கிறோம்.

சுமார் 2000 வருஷங்களுக்குமுன் **பிரித்தானியர்** என்னும் ஜாதியார் இங்கிலாண்டில் வசித்து வந்தார்கள். அக்காலத்தில் **பிட்ஸ்** என்னும் ஜாதியார் **ஸ்காட்லாண்டு** தேசத்தில் வசித்தார்கள். **பிரித்தானியரின்** ஒருவகுப்பான ஜாதியாருக்கு ஸ்காட்ஸ் என்று பெயர். **பிட்ஸ்** ஜாதியாருடன் **ஸ்காட்டி**யரும் வசித்தார்கள். அந்தச் ஜாதியாரின் பெயரே அந்த தேசத்துக்கும் கொடுக்கப்பட்டு **ஸ்காட்லண்டு** என்ற பெயர் வழங்கிவருகிறது.

இந்த தேசங்களை கி. பி. 300 வருஷங்கள் வரை **ரோமானியர்** ஆண்டார்கள். அப்போதிய பிரதான பட்டணங்கள் **லண்டன், யார்க், சேஸ்டர், லிங்கான்** என்பவைகள். அந்தக்காலத்திலுங்கூட லண்டன் வியாபாரஸ்தலமாயிருந்தது. கி. பி. 450-ம்வருஷத்தில் ரோமானியர் பிரிட்டானியரிடம் கிரேட்பிரிட்டனை விட்டுவிட்டார்கள். **ஜட்லாண்டு** என்னுந் தீபகல்பத்தில் இப்போது **ஜெல்லஸ்பிக்** என்று வழங்கும் **இங்கில்லாண்டு** என்னுமிடத்திலிருந்து **ஆங்கில்ஸ்** என்னும் ஜாதியார் **ஹானேவர்** என்னுமிடத்தில் வசித்துவந்தார்கள். முதலில் ஆங்கில் ஜாதியார் இப்போது இங்கிலாண்டு என்று சொல்லுமிடத்தை ஜெயித்து அதற்கு தம்தேசத்துப் பெயராகிய இங்கிலாண்டு என்ற பெயரை வைத்தழைத்தார்கள். ஆனால் இவர்கள் **ஜேர்மன்** தேசப்பூர்வீகர்கள்.

அவர்களின் கொள்கைகள் மனிதன் சுயேச்சையுள்ளவன். அவனுக்குச் சுவாதீனமாய்க் கொஞ்சம் நிலமிருக்கவேண்டும். அவர்களுக்குத் தலைவர்களுண்டு. அத்தலைவர்களுக்கு நிலத்தில் ஒருவித பாத்தியமுண்டு. அவர்களுக்கு

**கோரல்ஸ்** என்று பெயர். அதை இப்போது **ஏரல்** என்று வழங்குகிறார்கள்.

தங்களுக்கு வேண்டிய சட்டதிட்டங்களை பெரியமரத்தின் கீழிருந்தும், பெரிய மேட்டுப்பக்கங்களிருந்தும் நிர்மாணித்துக்கொண்டார்கள். இந்தக் கூட்டங்களில் சிவில் கிரிமினல் வியவகாரங்களை முடிவுசெய்து கொள்வார்கள். அக்காலத்திலும் தலைவர்களை தாங்களே தெரிந்தெடுத்துக் கொள்வது வழக்கம்.

**மதம்:**—இங்கிலீஷ்காரர்கள் முதலில் **ஹீத்தன்** என்னும் ஜாதியாராயிருந்தார்கள். அவர்கள் சண்டை ஆயுதங்களையும், இடி, மின்னல், காற்று, புயல், மழை, இவைகளைக் **கடவுளாக** வணங்கிவந்தார்கள்.

அவர்கள் முனைந்து சண்டைபோடுவதிலும், மதுபானஞ் செய்வதிலும், அதிகப்பிரியமுள்ளவர்களாயிருந்தார்கள். ஜர்மன்தேசத்துப் பிரஜைகளான **ஆங்கில்ஸ், ஜூட்ஸ், ஸாக்ஸன்ஸ்,** என்னும் ஜாதியார்கள் திரும்பிவந்து கடற்கரை யோரங்களில் 15-ம் நூற்றாண்டில் தங்கள் வாசஸ்தானங்களை யேற்படுத்திக்கொண்டார்கள். அந்த விடங்கள் **கேண்ட், நார்த்ஹம்பிரியா, மேரிஷியா, வேஸக்ஸ்** என்பவைகளை முக்கியமாய்க் கொண்டது. 6-ம் நூற்றாண்டில் ரோமாபுரியிலிருந்து சிலகிருஸ்துமத போதகர்கள் வந்து நாளாவட்டத்தில் இங்கிலீஷ்காரர்களை கிருஸ்தவர்களாக்கினார்கள்.

முதல் முதல் கி. பி. 827-ம் வருஷத்தில் **எஸ்கன்** தேசத்துக்கு அரசனாகவிருந்த **எக்பர்ட்டு** என்பவன் இங்கிலீஷ் கனுலிலிருந்து பிர்த்தாப் போர்த்துவரையிலுள்ள நாடுகளுக்கு அரசனாகவிருந்தான்.

**டேன்மார்க்கு நார்வே** தேசங்களிலிருந்து **தானியர்** என்னும் கடற் கொள்ளைக்காரர்கள் வந்து அங்குள்ள பாதிரி மார்களைக் கொல்வதே தொழிலாகக் கொண்டிருந்தார்கள். பிறகு ஸ்திரமாகவே அந்நாட்டில் வசிக்க ஆரம்பித்ததும் அவர்களும் கிருஸ்தவர்களானார்கள். பிறகு கிருஸ்த்தவர் களே அந்த ராஜ்யத்தை ஆளவேண்டியதென்றும் ஏற்படுத் திக்கொண்டார்கள்.

இங்கிலீஷ் பாஷை:—**ஜாரோ** வென்னுமிடத்தில் ஒரு ஆசிரமத்தில் "**பேதா**" என்னும் சன்னியாசி கி. பி. 683-ம் வருஷம் முதல் 735-ம் வருஷம் வரையில் வசித்திருந்தார். இவரே இங்கிலீஷ்பாஷைக்கு முதல் ஆசிரியராகவிருந்தவர். இங்கிலீஷ்பாஷையில் பல புஸ்தகங்களை எழுதி அதற்கு ஒரு அமைப்பை ஸ்தாபித்தார். இங்கிலீஷ் பாஷைக்கு தாய்ப் பாஷையாயுள்ளது "**லாட்டின்பாஷை**" என்று சொல்லப் பட்டாலும் அப்பாஷையில், **லாட்டின், கிரீக், ஜெர்மன், பிரா ஞ்சு, இந்துஸ்தான், தமிழ்** முதலிய அநேக பாஷைகள் கலந் திருக்கிறன்றன. உலகத்திலுள்ள பாஷைகளுக்கெல்லாம் தாய் பாஷையாயுள்ளது, சமஸ்கிருதமும், தமிழ்பாஷையுமே யாகும். சமஸ்கிருதத்துக்கு வடமொழியென்றும், தமிழு க்கு தென்மொழியென்றும், பெயருண்டு. இவ்விரண்டு பா ஷைகளிலிருந்தும் உலகத்திலுள்ள சகல பாஷைகளும் பிரி ந்து திரிபாகி வேறு பற்பல நாமம் பெற்று விளங்கிவருகின் றன, ஸ்ரீபரசிவமாகிய **சிவபெருமான்** ஆதியில் **பாணினி முனிவருக்கு** வடமொழி இலக்கணத்தையும், **அகஸ்திய** முனிவருக்கு தென்மொழி இலக்கணத்தையு முபதேசித்தா ரென்றும், அநாதியாய் இவ்விரண்டு பாஷைகளும் சிவபெரு

மானுடைய கையிலிருக்கும் உடுக்கையிலிருந்து பிறந்தன வென்றும், சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதை **தியாசபி** மதத்தலைவரான **ஸ்ரீஅன்னிபெசண்டம்**மையார் ஒரு பெரிய பிரசங்கத்தில் விவரித்துக் கூறியிருக்கிறார்.

உலகத்தையும் அதில் வியாபித்திருக்கும், ஜனங்கள், மதம், பாஷை, பொருள் முதலிய எல்லாவற்றிற்கும், மூலாதாரமாயிருப்பது, இந்தியாவும், இந்தியரும், இந்தியமதமும் இந்தியபாஷைகளும், இந்தியப்பொருள்களுமே யாகும்.

இங்கிலீஷ் பாஷா வித்வான்கள் அப்பாஷையிலின்னும் புதிய வார்த்தைகளைச் சேர்த்துக்கொண்டே வருகிறார்கள் அதில் சமஸ்கிருத பதங்களே வெகுவாய் திரிபுபெற்று அமைந்து கிடக்கின்றது.

இராஜவம்சம்:—இங்கிலீஷ் ராஜவம்ஸம் நேற்று இன்று உண்டானதல்ல. சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமே உண்டாகிவிட்டது. அவர்களில் முதலாவது அரசன் எக்பர்டு எனப்படுவார். அவருடைய காலமுதல் நாளது வரையில் அரசர்கள் செங்கோன் முறையாய் பிரஜைகளின் நிலைமைக்கும், முற்போக்குகளுக்கும், தகுந்தபடி சுதந்தரங்களைக் கொடுத்து ஆட்சிபுரிந்து வந்திருக்கிறார்கள். இனியும் அதைதொடர்ந்தே நடத்துவார்களென்பதிற் தடையில்லை. தேசசரித்திரங்களைப் படித்தவரையில், இங்கிலீஷ் அரசர்களும், அரசிகளும், மகாபுத்திசாலிகளென்பதையும், தருமசீலர்களென்பதையும், மறுக்கமுடியாது. நமது சக்ரவர்த்தியின் லண்டன் மகுடாபிஷேகத்தைப்பற்றி யெழுதிய **ஜேகத் குருஸ்ரீஸ்ரீ ரிங்கேரி சங்கராசாரிசுவாமிகள்** பிரிட்டிஷ் ஆளுகை **இராமராஜ்யம்** போலிருக்கிற தென்று கூறியிருக்கிறார்கள். ஆகையால்தன் பெருமையை நாமொருமுறை கூறுவது அனவசியமாகும். தவிர இங்கிலீஷ் ராஜவம்ஸத்தை அடியிற் சுருக்கி அட்டவணையாக வெழுதியிருக்கிறோம்.

## இங்கிலீஷ் இராஜவம்ஸத்திய அட்டவணைச்சுருக்கம்.

| வரிசை நம்பர். | அரசன் பெயர். | வம்ஸம். | ஆட்சிகாலம். ஆரம்பம் | ஆட்சிகாலம். முடிவு | விசேஷக்குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| 1 | எக்பர்ட்டு முதல் அரசன் | பூர்வ இங்கிலீஷ் அரசர்களும் தானியர்வம்ஸ அரசர்களுமாக 20 பட்டம் அரசாட்சி செய்தார்கள். | 827 | 1066 | கி. பி. |
| 2 | வில்லியம் I. | நார்மன் வம்ஸத்து அரசர்கள் 4 பட்டம். | 1066 | 1154 | |
| 3 | ஹென்ரி II. | பிளான்டா ஜெனிட் ராஜவம்ஸம். | 1154 | 1399 | |
| 4 | ஹென்ரி IV. | லான்காஸ்டர் வமிசத்து அரசர்கள் 3 பட்டம். | 1399 | 1461 | |
| 5 | எட்வர்டு IV. | யார்க்கு வம்ஸம் 3 பட்டம். | 1461 | 1485 | |
| 6 | ஹென்றி VII. | டியூட்டர் வம்ஸத்து அரசர் 5 பட்டம். | 1485 | 1603 | |
| 7 | ஜேம்ஸ் I. | ஸ்டூவர்டு வம்ஸத்து அரசர்கள் 2 பட்டம். | 1603 | 1649 | ஸ்காட்லாண்டு தேசத்து 6-வது ஜேம்ஸ் தலைவெட்டுண்டான். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | பிரஸிடெண்டு | குடியரசு. | 1649 | 1660 | |
| 9 | சார்லஸ் II. | ஸ்டூவர்டு வம்ஸம் மறுபடியும் பட்டம் பெற்ற அரசர்கள் 5 பேர்கள். | 1660 | 1714 | |
| 10 | ஜார்ஜ் I. | ஹானோவர் வம்ஸத்து அரசர் 6 பட்டம். | 1714 | 1901 | நிகழ்கால ராஜவம்ஸம் தொடருகிறது |
| 11 | விக்டோரியா | மேற்படி வம்ஸத்தின் கடைசி அரசி. | 1837 | 1901 | |
| 12 | எட்வர்டு VII. | ஸாக்ஸ்கோபர்க்கு வம்ஸத்து அரசர்கள். | 1901 | 1911 | |
| 13 | ஜார்ஜ் V. | ஷை வம்ஸத்து 2-வது அரசர். | 1911 | | பிரிட்டிஷ் மூன்றுவது சக்ரவர்த்தி. |

குறிப்பு:—Victoria=ஜெயித்தவள். விக்டோரியா என்பது லாட்டின்பாஷை. விக்டோரியா மகாராணியார் மஹாஅதிர்ஷ்டசாலியாயும், இலட்சணவதியாயுமிருந்து, அனேகராஜ்யங்களை இங்கிலீஷ் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டதுமன்றி 64-வருஷம் ராஜ்யபாரம் செய்துவந்தார்.

Edward = Happy keeper = சந்தோஷத்தலைவன்.
எட்வர்டு என்பது ஸாக்ஸன் பாஷையிலுள்ளது

George=A husband man=புருஷோத்தமன் ஜார்ஜ்என்பதுகிரீகபாஷையிலுள்ளவார்த்தை.

## மூன்றாவது அத்தியாயம்.

### ஐந்தாவது ஜார்ஜ் மன்னரின் இளமைப்பருவம்.

பாரதவருஷ மென்றும் பரதகண்டமாகிய இந்திய தேசத்தை ஆட்சிபுரிந்த **ஏழாவது எட்வர்டு சக்ரவர்த்திக்கும் அலெக்சாண்டிராஇராணியாருக்கும்** 1865-ம் வருஷம் ஜூன்மீ 3உ **மல்பரோ அரண்மனையில்** இரண்டாவது புத்திரன் ஜெனனமானார். ஒரு மரமும் தோப்பல்ல, ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல என்னும் பழமொழிக்கிடமின்றி இறைவன் அருளால் இரண்டாவது இராஜகுமாரனும் ஜனித்ததைக் கேட்டவுடன் **விக்டோரியா மகாராணியும்** பிரஜைகளும் மற்றவர்களும் சந்தோஷசாகரத்தில் மூழ்கினார்கள்.

பிறகு அக்குழந்தைக்கு அரசர்களும், பிரபுக்களும் சூழ்ந்திருக்க ஜூன்மீ 7உ **வின்ஸ்டர் அரண்மனையில்** மிக வைபவமாக தங்கத் தொட்டியில் வைத்து ஞானஸ்தானம் செய்யப்பட்டது. அப்போது "**ஜார்ஜ் பிரடரிக்**" என்ற நாமம் சூட்டப்பட்டது. இப்பிள்ளையை மால்பரோ அரண்மனையிலும், **ஒயிட்** தீவிலுள்ள **ஆஸ்போான் மாளிகையிலும்**, மழைக் காலத்தில் **சண்டிரிங்காம்** என்னும் விசித்திரமாளிகையிலும், நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். இவரது தந்தை **ஏழாவது எட்வர்டு மன்னர்** பிள்ளைகளைப் பரிபாலிக்கும் விதத்தைப்பற்றியும், கல்வியைப் பற்றியும் அதிகமான கவலையை ஏற்றுக்கொண்டார். ஏழு வயதானதும் கப்பற்படையிற் சேர்க்கப்பட்டு, போர்த்தொழிலிற் பயிற்றுவிக்கப்பட்டார்.

**டென்மார்க்கு** தேசத்து அரசருடன் "**பர்ன்ஸ்டார்ப்**" என்றவிடத்தில் பெற்றோர் மத்தியில் நமது **ஜார்ஜ் மன்னர்**

காலங்கழிக்கும் சமயங்களில் அங்குள்ள நதியில், தைரியமாக நீந்துவதும் பயமின்றி தண்ணீரிற் குதித்து மூழ்கிவிளையாடுவது முண்டு. பின்பு இவர் சகோதரனுடன், டார்ட்மௌவுத்தில் நீந்தக் கற்பிக்கப்பட்டபொழுதும் ஜார்ஜ் தான் முதலில் அச்சமின்றிக் குதிப்பது வழக்கம். டென்மார்க்கு தேசத்தில் தந்தை தாயாருடனிருக்கும் பொழுது அவர்களின் நெருங்கிய பந்துக்களான **ருஷியா, ஜெர்மனி**, தேசத்து மன்னர்களும் விருந்தாடிகளாக வந்திருந்தார்கள். அவர்கள் பிள்ளைகளின் குணங்களில் விசேஷத்திருப்தியுடையவர்களாயிருந்தபோதிலும், முக்கியமாக **ருஷிய தேசத்து அரசர் நிக்கல்சுக்கு** ஜார்ஜனிடத்து மிக அன்பும் பிரியமும் உண்டாயின. அதனாலக்குழந்தையுடன் அடிக்கடி விளையாடுவது வழக்கமாகிவிட்டது.

ஜார்ஜ் அரசர் எதையும் துணிந்து செய்யும் சுபாவமுள்ளவர். அவர் காரியத்தை பூராவாய்ச் செய்து முடிப்பார். **"விளையும் பயிர் முளையிலே"** என்றபடி பிற்காலத்திற் பெருங் காரியங்களைச் செய்து முடிப்பாரென்ற தோற்றங்கள் இளம் பருவத்திலேயே விளங்கின. குதிரைச் சவாரி செய்யும் சாமர்த்தியம், இயற்கையாகவே யமைந்திருக்கிறது. அதில் யாரும் நமது ஜார்ஜ் அரசரை வெல்லமுடியாது. அவருக்கு வேட்டையாடுவதிலு மிகப்பிரியமுண்டு. ஒருசமையம் கொடிய வேட்டைநாய்களிருக்குமிடத்துக்கு சவாரிசெய்து திரும்பினர். பனிக்கட்டிக் காலங்களில் அதன்மேல் நடப்பதில் பிரியமுள்ளவராகையால் காலில் ஒரு வகை சருக்கு பூட்சுகளையணிந்து கொண்டு நடப்பதும், ஒருவகை வண்டியை விட்டுச்சென்று சந்தோஷிப்பதும் வழக்கம்.

ஒரு சமயம் கோபன்ஹேகனுக்கு அரண்மனைக் குழந்தைகளெல்லாம் போயிருந்தபோது கடலில் குதித்து விளையாட நினைத்து கடற்றுறைக்குச்சென்றார்கள். அப்போது ஜார்ஜ் வயசிற்சிறிய வராயினும் தைரியத்தில் மூத்தவராய் தொப்பென்று கடலில் குதித்து விளையாடினார். பொதுவாய் இராஜகுமாரர்களுக்கு மகாவித்வரெத்னங்களான கேனன்பர்க், கேனன்தார்வார், ரேவரேன்டு, **W. L.** ஆன்ஸ்லோ இவர்கள் உபாத்தியாயர்களாக நியமிக்கப்பட்டார்கள். அவர்களில் கேனன்டால்டன் நமது ஜார்ஜ் மன்னருக்கு 1871-ம் வருஷத்தில் உபாத்தியாயராக நியமிக்கப்பட்டமையால் அவர் சொற்படி நடந்து வந்ததுமன்றி, உயர்நலக் கல்வியிலும் பயிற்றுவிக்கப்பட்டார். 6-வருஷமானபின் அவரே தலைமையுபாத்தியாயராகவும் விளங்கினர். ஜார்ஜ்மன்னர் சில சமயங்களில்சகோதரருடன் பொதுச்சபைகளுக்குப்போவார். தமயன் கொஞ்சம் கூச்சப்பட்டாலும் தான் விசேஷஊக்கங் காட்டுவதுடன் கீழ்ப்படிவின்றியும் வீற்றிருப்பார். அரண்மனையில் சிறித்த முகத்துடன் சகோதரிகளுடனும் மற்றவர்களுடனும் உலாவுமிவரை பந்துக்கள் (சுறுசுறுப்புள்ள அரசரை) அடிக்கடி தொந்தரவுசெய்கிற குழந்தை என்று சொல்வார்கள். சார்லஸ்கிங்ஸே சன்டிரிங்காம் அரண்மனைக்கு வரும்பொழுது அரண்மனை குழந்தைகளுக்கு வேடிக்கைக் கதைகளை சொல்லிவைப்பார். தமக்குள்ள அபரிமிதமான தாபரசங்கம அறிவைக்கொண்டு அவர்களுக்கும் செவ்வனே போதித்து வந்தார். நம்ஜார்ஜ மன்னருக்கு, குத்து சண்டையில்மிகப்பிரியம். ஒரு சமயம் தாம் ஒளிந்து கண்டுபிடிக்கும் விளையாட்டில் ஒரு நண்பர் தம்மைகண்டுபிடித்தவுடன் கோபம் வந்து கைக்குத்துசண்டைக்கு வருகிறாயா? என்று

கேட்டு அவர் சம்மதித்தவுடன் ஒரு குத்துக்குத்திவிட்டார். அதனால் அவர் நண்பர் வருத்தமடையாமல் இப்போதும் அவர் நண்பராகவே லார்டு சபையிலிருந்து வருகிறார்.

ஜார்ஜ்க்கு பனிரெண்டாம் வயசு முடிந்தவுடன் தமையனுடன் டார்மெத் Dartmuth என்னும் துறைமுகத்தில் பிரிட்டேனியா என்ற பெயருள்ள ஸ்டீமரில் மாலுமிக் கல்வியில தமயனுடன் சென்று அங்கே மற்றைய மாணாக்கர்களுடன் சமமாய் ஊண், உடை, வேலை முதலியவற்றில் வித்யாசமின்றி அவ்வேலைகளின் நுணுக்கங்களையறிந்து தேர்ச்சிபெற்றார். 1880-ம் வருஷம் இவர் கப்பல் மூலமாக ஒரு முறை பூமியை பிரதட்சணம் செய்தார். அக்காலத்தில் உலகத்தைச்சுற்றிவர நான்கு பெரிய ஸ்டீமர்கள் பிரயாணப்பட்டன. அவைகளோடுகூட பூப்பிரதட்சணம் செய்த ஜார்ஜ்மன்னர் தினசரிக்குறிப்பு புஸ்தகமொன்று வைத்துக்கொண்டு, அதில் தாம்கண்ட தேசங்களையும், அத்தேசத்து ஜனங்களின் நடவடிக்கைகளையும், இராஜாங்க முறைமை முதலியவைகளையும், குறித்துக்கொண்டுவந்தார். அதனால் இவ்விராஜகுமாரர்களுக்கு உலகஞான மதிகரித்தது. பிறகு வடஅமெரிக்காவில் டாரன்டோ, கேனடாவிலுள்ள சில பாகங்கள் முதலியவைகளையும் பார்வையிட்டு, அவ்விராஜ்யத்தாருடன் சிநேகஞ்செய்துகொண்டும் ஜென்மதேசம் திரும்பினார்கள்.

இத்துடன் ஜார்ஜ்மன்னரின் இளமைப்பருவ சரித்திரத்தை நிறுத்தி அவருடைய யௌவனத்தில் நடந்ததைக் கூறுவோம்.

## நான்காவது அத்தியாயம்.

### ஜார்ஜ் மன்னரின் யௌவனம்.

நமது **ஜார்ஜ்மன்னர்** 18-வது வயது பூர்த்தியாகி எவ்வர்ணம் அதாவது குமாரப்பருவத்தை யடைந்தார்.

அப்போது அதாவது 1883-ம் வருஷத்திற்கு முன்னமே உலகயாத்திரைசெய்து 3-வருஷகாலம் வெளிநாடுகளில் வசித்து பல அரசருடையவும் அநேக பிரபுக்களுடையவும் புத்திமான்களுடையவும் சிநேகத்தைப்பெற்றுத் திரும்பிவந்தார். பிறகு 1884-ம் வருஷத்தில் கப்பலோட்டும் பரீட்சையில் முதலாவதாகத் தேறினர். பிறகு **ராயல்நேவல் காலேஜில்** சேர்ந்து நல்லபெயர் வாங்கினர்.

1885-ம் வருஷத்தில் பெரியகப்பலுத்தியோகஸ்தருக்குப்பதிலாக நியமிக்கப்பட்டார். மூன்றாவதாகிய "**அலெக்சாண்டிரா**" என்ற ஸ்டீமர் இவர் சிற்றப்பாருடைய கொடிக்கப்பலாயிருந்தது. **ஜார்ஜ்** கப்பலோட்டும் தொழிலிற் விசேஷத் தேர்ச்சியைப்பெற வேண்டுமென்று விரும்பினர். அவ்வாறே தேர்ச்சிபெற்று தானே டார்பிடோ படகை நடத்திப் பெற்றோர்களை மகிழும்படி செய்வித்தார்.

**ஜார்ஜ் மன்னருக்கு** நானாதேசத்து தபால் தலைகளை சேர்த்து வைக்கப் பிரியமுண்டாகி அநேகவிதம் விதமான ஸ்டாம்புகளை சேர்க்க முயன்றார். லண்டனிலுள்ள ஒரு ஆபீஸ் குமாஸ்தா, தம்மிடம் பலவிதமான தபால் ஸ்டாம்புகளிருப்பதாகவும் தேவையுள்ளவர்கள் எந்தச்சனிக்கிழமையிலும் 2-மணிக்குமேல் வந்து வாங்கிக்கொள்ளலாமென்றும் சமாசாரப்பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தார். அதை

கண்ணுற்ற ஜார்ஜ் மன்னர் சாமான்யரைப்போல் அக்குடாஸ் தாவீட்டுக்குச்சென்று தனக்குவேண்டிய அபூர்வமான தபால் தலைகளைமட்டும் வாங்கிக்கொண்டு விலை கொடுத்து திரும்பினார்.

1885-ம் வருஷம் அக்டோபர்மீ த்தில் த்ரஷ் என்ற பீரங்கிப்படையை நடத்துவதில் பழகினார். 1887-ம் வருஷத்தில் விக்டோரியா மகாராணியாருக்கு தங்கஜூபிலிநடந்த காலத்தில் கப்பல்படையை அணிவகுத்திருந்தார்கள். அதிலிவரும் சேர்ந்திருந்து கெட்டியாய் விளங்கினார். அதைப் பார்த்து சக்கரவர்த்தினியவர்கள் மெச்சி தமது சொந்த கடற்படைத்தலைவருக் குதவியாக 1889-ம் வருஷத்தில் ஜார்ஜ்மன்னரை நியமித்தார். 1891-ம் வருஷத்தில் ஜார்ஜ் மன்னர் படைத்தலைவராக உயர்த்தப்பட்டார். அப்போது தம் சகோதரருடன் அயர்லாந்து தேசத்தை சுற்றிப்பார்த்து அவர்களின் அன்பைப் பெற்றுத் திரும்பினார் இப்போது தான் ஜார்ஜ்மன்னருக்கு கடுஞ்சுரங்கண்டு துன்பப்பட்டார். விக்டோரியா சக்ரவர்த்தினியாருள்பட எல்லாரும் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள். தெய்வானுகூலமாய் சௌக்கியப்பட்டது. அந்தச் சமயம் ஜார்ஜ் மிக்க பலயீனமாயிருப்பதைக்கண்டு அவர் சரீரசுகத்திற்காக அவரை பெற்றோர்கள் ஈஸ்டுபோரன், என்ற விடத்திற்கு அழைத்துப் போனார்கள். அங்கு டிவான் ஷையர் பிரவு (Duke of Dewanshire) காம்ப்டன் என்று வழங்கிவருகிற உல்லாச அரண்மனையில் தாமசிக்கும்படி பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார். அங்குள்ள விநோதமான காட்சிக்கும் சவுக்கியத்திற்கேற்ற காற்றுக்கும் அழகான காட்சிகளுக்கும் ஆவல்கொண்டு சந்தோஷ

2

மாய் ஏற்றுக்கொண்டார்கள். இவ்விடம் வசித்த ஒரு மாத காலத்துக்குள் ஜார்ஜ் அரசர் சவுக்கியமடைந்து அதிக பலவானகத் தோற்றியதைக்கண்டு எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள். 1892-ம் வருஷம் வசந்தகாலத்தில் புரோபசர் ஹீன் என்பவருடன் யீட்டல் பார்க்கில் சுகத்துக்காகத் தங்கியிருந்தார். தம்மைச் சந்திக்கும் ஜனங்களுடன் கஷ்டமின்றிப் பேசுவார். அப்போதே இவருடைய பரோபகார சிந்தையும் பொதுத் தன்மையும் விளங்கி வந்தது.

இவரது தமயன் பட்டத்துக்குறிய பிரின்ஸ் ஆல்பர்ட் விக்டர் சிக்காயிருந்து பலவிதமாக சிகிச்சை செய்தும் சவுக்கியப்படாமல் 1892-ம் வருஷம் ஜனவரிமீ 12உ மரித்துப் போயினர். அதனல் சக்ரவர்த்தினியவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மற்றோர்களுக்கும் அடங்காத் துக்கம் நேர்ந்தது. பிறகு ஜார்ஜ்மன்னர் தமது தந்தையாருக்குப்பின் சிம்ஹாசனத்துக்குறிய பாத்தியத்தைப்பெற்றூர். அப்போது முதல் இவருடைய க்ஷேமலாபங்களையும் நடவடிக்கைகளையும் முன்னிலுமதிகமாக இராஜகுடும்பத்தார் கவனிக்கவும் உலகிலுள்ளோர்யாவரும் கருதவும் நேர்ந்துவிட்டது. அதனல் கப்பற்படைச் சேவகத்திலிருந்து பிரித்து ராஜாங்க நடவடிக்கைகளை கவனித்து வரும்படிக்கும், பழகும்படிக்கும் ஏற்பாடு செய்தார்கள். தமக்கும் அரசுரிமைக்கும் கொஞ்சமும் இயல்பில்லை என்று எண்ணியிருந்த இம்மகா புருஷனுக்கு 27 வது வயதில் இராஜ உரிமை ஈஸ்வர சங்கற்பத்தால் கிடைத்தது. இது முதல் ஜார்ஜ் மன்னருக்கு டியூக்ஆப் யார்க் என்னும் பட்டம் சூட்டி அழைத்து வந்தார்கள்.

## ஐந்தாவது அத்தியாயம்.

### மேரி ராணியின் சரித்திரம்.

மேரி அடிலயிட் ராஜகுமாரிக்கும் டெக்கு ராஜகுமாரருக்கும், 1867-ம் வருஷம் மேமீ 26வ கென்ஸிங்டன் மாளிகையில் மேரி ராணியார் ஜெனனமானூர். இரண்டு மாதங்கழிந்தபிறகு இந்தக்குழந்தைக்கு "விக்டோரியாமேரி, அகஸ்டா, லூயிஸா, ஓல்கா, பாலைபின், க்ளாட்டையின் அக்னிஸ்" என்று நாமகரணஞ் சூட்டி ஞானஸ்நானஞ் செய்யப்பட்டது.

இப்பெண்மணிக்கு பிரின்ஸஸ் மேரி என்னும் செல்வப்பெயர் புனைந்தழைத்து வந்தார்கள். மேரி ராணியார் எப்போதும் புன்சிறிப்புடனும், அன்றலர்ந்த தாமரைப் புஷ்பம் போன்ற முகத்துடனும், ஒருவயது குழந்தைப் பருவமுதல் காணப்பட்டார். இக்குழந்தை ஜனித்த 15 மாதங்களுக்குப் பிறகு ஒருஸகோதரன் ஜனித்தனன். அதன்பிறகு பிரின்ஸ் பிரான்ஸில் என்பவரும், பிரின்ஸ் அலெக்ஸாண்டர் என்பவரும் ஸகோதரர்களாகப் பிறந்தார்கள்.

லண்டன்மாநகரிலுள்ள நம் ஜார்ஜ் அரசர் வசித்துவந்த மல்பரோ அரண்மனைக்கு சிறிது தூரத்திலுள்ள கென்ஸிங்டன் அரண்மனையில் மேரி ராணி தன் பெற்றோர்களுடனும் மூன்று ஸகோதரர்களுடனும் வாசஞ்செய்து வந்தார். இப்படி ஒருவருக்கொருவர் சமீபத்தில் வசித்து வந்தமையால் அடிக்கடி ஒருவரை யொருவர் சந்திக்கும்படி நேர்ந்தது. ஆகவே சிநேகபான்மையும் அதிகரித்தது.

இந்த ராஜகுமாரிக்கு நாலு வயதானபோது பெற்றோர்கள் ரப்பன்ஹீம் என்ற ஊருக்கு அழைத்துப்போனார்கள்.

காலஞ்சென்ற எட்வர்ட் அரசரும் தன் மனைவி மக்களுடன் அவ்விடம் வந்து, இந்தக் குடும்பத்துடன் கலந்துகொண்டார் இவ்விரு குடும்பத்தாரும் ஒன்றாய்ப்பழகி பொதுவான ஒரே மாளிகையில் போஜனம் பண்ணிவந்தார்கள்.

டெக்துப்பிரபுவும் அவர் மனைவியும் தங்கள் குழந்தைகளை நல்வழியிற் பழகும்படிச் செய்வதில் சிரமமெடுத்துக் கொண்டார்கள். மேரி இராஜதுமாரத்தியும் அவர் ஸகோதரர்களும் பிறருடைய கஷ்டநஷ்டங்களையும், சுகதுக்கங்களையும் நன்றாய் உணரவேண்டுமென்று கருதி மேரியின் தாயார் தன் பிள்ளைகளை அடிக்கடி ஏழைகளின் வீட்டிற்கு அழைத்துப் போவார்.

மேரி ராணியார் பால்யத்தில் ஒருவருக்கும் அடங்கி நடக்கமாட்டாள். ஆனல் எப்போதும் ஸாந்தமுள்ளவளாகவே காணப்படுவாள். மேரிக்கு படிப்புச் சொல்லிக்கொடுப்பதற்கு மேடம் பிரிக்கா என்னும் பெயருள்ள பிராஞ்சு தேசத்து மாதை நியமித்தார்கள். மேரிக்குச் சில்லறை விளையாட்டுகளில் அதிகப்பிரியம். இவரிடத்தில் ஆட்டுக்கிடா பூட்டிய வண்டியொன்றிருந்தது. இதைத் தன் தோட்டத்தைச் சுற்றிவரும்படி விட்டுக் கண்ணாரக் கண்டு ஆனந்திப்பார்.

மேரி ராஜகுமாரி தன் ஸகோதரருடன் சேர்ந்து உபாத்தியாயரிடத்தில் ஒன்றாகவே வாசிப்பாள். ஸங்கீத தொனியைப்போன்ற சாரசப்பத்துடையவர். இவருக்குப் பிரபஞ்சத்திலுள்ள இயற்கைப் பொருள்களை ஆராய்ந்தறியதக்க சந்தர்ப்பங்களிருந்தமையால், அந்த விஷயத்தில் மிக்க தேர்ச்சி பெற்றார்.

மேரி ராணியார் 1883-ம் வருஷத்தில் தன் தாய் தகப்பன்மாருடன் இட்டலி தேசத்திலுள்ள பிளாரன்ஸ் நகரத்துக்குப் போனாள். அங்கே தங்கியிருந்தகாலத்தில் ராஜகுமாரி தன் உபாத்தியாயர்களிடம் கல்விகற்று வந்ததுடன், சரித்திரம், ஸங்கீதம் முதலிய கலைகளையும், அனுபவரீதியாய் அப்பியாசித்து வந்தாள்.

இப்படி இரண்டு வருஷகாலம் வெளிநாட்டிற் பெற்றோருடன் சஞ்சாரஞ்செய்து இங்கிலாண்டுக்குத் திரும்பினர். அப்போது விக்டோரியா மஹாராணியார் ரிச்மாண்டிலுள்ள வொயிட் அவுஸில் தங்கியிருக்கும்படி வேண்டினமையால் டெக்கு ராஜகுமாரரும் ஒத்துக்கொண்டு சந்தோஷமாய் அம்மாளிகையில் வசித்துவந்தார்கள்.

இவ்விடத்தில் மேரி ராணியின் தாயாருக்கு அதிகப் பழக்கமுண்டு. மேரியும் அவள் தாயாரும் இவ்விடத்திலுள்ள தோட்டந்துறவுகளைச் சுற்றிப்பார்த்துத் திரும்புவார்கள். இவர்கள் அடிக்கடி கிராமாந்திரங்களுக்கும் போவதுண்டு. அங்கு ஜனங்கள் இவர்களை வரவேற்றுபசரித்து மரியாதைசெய்வார்கள்.

டென்னிஸன், கார்லைல், எமர்ஸன், ஜார்ஜ். எலியட் என்னும் ஆங்கில நூலாசிரியர்கள் எழுதிய புத்தகங்களைப் படிப்பதற்கு மேரிக்குப் பிரியமதிகம். அம்மாதுசிரோமணி எந்தக் காரியத்தையும் சீராயும், ஒழுங்காயும் செய்வதையே முக்கியமாகக் கருதுவார்.

இப்பெண்மணி இதர தேசங்களில் வசித்து அவர்களுடைய நடையுடைபாவனைகளைத் தெரிந்துகொண்டு விசாலமான புத்தியுடன் வந்திருப்பதைக்கண்டு ராஜகுடும்பத்தார் அனைவரும் ஆனந்தித்து வந்தார்கள்.

மேரி ராணிக்கு விவாஹவயது ஆரம்பமாயிற்று. மேரி வசித்துவந்த அரண்மனையிலுள்ள சித்திரக்கூடத்தில் (Drawing room) முதற்றடவையாக நல்ல உடுப்புகளைத் தரித்துக்கொண்டு வந்தார். அதைக்கண்டு அவள் தாயார் சந்தோஷப்பட்டாள். பாடசாலையிலிருந்து வந்த ஸகோதரனொருவன் "நீ என்ன திடீரென்று பெரியவளாகிவிட்டாயே" என்று கேட்டாராம்.

மேரியைப் பொதுச்சபைகளுக்கு ஜனங்கள் அழைத்து வந்தார்கள். எப்போதுந் தன் தாயாருடன் பொதுச்சபைகளுக்குப் போய்வருவாள். அப்படிப் போகும்போதெல்லாம் டாம்பீகமான உடைகளைத் தரித்துப்போவதில்லை. சாதாரண உடையைத் தரித்துப்போவது வழக்கம்.

தம்மிடத்தில் அறிமுகஞ் செய்யப்பட்டவர்களுடன் சிறித்துக்கொண்டே பேசுவார். கவலையின்றித் தன் பந்து மித்திரருடன் கூடிக்குலாவிக்கொண்டு பேசுவார். இதைப் பார்த்தவர்களெல்லாம் ரோஜாப்புஷ்பத்தைப் போற் காணப்படுகிறாள் என்று சொல்வது வழக்கம்.

மேரி ராஜகுமாரிக்குச் செலவுக்காக கொடுக்கப்படும் பணத்தின் ஒருபாகத்தை ஏழை ஜனங்களுடைய குழந்தைகளின் பொருட்டுச் செலவிடுவதற்காக எடுத்துவைத்துவிடுவார். வறுமையாலும், வியாதியாலும் வருந்தும் ஜீவகோடிகளின் துன்பத்தை நீக்கும்பொருட்டு இவர் அடிக்கடி ஏழைகள் வசிக்கும் ஈஸ்ட் என்டுக்குப் போய், தம்மாலியன்ற உதவியைச் செய்து திரும்புவார். ஒருசமயம் ஒரு விசேஷமான காரியம் நடந்தபொழுது மேரி ராணியார் கொஞ்சம் தாமஸமாய் போகவே அந்தச் சமயம் பாண்டுவாத்தியக்காரர்கள்,

மேரி எழுந்திரு என்பதை வாசித்தார்கள்; அதைக்கேட்ட பெண்ணரசியார் மலர்ந்த முகத்துடன் புன்னகைகொண்டார்.

இதற்குப் பின்னுள்ள சரித்திரங்கள், விவாஹம், குடும்பம் இவைகளைப்பற்றியவைகளாகையால் அவைகளை அரசருடைய சரித்திரத்தில் கலந்து எழுதப்பட்டிருக்கிறது.

---

## ஆறவது அத்தியாயம்.

### ஜார்ஜ் மன்னரின் விவாஹ மகோற்ஸவம்.

நமது 5-வது ஜார்ஜ் அரசரின் மூத்தசகோதரரான பிரின்சு ஆல்பர்ட்டு விக்டருக்கு மேரி ராணியாரை விவாகஞ் செய்வதாய் உத்தேசிக்கப்பட்டிருந்த விஷயம், அவரது அகாலமரணத்தால் மாறுதலடைந்து விட்டது. பிறகு மகா அதிர்ஷ்டசாலியான விக்டோரியா மகாராணியவர்களால், ஜார்ஜ் அரசருக்கு மேரி ராணியை விவாகஞ்செய்வதாய் நிச்சயிக்கப்பட்டது. அதற்கு 1893-ம் வருஷம் ஜூலை 6-வ தேயே விவாகத்துக்கு நல்லநாளென்று பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டது. இந்த சந்தோஷசமாச்சாரம் உலகமெங்கும்பரவிற்று. கல்யாண மகோற்சவத்தைப் பார்த்துப்போவதற்கு அநேக ஜனங்கள் வெளியூர்களிலிருந்து வந்தார்கள். அநேகமன்னர்களும் பிரபுக்களும், முக்கியமானவர்களும் வரவழைக்கப்பட்டிருந்தார்கள்.

கல்யாணதினத்திற்கு 2, 3 நாட்களுக்குமுன் உலகத்தின் பலபாகங்களிலிருந்தும் தம்பதிகளுக்கு இனாமாக அனுப்பப்பட்டிருந்த வஸ்துக்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஒருயிடத்தில்வைக்கப்பட்டது. அப்படி இனாமாக அனுப்பப்

பட்ட வஸ்துக்களின் எண்ணிக்கை 3500-க்கு மேலிருந்தது. இவைகளையெல்லாம் விக்டோரியா இன்ஸ்டிடியூட்டில் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்தது.

இவைகளில் நல்ல வேலைப்பாடுள்ளவும் இரத்னம், வயிரம், வைடூர்யம், மாணிக்கம் முதலிய நவரத்னங்கள் வைத்திழைக்கப்பட்டதுமான நகைகளிருந்தன. காமன்ஸ் சபையில் ஜார்ஜ் என்று பெயருள்ளவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து தங்கள் பெயருள்ள இவ்விராஜகுமாரரின் விவாகத்திற்கு இனாமாக ஒரு வெகுமதி அனுப்பினார்கள். விக்டோரியாமகாராணியார் தம் பேரனுக்கு மனைவியாகப்போகிற மேரிராணிக்கு வைடூர்யமிழைத்த இரத்ன மாலையொன்றை இனாமாக அளித்தார். ஜார்ஜ் அரசர் தனக்கு மனைவியாகப் போகிற மேரிக்கு அளித்த வெகுமதிகளில் நங்கூரம் போன்ற நகையும் ஒன்றாம். யூகினி ராணியார் வைரத்தால் இழைக்கப்பட்ட ஒரு சட்டை பொத்தானைப்போன்ற நகையை மேரிக்கு அளித்தார். ஜெர்மனி தேசத்துச் சக்கிரவர்த்தி பொன்னிலும் வெள்ளியிலும் செய்யப்பட்டு ராஜாங்க கிரீடம் போலுள்ள மேல் மூடியையுடைய கெண்டியை இனாமாகக் கொடுத்தார். ஐரே தேசத்துப் பிரஜைகள் தலைக்குல்லாவைப்போன்ற ஒன்றை அனுப்பினார்கள், மேரிராணிக்கு இந்த நகையை அணிந்துகொள்வதில் மிகப்பிரியம். நாம் முன் சொன்னபடி இவைகளை அலங்காரமாக வைக்கப்பட்டிருந்த விக்டோரியா இன்ஸ்டிடியூட்டிற்கு அநேகர்வந்து வெகுமதிகளை பார்த்துப்போனார்கள். வொயிட்லாட்ஜில் அதற்கென்று ஒரு விருந்தும் நடந்தது.

கல்யாண சுபதினமாகிய ஜூலைமீ 6உ மழையின்றி

இளம் வெய்யிலாயிருந்தது, மத்தியானம் 12-மணி வரையில் தம்பதிகளின் ஊர்கோலத்தைப்பார்க்க ஜனங்கள் லண்டன்மா நகரத்தை அணுகி வந்துகொண்டேயிருந்தார்கள். முதலில் மகாராஜதந்திர நிபுணரான மிஸ்டர் கிளாட்ஸ்டன் பிரசன்னமானார். பிறகு அநேக பிரபுக்களும், சிநேகிதர்களும், மன்னர்களும், பத்திராசிரியர்களும், ரிப்போர்ட்டர்களும், மாதர்களும் வந்து வீற்றிருந்தார்கள். அவர்களணிந்திருந்த ஆபரணங்களும், உடைகளும், அம்மாளிகையின் அழகை எடுத்துக்காட்டின.

உடனே இராஜதம்பதிகள் ஊர்கோலமாய்வந்து செண்டு ஜயார்ஜ் தேவாலயத்தில் தகப்பனார், சிற்றப்பன்மார், பிரபுக்கள், சிநேகிதர்கள் முதலியவர்களுடன் பிரவேசித்தார். அப்போது தளகர்த்தன் அணியும் உடுப்பை அணிந்திருந்தார். மேரி ராணியும், பிரின்ஸஸ் விக்டோரியா, மாட் ஆப் வேல்ஸ், என்னும் இரண்டு மேன்மைத்தோழிகளுடனும், பின்னுஞ்சில மாதரசிகளுடனும், ரோஜா, நெரிஞ்சி முதலியவைகளைப் போல் பூப்போட்ட உடைகளைத்தரித்துக்கொண்டு, எவரும் சந்தோஷிக்கும்படி, தேவாலயத்தை அடைந்தார். தமது புத்திரியின் விவாக மகோத்சவத்தை நடத்த ஆவலாயிருந்த டெக் பிரபுவும், தமது குமாரனுடன் மேரி ராணியையும் அழைத்துக்கொண்டு பலிபீடத்திற்குப் போனார். ஜார்ஜ் மன்னரின் ' மாமியார் தம்பதிகளுக்கருகில் வீற்றிருந்து பேரின்பக்கண்ணீர் சொரிந்தார். அங்கு வந்திருந்தவர்களில் ருஷிய சக்ரவர்த்தினியும் டென்மார்க் அரசரும் அரசியும் ஜார்ஜ் அரசரின் பாலியப்பருவ முதற்கொண்டு அவர் மீது வாஞ்சையுள்ளவர்களாயிருந்தார்கள் மணமகன் பலிபீடத்திற் கெதிரில் வருவதற்கு முன் நமதுவிக்டோரியா

மகாராணியார் விஜயம் செய்தார். அம்மகாலெட்சுமியின் வருகையைக்கண்ட மன்னர்கள், பிரபுக்கள், குருமார்கள், முதலியவர்களும் இன்னும் மற்றவர்களும் முகமலர்ச்சியுடன் எழுந்து நின்றார்கள். வாத்தியகோஷம், மகாராணியார் வரவைத் தெறிவிக்க முழங்கிற்று. அப்போது அவர் வெள்ளி ஜரிகையால் பூப்போட்ட நீலப்பட்டாடையை அணிந்துகொண்டும் நவரத்தினங்களிழைத்த சிறியகிரீடத்தை சிரசில் தரித்துக்கொண்டும், செங்கோல் முறைமை அடையாளங்களுடன் உலகத்திலுள்ள சக்ரவர்த்திகளைவிட ஐஸ்வரியம், எனந்தம், கீர்த்தி, இவைகளைப்பெற்று விளங்கிய சக்கிரவர்த்தினி, அருமைப்பேரனுடைய கல்யாண மகோற்சவத்தை நடத்தவும், கண்டுகளிக்கவும், ஆசீர்வதிக்கவும் பிரசன்னமாயினர். அவ்வாலயம் இந்திர சபையைப்போலிருந்தது. அப்போது கேண்டர் பரி ஆர்ச் பிஷப்கனம் ரெவரெண்ட்டு ஈகார்கிளேன் என்பவர், கிரமப்படி விவாகச்சடங்குகளை நடத்தினர்.

விரைவாய்ச் சடங்குகள் நடந்து முடிந்தன. மணமகளை மாப்பிள்ளைகையில் மாமனாராகிய டெக்கு பிரபு ஒப்புவித்து, மெதுவான தொனியில் தம் பெண்ணை அங்கீகரிக்கும்படி பிரார்த்தித்தார்.

ஆர்ச்பிஷப், சூட்சி அடக்கம், நடத்தை,, எண்ணம், பேச்சு இவைகளில் அறிவை விசாலப்படுத்திக்கொள்வது அவசியமென்று பேசி உலகத்தாருக்கு இவ்விவாகம் நன்மையைப் பயக்குமென்று ஆசீர்வதித்தார். பிறகு ஒரு கீதம் பாடியது. பிறகு ஜார்ஜ் அரசர், மாமனார், மனைவி, பாட்டியார், தாயார், மாமியார், டென்மார்க்கு அரசி, அரசர் முத

லியவர்களுடைய காத்தைப்பிடித்து மரியாதையாக முத்த மிட்டார். அவர்களும் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு வாழ்த்தினார்கள். சீதனங்களும், வெகுமதிகளுமளிக்கப்பட்டன. உடனே பக்கிங்ஹாம் அரண்மனைக்கு சிற்றுண்டி புசிக்க பவனிசென்றார்கள். அதை அறிவித்து பீரங்கிவெடிகள் தீர்ந்தன. விவாகச்சடங்கு நடந்ததின் ஆசீர்வாதமாக லண்டனிலுள்ள கோவில்களிலெல்லாம் மணிகளின் சப்தம் முழங்கிற்று. பக்கிங்ஹாம் அரண்மனைக்கெதிரில் தம்பதிகள் கல்யாணக் கோலமாய் வருவதைக்காண ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் ஆவலுடன் நின்றுகொண்டிருந்தார்கள். தம்பதிகள் விக்டோரியா மகாராணியார் முதலியவர்களுடன் வந்து பலகணிச்சாரில் உட்கார்ந்து பத்து நிமிஷம் பேசிக்கொண்டிருந்த காட்சியைக்கண்டு ஜனங்கள் களித்துச்சென்றார்கள்.

பிறகு பக்கிங்ஹாம் அரண்மனையிலும் அங்குள்ள நடனசாலைகளிலும் ராஜவிருந்துநடந்தது. பாண்டு வாத்தியம் முழங்கிற்று. வழக்கப்படி ராஜவம்சத்து ரிஜிஸ்டரில் தம்பதிகளும் நெருங்கிய பந்துக்களும் தங்கள் தங்கள் கையெழுத்தைச் செய்தார்கள்.

பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து லிவர்பூல் தெரு ஸ்டேஷன் மார்க்கமாய், திறந்த நாலு குதிரை பூட்டிய ரதத்தில் வதுவரர்கள் ஏறிக்கொண்டு மெதுவாய் ஊர்வலம் சென்றார்கள். அப்போது மேரி ராணியார் வெண்ணிறமுள்ள உடுப்பையும் பொன்வர்ணமுள்ள குல்லாவின் மேல் விலையுயர்ந்த வெண்மையான இறகுகளையும் தரித்துக்கொண்டிருந்தார்.

இம்மாதிரி ஊர்வலம் செல்லுகையில் ஜார்ஜ்மன்னர் தன்னைப்பார்க்கும் ஜனங்களுக்கு மரியாதையாக அடிக்கடி

தொப்பியை எடுத்துயர்த்திக் காட்டிக்கொண்டும், ராணியார் புன் சிறிப்புடன் தலைவணங்கிக்கொண்டும் வந்தார்கள். இவர்கள் செண்ட் பால் கதிட்ரலுக்கு சமீபத்தில் வந்தபொழுது, லண்டன் நகரத்து அதிகாரி, நாலுகுதிரைகள் பூட்டிய வண்டியில் வந்து சக்ரவர்த்தியுடன் சேர்ந்தார், பின்னும் ஷெரீப் முதலிய உத்தியோகஸ்தர்களும், எதிர்கொண்டழைத்து எல்லாரும் மென்ஷன் அவுசிற்குபோய், சிறிது நேரந்தங்கினார்கள். அங்கு லண்டன் அதிகாரியின் இரண்டுசிறிய பெண்பிள்ளைகள், ரோஜாப்புஷ்பங்களையும், இலைகளையுமெடுத்து புஷ்பமாரி பொழிந்தார்கள். இங்கிருந்து உல்பர்ட்டன் மார்க்கமாய் செண்டிரிங்காமிலுள்ள யார்க்காட்டேஜுக்குப்போய் அங்குள்ள யாவரும் ஒன்றுசேர்ந்து விருந்துண்டார்கள். அநேக ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குச் சிற்றுண்டியும் தேத்தண்ணீரும் வழங்கப்பட்டன. இக்கல்யாண வைபவங்களைக்கொண்டாடும் நிமித்தம் அங்குள்ள பொது ஜனங்கள் ஜலத்தால் சூழப்பட்ட சிறிய தீவுகளிலும், உயர்ந்த குன்றுகளிலும், லெட்சக்கணக்கான தீபங்களை ஏற்றிவைத்து, ஆடிப்பாடிக் குதித்துக் கூத்தாடி சந்தோஷங்கொண்டாடினார்கள். இத்துடன் மகாராணியவர்களுடையவும் இன்னும் மற்ற மன்னர்களுடையவும், பெரியோர்களுடையவும் ஆசீர்வாதத்தைப்பெற்று விவாகமகோற்சவம் பூர்த்தியாயிற்று.

இவ்வாறு சந்தோஷத்தையடைந்த பிரிட்டன் அரசியும் இந்தியாவின் சக்ரவர்த்தினியுமான விக்டோரியா மகாராணியார் தமது ராஜ்யத்திலுள்ள மன்னர்களுக்கும் பிரபுக்களுக்கும் அன்பு நிறைந்தக் கடிதம் ஒன்று பகிரங்கமாக வெளிப்படுத்தினர்.

அதில் எனது பிரிய முள்ள பேரனாகிய யார்க்கும் பிரபுவுக்கும், அவரது அன்புக்கினிய மணப்பெண்ணாகிய மேரி ராணிக்கும் நடந்த விவாகத்தைக் கொண்டாடி வாழ்த்துக்களனுப்பியதற்கும், அவர்கள் கொண்ட விசுவாசத்திற்கும் சந்தோஷத்திற்கும் நான் மனமுருகி அதை சந்தோஷமாய் எனது அன்புள்ள பிரஜைகளுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் என்றும், பின்னும் பல வசனங்களும் கண்டிருந்தது.

ஐந்தாவது ஜார்ஜ் மன்னருக்கும் மேரி ராணியாருக்கும் விவாகமகோற்சவம் நடந்தபின், தம்பதிகளை பல ராஜகுடும்பத்தவர்களும், பிரபுக்களும் விருந்துக்கழைத்து லெவி நடத்தினார்கள். இப்படி லெவிகள் சிலமாதங்கள்வரை நடந்தது 1894-ம் வருஷம் மார்ச்சுமீ 13உ செண்டு ஜேம்ஸ் அரண்மனையில் ராஜதம்பதிகளுக்குப்பதிலாக இவர்களை யாவரும் தரிசிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கூட்டத்திற்கு அநேகபிரபுக்கள் வந்திருந்து வெகு விமரிசையாய் நடத்தினார்கள்.

---

## ஏழாவது அத்தியாயம்.

### ஜார்ஜ் மன்னரின் இளவரசுப்பட்டம் பெற்றது.

இளவரசரென்றால் இப்போதிருக்கும் அரசருக்குப் பின் பட்டம் பெற்று அவருக்குரிய ராஜ்யாதிகாரத்தை நடத்தும் உரிமையைப் பெறும் பாத்தியதையை உடையவர் என்று பொருள்படும். இவ்வழக்கம் எல்லா ராஜ்யங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. இளவரசராயிருப்பவர் ராஜாங்க விஷயமான சங்கதிகளில் பழகிவரவும் சில சமயங்களில் ராஜாவுக்குப் பதிலாய் அனுப்பப்படவும் யோக்கியதையுள்ள

வராயிருப்பார். அவருக்கென்று சில வேலைகளைப் பிரித்து அவரை அரசர் உத்திரவுகளில் கையெழுத்துப் போடவும் சில முக்கிய விஷயங்களைக் கவனிக்கவும் பிரித்துவிடுவது முண்டு.

ஆனால் அரசன் உள்ளவரையிலும் இளவரசருக்கு தானாய் எதையும் நடத்தவாவது நடத்திவைக்கவாவது அதிகாரமில்லை. மேஜராயிருந்து பிரத்தியேகமாக அதிகாரங்கொடுக்கப்பட்டால் குறிப்பிட்ட ராஜ்யாதிகார விஷயங்களை மட்டும் நடத்தலாம். பந்துக்கள் வீட்டுக்குப் போவதிலாவது போகவேண்டிய சந்தர்ப்பங்களிலாவது மற்றும் ராஜகுடும்ப சம்மந்தமான விஷயங்களில் இந்நிபந்தனை கட்டாயமல்ல.

கிரேட் பிரிட்டன் ராஜ்யத்திற்கு அரசியாயிருந்த விக்டோரியா மஹாராணி அவர்கள் 1901-ம் வருஷம் ஜனவரிமீ 23உ இவ்வுலக வாழ்வைவிட்டவுடனே, அவரது குமாரரும் இளவரசாயிருந்தவருமான ஏழாவதுஎட்வர்டு அவர்கள், பரம்பரை பாத்தியதையால் பிரிட்டீஷ் நாட்டுக்கு அரசராயும், இந்தியாவுக்குச் சக்ரவர்த்தியாயுங் கருதப்பட்டார்.

அப்போது அவருடைய ஸ்தானத்தில் ஜார்ஜ் மன்னர் இளவரசாக பாத்தியம் பெற்றார். யார்க் பிரபுவாயிருந்தவர் கார்ன்வால் பிரபுவாகினார். இக்காலத்தில் தந்தையாரின் உத்திரவுப்படி ஆஸ்டிரலேஷியாவுக்குச்சென்று அங்கு மேமீ 16உ பார்லிமெண்டை முதற்றடவையாகத் திறக்க இளவரச தம்பதிகள் இருவரும் இங்கிலாண்டை விட்டுச் சென்றார்கள்.

இவர்கள் ஆஸ்டிரேலியா, நியூஸீலெண்டு, தென்னாப்பிரிக்கா முதலியவிடங்களின் வழியாய்ச் சென்று ஆஸ்டிரேலியா காமன்வெல்த் பார்லிமெண்டைத் திறந்தார்கள்.

நவம்பர்மீ 1உ திரும்பிவந்து போர்ஸ்மவுத் ஆர்பரில் வந்திறங்கும்பொழுது 7-வது எட்வர்டு சக்ரவர்த்தியும் அவரது ராணியாரும், ஜார்ஜ் அரசரின் குழந்தைகளும், துறைமுகத்தில் நின்ற ஸ்டீமருக்கு வந்து இளவரசனையும் இளவரசியையும் பார்த்துப் பேசினார்கள். குழந்தைகளைக் கண்ட பெற்றோர்கள் அவர்களைக் கட்டித்தழுவி முத்தமிட்டார்கள்.

பிறகு ஒருவாரங் கிரமித்து 7-வது எட்வர்டு பிறந்தநாள் கொண்டாட்டத்தன்று ஜார்ஜ் அரசருக்கு இளவரசுப் பட்டஞ் சூட்டினார்கள்.

பிறகு டிசம்பர்மீ 5உ மாலை கில்ட் ஹாலுக்குப் போனார்கள். அங்கு இளவரசரானதைக் குறித்து லண்டன் நகரத்துப் பிரஜைகள், தங்கள் சந்தோஷத்தைத்தெரிவித்தார்கள். அப்போது ஜார்ஜ் அரசர் "இங்கிலாந்து எழுந்திரு" என்ற விஷயத்தைப்பற்றிப் பேசினார். அதுமுதல் தமது கடமையில் சாமார்த்தியமுள்ளவராயிருந்து காரியங்களை காருண்யத்துடன் செய்துவந்தார்.

1892-ம் வரு ஜுன்மீ 17உ பார்லிமெண்டு மஹாசபைக்குப் பிரபுவாக நியமிக்கப்பட்டார். இதற்கு சில சடங்குகளுண்டு. இப்பட்டத்துக்குரிய உடுப்புகளைத் தரித்துக்கொண்டு லார்டு சேன்சலர் முன்பாக ஜார்ஜ் அரசர் வந்தவுடன் இவருக்குப் பின் மற்றப்பரிவாரங்களும் வந்தது. அப்படி வந்த இராஜகோல பவனியானது ஜனங்களின் கண்களைக் கவரத்தக்கதாயிருந்தது. அச்சபையின் முன் ஒரு கௌரவமுள்ள உத்தியோகஸ்தர் "ஜார்ஜ் அரசர் பார்லிமெண்டு மஹாசபையில் பிரபுவாகிவிட்டார்" எனப் படித்தனர். உடனே வழக்கப்படி சத்தியஞ்செய்தானவுடன் பார்லிமெண்டு

ரிஜிஸ்டரில் தம்முடைய கையெழுத்து செய்துவிட்டு, அங்குள்ளவர்களை வணங்கியபின் அரண்மனைக்குத் திரும்பி வந்துவிட்டார். அப்போது "ஜார்ஜ் அரசர் பிரபுவாகிவிட்டார்" என நகர் முழுதும் சந்தோஷத்தால் ஆரவாரஞ்செய்தனர்.

எட்வர்டு சக்ரவர்த்தி வியாதியாயிருக்குங் காலத்தில் எல்லாரையுந் தைரியப்படுத்தி வந்ததுமன்றி பட்டாபிஷேகத்துக்கு அழைத்த சிலவிருந்துகளுக்கு தமக்கு பதிலாக நம் ஜார்ஜ் இளவரசரை எட்வர்ட் சக்கிரவர்த்தி அனுப்பினர். விருந்துக்குப் போகாமலிருந்தால் ஜனங்கள் வருத்தப்படுவார்கள் என்ற எண்ணத்துடன், எட்வர்ட் அரசர் கட்டளையிட்டதைத் தாம்போய் பூர்த்திசெய்தார்.

1905-ம் வருஷாரம்பத்தில் டப்ளின் அரண்மனையில் ராஜவிருந்து நடந்தபோது ஜார்ஜ் அரசரும் பிரசன்னமாகியிருந்தார். பிப்ரவரி மாதத்தில் சிங்வா போர்ட்களுக்கு வார்டராக நியமிக்கப்பட்டார்.

இது வெல்லிங்டன் பிரபுவிருந்த இடம். ஜார்ஜ் அரசரின்மீது அவருக்கு மிகுந்தபிரியமுண்டு. பிறகு அவுஸ்ஆப் காமன்ஸ் அல்லது பார்லிமெண்டு சபையில் இளவரசர் இந்தியாவுக்குப் போய்வரும் விஷயத்தைப்பற்றிப் பேசி அதற்காக 20000 பவுன் சிலவுக்குக் கொடுக்கும்படி சாங்கிஷனாயிற்று.

அப்போது இளவரசர் விநோதச்சித்திரம் வரையும் சாலைக்கு ஆயிரம் பவுன் இனமாகக் கொடுத்தார்.

பிறகு அவர் 1905-ம் வருஷயிறுதியில் இந்துதேசயாத்திரை செய்ததைபிரத்தியேகமாய் எழுதப்பட்டிருக்கிறது.

# எட்டாவது அத்தியாயம்.

## போது விஷயங்களில் ஊக்கம்.

அரசன் என்னும் பதத்திற்கு பிரஜைகளை இரட்சிக்கும் தலைவன் என்பது பொருள். அவருடைய கடமைகளென்ன வெனில் ஜாதி, மதம், நிறம், தொழில் இவைகளில் பேத மின்றி துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்து, அவரவர் களின் வேதங்களிற் கூறிய பொது விதிகளை யனுசரித்து நடப்பதற்கு தடையின்றியும் "அஹிம்ஸா பரமோதர்ம" என்றபடி பிறருக்கு இம்சை இன்றியும் நடந்து கொள்வதாம். அரசன், ஸம்ரட்சணை கர்த்தாவாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவின் அம்ஸத்தை பெற்றவராகையால், அவரை பிரத்தியட்ச கடவு ளென நினைக்கும்படி சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. அதையனுசரித்தே "திருவுடைமன்னரைக்காணில்திருமாலைக் கண்டெதாக்கும்" என மஹான்கள் கூறியிருக்கிறார்கள். ஜனங்களின் விரும்பு வெறுப்புகளைத் தெரிந்து வெறுப்பு களை விலக்கியும் விருப்புகளை தழுவியும் ஆட்சிபுரிய வேண் டும். பொதுஜன விருப்புகளை தெரிந்து கொள்வதற்கு பொதுச்சபைகளும் சமாசாரப் பத்திரிகைகளுமே உதவியாக விருக்கிறது. அவைகளிப்போதிருப்பதை காட்டிலும் இன் னும் பிரிட்டிஷ் நாட்டைப்போலொத்த சுதந்தரங்களை யடைந்து சில உத்தியோகஸ்தர்களுடையவும், சில அக்கிர மிகளுடையவும், நடவடிக்கைகளை வெளியிட்டு வருமானால் அது செங்கோல் வளர்ச்சிக்குற்ற துணையாகும்.

ஒவ்வொருவன் தன் மறுப்புடன் பொது நல முயற்சிகளிற்

பிரவேசித்து நடத்துகிறனோ அவன் எல்லோராலும் போற்றப்படுவான். அப்படி பொது நன்மைக் குழைப்பவர்களே அரசருக்குதவிகளாயும், விரும்பப்பட்டவர்களாயு மிருப்பார்கள். ஆனால்முன்னிருந்த இந்திய மன்னர்களும், சக்கிரவர்த்திகளும் இரவில் மாறுவேடம் பூண்டு அக்கிரம ரகசியங்களையும், திருடர்களின் செய்கைகளையும், உத்யோகஸ்தர்களின் அக்கிரமங்களையும் நன்குயறிந்து அவைகளை விலக்கி, பசுவும் புலியும் ஒரு துறையில் தண்ணீர் குடிக்கும்படி மகாநீதியாய் அரசுபுரிந்து வந்தார்கள். இனியும் இந்தியாவில் இம்முறையைக் கைக்கொள்ளுதலும், கவர்ணர், கவர்ணர் ஜெனரல் முதலிய பெருமைவாய்ந்த உத்தியோகஸ்தர்கள், நியாயாதிபதிகள் புராதன வழக்கப்படி ஆலமரத்தர்பார் கூட்டி சாமான்யர்களுடன் தேசநன்மையைப்பற்றி பேசப்பழகுவதும் அவசியமாகும். பொதுஜன நன்மையையே உருவமாக அமைந்த நம் ஜார்ஜ் சக்கிரவர்த்திபவர்கள் நடந்து கொண்ட மாதிரிகளிற் சிலதைக்கீழே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

ஜார்ஜ் அரசர் பொதுக்கூட்டங்களுக்கு வந்து அச்சபைகளின் நிலைமைக்குத்தக்கபடி அக்கிராசனம் வகிக்கவேண்டியதாயிருந்த காலங்களில் வகித்து கூச்சமின்றி நன்றாகப் பேசிவந்தார். எந்தச்சபைக்குப் போனாலும், எவ்விஷயத்தைப் பற்றிப்பேச நேர்ந்தாலும், தம்மாலியன்ற அளவு பண்டித பாமராள் யாவரும் அறியும்படி சுலபநடையில் பேசிவந்தார். முதல் முதலில் விருந்துச் சாப்பாட்டுக்கு போகும்பொழுது தமது நெருங்கிய பந்து ஒருவரை அணுகி விருந்துப்பேச்சில் என்ன சொல்லுகிறது, அதை எழுதிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டார். அதற்கவர் பேசப்புகும் விஷயத்தை

டைப்மிஷினில் கொடுத்து, அச்சடித்து வைத்துக்கொண்டு தாம் எழுந்திருந்தவுடன் படித்து விடலாம் என்று புத்தி கூறினர். அப்படிச்சொல்லிய உறவினரும் வந்திருக்கும் விருந்தில், நமது ஜார்ஜ் மன்னர்பேச எழுந்து நின்று நிதானித்து எவரும் மெச்சும்படி நன்றாகப் பேசினார்.

லண்டனில் குழந்தைகளை குரூரமாய் நடத்துவதை தடுக்கும் சபையிருக்கிறது. அச்சபை 1893-ம் வருஷம் பிப்பிரவரிமீ த்தில் நடந்தேறியபொழுது, ஜார்ஜ்மன்னர் அக்கிராசனம் வகித்து அச்சபையார் எட்டு வருஷங்களுக்குள் கொடுமையாய் நடத்தப்பட்டுவந்த 25000 திக்கற்றபிள்ளைகளை சவரட்சித்து வருவதைப்பற்றிச் சிலாகித்துப்பேசினர். அச்சபையில் நடந்த விருந்துச் சாப்பாட்டுக்கு இவர் தலைமை வகித்திருந்தபடியால் 2500 பவுன் கையொப்பம் செய்யப்பட்டது. பிறகு ஒரு கப்பலுக்கு வைஸ் அட்மிரலாக நியமிக்கப்பட்டார்.

ஏப்ரல் மாசத்தில் ஓரல்ஸடருக்குப்போய் விக்டோரியா இன்ஸ்டிடியூட் கட்டிடம் கட்டுவதற்கு அஸ்திவாரக்கல்லை வைத்து ஆரம்பச்சடங்கை நடத்தினர். அங்கிருக்கும் கீர்த்தி பெற்ற தேவாலயத்தையும் பீங்கான் வேலைச்சாலையையும் பார்த்து விட்டு நியூகாசிலுக்கு சென்று அங்கு பொதுஜனங்களுக்கு வேண்டிய பல காரியங்களைச் செய்தார்.

தமது சிறிய தகப்பனாரின் ஒரேகுமாரத்திக்கும் ருஷிய சக்கிரவர்த்தியின் குமாரனுக்கும் நடந்த விவாகமகோற்சவத்துக்கு போய்த்திரும்பினர். அப்போது இளவரசராயிருந்த ஏழாவது எட்வர்டு கென்ஸிங்டன் பட்டணத்திலுள்ள ராயல்

காலேஜ் என்னும் சங்கீதம் போதிக்கும் பாடசாலையை திறந்தார். அந்தக் கூட்டத்திலும் ஜார்ஜ்மன்னரும் மேரிராணியும், சென்றிருந்தார்கள் அங்கு நடந்த விருந்து பேச்சில் ஜார்ஜ் அரசர் வியாதியுள்ள குழந்தைகளுக்கு ஒரு வைத்திய சாலையை ஸ்தாபிக்கும் விஷயமாய் பேசினர். பாப்லார் என்ற விடத்தில் கப்பலோட்டிகளுக்காக ஒரு சாலையை திறந்து வைத்தார். பிறகு ஜூலைமாசத்தியில் ஜெனரல் எலக்ஷன் நடந்தபோது தம்பதிகளிருவரும் சாலிஸ்பரி பிரபுவின் விருந்தாடிகளாக ஆர்பிடிலிருந்து திரும்பிவந்தார்கள். டிசம்பர்மீ த்தில் பிரின்ஸ் பிரான்ஸில் இந்தியாவுக்குப்போகும் போது சுப மொழிகளைச்சொல்லி யனுப்பினர்கள்.

1896-ம் வருஷம் மார்ச்சுமீ ஜார்ஜ் சக்கிரவர்த்திக்கு Cab Driver's Benovelent Association என்ற பெயருள்ள சபையார் வருஷாந்திரக் கொண்டாட்டத்திற்கு அழைப்புப்பத்திரமனுப்பினர்கள். ஜார்ஜ் அரசர் அக்கொண்டாட்டத்தில் தலைமை வகித்தார். மேற்கூறிய சபைக்கு நம் ஜார்ஜ்மன்னரின் தகப்பனர் சபைத்தலைவராகவிருந்தார். இந்தச் சபைக்கு இவர் தலைமை வகித்ததைப்பார்த்தால், இவர் தன் தகப்பனரின் வழிகளை எப்படி பின்பற்றினர் என்பது நன்குவிளங்கும்.

லங்காஸ்டரில் ஒரு புதிய வைத்தியசாலையை நம் ஜார்ஜ் மன்னர் திறந்தார். விக்டோரியா மகாராணியாரவர்கள் சுமார் 50-வருஷங்களுக்கு முன் இப்புராதன கோட்டைச்சாவிகளைப் பெற்றூர். அது முதல் ராஜகுடும்பத்தார் ஒருவரும் போய்ப் பார்க்கவில்லை. அப்படி முதல் முதலில் போய்ப்பார்த்தது நம் ஜார்ஜ் அரசர் என்றே சொல்லவேண்டும். மறு நாள்

சால்போர்டிக்கு பிரயாணமானார்கள். அங்கு 700000 பவுன் செலவு செய்து நிர்மிக்கப்பட்ட பாடசாலை யொன்றைத்திறந் தார். பிறகு இரண்டு ஆஸ்பத்திரிகளில் பிணியாளர்கள் தங்கி, தங்கள் வியாதியை சொஸ்தப்படுத்திபோகக் கட்டப் பட்ட வார்டுகளை திறந்தார். இவர்கள் மறுபடியும் யார்க்கு பட்டணத்திற்குச் சென்றிருந்தார்கள். அங்கு செவிடர்க ளுக்கும், ஊமைகளுக்கும், நொண்டிகளுக்கும் பாடஞ்சொல் லிக்கொடுக்கும் சங்கத்தார் இவர்களுக்கு ஒரு விருந்து செய் தார்கள். அதற்குப் போயிருந்ததுமல்லாமல் இவ்விதமான அங்கவீனர்களின் பேரில் தனக்குள்ள அனுதாபத்தையுந் தெரிவித்தார்.

1897-ம் வருஷம் ஜூன்மீ காலெஞ்சென்ற விக்டோ ரியா மகாராணியாரின் டைமண்டு ஜூபிலிக்கொண்டாட்டத் திற்கு உலகத்திலுள்ளவர்களெல்லாரும் தங்கள் சந்தோ ஷத்தைத் தெரிவித்தார்கள். செண்ட்பால் கெதீடிரல் என்ற கோவிலுக்கு வெளிப்புறத்தில் நடந்த தெய்வ ஆராதனைக்கு ஜார்ஜ் அரசரும் மேரிராணியும் விக்டோரியா மஹாராணி யாருடன் சென்றிருந்தார்கள். ஜார்ஜ் மன்னர் டிரினிட்டி அவுஸகார் பொரேஷனுக்கு மாஸ்டராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். மேற்கண்ட போது விஷயங்களிலும் பின்னும் அநேக பொதுஜன சம்மந்தமான காரியங்களிலும் கலந்து வேலைசெய்து தேர்ச்சிபெற்றிருக்கிறார். இவரை எவராலும் ஏமாற்றமுடியாது. இந்திய ஜனங்களின் மத்தியிலிருந்தும் பொதுவிஷயங்களில் பழகி இராஜரீக விஷயங்களை நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது மகா அவசியம்.

## ஒன்பதாவது அத்தியாயம்.

---

### I ஜார்ஜ் மன்னரின் சுற்றுப்பிரயாணம்.

உலகத்திலுயர்பதவியிலிருக்கும் எந்த மனிதருடைய அறிவும் சமரஸ் நோக்கமுடன் விசாலித்திருந்தாலொழிய அவர்கள் தங்கள் கடமையை ஒழுங்காய் செய்யமுடியாது, அரசர்களாயுள்ளவர்களும் வரப்போகிறவர்களும், பல நாடுகளையும் சுற்றி பல ஆட்சிமாதிரிகளையுங்கவனித்து, பல உயர்தர சமாசாரப்பத்திரிகைகளையும் படித்து வரவேண்டும். அப்படிச் செய்தாலொழிய அவர்கள் ராஜ பதவிகளையாவது பொருப்புள்ள இராஜாங்க உத்தியோகங்களையாவது, வகிக்கத்தகுதி பெறமாட்டார்கள். இதை இங்கிலண்டரசர்கள் நன்றாயறிந்தவர்களாகையால்' பட்டத்துக்கு வருவதற்கு முந்தியும் வந்தபின்பும் அன்னியநாடுகளுக்குச் சுற்றுப்பிரயாணஞ் செய்து உலகஞானத்தைப் பெறுவது வழக்கம். அதையனுசரித்தே காலஞ்சென்ற எட்வர்டு சக்கிரவர்த்தியார் ஒரு முறையும் நமது ஜார்ஜமன்னர் தம்பதியுடன் இரு முறையும் இந்தியாவுக்கு வந்து போனார்கள். அதனல் பலதேசங்களைசுற்றிப் பார்த்து ஆங்காங்குள்ள ஆட்சிமுறைகளையும், ஜனங்களின் சுபாவம், நடவடிக்கை, நிலைமை, நோக்கம் முதலியவைகளையுந்தெரிந்துகொண்டு போனார்கள். அவைகளில் சிலவற்றையிங்கு சுருக்கமாக கீழேவரையப்பட்டிருக்கிறது.

ஜார்ஜமன்னர் 1902-ம்வருஷத்தில் உலகயாத்திரைக்குப் புறப்பட்டு அநேக தேசங்களையும் ஜனங்களையும் பார்த்துப்பேசி பல விஷயங்களை தெரிந்துகொண்டது மன்றி அவர்கள் நடந்துகொண்ட விதத்தில் தங்கள் அறிவை விசாலப்

படுத்திக்கொண்டார்கள். 1905-ம்வருஷத்தில்இளவரசரும், இளவரசியும் இந்தியாவுக்குப் போய்ச் சுற்றுப்பிரயாணஞ் செய்துவர வேண்டுமென்று பார்லிமெண்டில் பிரஸ்தாபம் நடந்து அதற்காக 20000 பவுன் செலவுக்கு கொடுக்கும்படி தீர்மானமாயிற்று. அக்டோபர்மீ 19உ ஜார்ஜ் இளவரசர் இளவரசி சமேதராய் தாய்தந்தை முதலியவர்களிடம் உத்திரவும் ஆசிர்வாதமும் பெற்றுக்கொண்டு, லண்டனைவிட்டு இந்தியாவுக்குப் பிரயாணமானார். அப்போது பிரபுக்களும் சிநேகிதர்களும் வழியனுப்பக் கும்பல் கும்பலாக வந்திருந்தார்கள். உடனே கப்பல் துறைமுகத்தைவிட்டுப் புறப்பட்டுவிட்டது.

1905-ம்வருஷம் நவம்பர்மீ 9உ வியாழக்கிழமை காலை 10-45 மணிக்கு பம்பாய்த்துறைமுகம் வந்துசேர்ந்து நங்கூரம் போடப்பட்டது. அப்போது பம்பாய்க் கார்ப்போரேஷன் பிரஸிடெண்டாயிருந்த சர். பி. எம். மேட்டா அவர்களும் இராஜப்பிரதிநிதியாயிருந்தவரும், பம்பாய் கவர்னரும் ஸ்டீமருக்குப்போய் வரவேற்று உபசரித்தார்கள். அவர்கள் உபசாரணையையும் மரியாதையையும் இளவரசரும் இளவரசியும் ஏற்றுக்கொண்டு உபசாரஞ் சொன்னார்கள். பிறகு மாலை 4-மணிக்கு ராஜதம்பதிகள் பம்பாய் நகரத்தினுட்பிரவேசித்தவுடன் அந்நகர ஜனங்கள் மரியாதையுடன் நல்வரவுகூறியதை பெற்றுக்கொண்டதுமன்றி, இளவரசியார் தனியாய் டவுன் ஹாலுக்குச் சென்று, அந்நகரசீமாட்டிகள் கொடுத்த நல்வரவுப்பத்திரத்தையும் உபசாரணையையும் அங்கீகரித்தார். பிறகு ராஜதம்பதிகளுக்கு நகரவிசாரணை சங்கத்தார் உபசாரணைப்பத்திரத்தை படிக்கக்கேட்டு கோமகன் அடியில் வருமாறு பதிலுரைத்தார்.

"இளவரசியார் வரவைப்பற்றி நீங்கள் சந்தோஷிப்பதாய் சொல்வது எனக்கும் இளவரசிக்கும் மிகுந்த ஆனந்தத்தை உண்டாக்கியது. அவர்தாம் இங்கு வந்ததைப்பற்றி மிகச் சந்தோஷப்படுகிறார். 30-வருஷங்களுக்குமுன் எனது அருமையான தந்தையார் இந்தியாவிற்கு வந்து, இதேஇடத்தில் முனிசிபாலிட்டியார் கொடுத்த நல்வரவை அங்கீகரித்தார். நாங்களும் அவ்விதமே செய்ய வேண்டுமென்று எண்ணியிருந்தோம். அந்தப்படியே இப்பொழுது நடந்திருக்கிறது. நாங்கள் பலதேசங்களடங்கிய விசாலமான கண்டம் போன்ற இந்தியாவின் ஒவ்வொரு பாகத்தையும், சுற்றிப்பார்க்கையில் இத்தேசத்தார் நல்ல எண்ணமும் விசுவாசமும் அன்பும் எங்களுக்குக்கிடைக்குமே என்று நம்புகிறோம். இங்கு நேராய் வந்து திரும்பும் சிலாக்கியத்திற்கும், செய்தபிரயாணத்திற்கும் எங்களுக்கு அதுவே வந்த பலனாயிருக்கும்"

அந்தச்சமயம் பம்பாயில் "பிரின்ஸஸ் தெரு" என்னும் பெயருடன் புதுவீதியொன்றைத் திறந்தார்கள். இவ்வீதியானது பம்பாய் நகரவிருத்தி சங்கத்தார் கட்டியது. இளவரசதம்பதிகள் பீப்பிள்ஸ் சந்தையின் வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு, சுதேசிகள் வசிக்கும் சிலதெருக்களின் வழியே ஊர்கோலமாய்ச் சென்றனர். அவர்களைத் தரிசிக்க நகர்முழுதும் ஒன்றுகூடி வந்ததுபோல், திலதந் தெளிக்க இடமின்றி ஜனங்கள் நெறுங்கி நின்று அவர்களைப் பார்த்து சந்தோஷமாய் ஆர்ப்பரித்தார்கள். அன்றிரவு வேல்ஸ் இளவரசர் சுதேச அரசர்களுக்கும், பிரபுக்களுக்கும், கனவான்களுக்கும் பேட்டி கொடுத்துக்கொண்டிருந்தார். இளவரசியார் அச்சமயம் கோஷா சீமாட்டிகளைக்கண்டு உறையாடி

ஞர். 16-ந்தேதி பல பொருட்காட்சிச்சாலைக்கும் "பிரின்ஸ் ஆப் வேல்ஸ் மியூசியம்" "Prince of wales Museum" என்னும் கட்டிடத்திற்கும் அஸ்திவாரக்கல் நாட்டினர். இச் சாலைக்கு பத்துலெட்சம் ரூபாய் கைபொப்பங்களால் ஏற் கனவே கிடைத்து விட்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இளவரசியாரும் இந்து, மகாராஷ்டிரம் முதலிய பாஷை களில் சுதேசமாதர்களால் வாசிக்கப்பட்ட உபசாரப்பத்தி ரத்தை ஏற்று "உங்களிடம் பழகி இந்திய நன்னடையை அறிந்து கொள்ளுகிறேன்" என்றபிப்பிராயமடங்கிய பதி லைச்சொன்னர். இவ்வாறு இளவரசதம்பதிகள் பம்பாயில் 5 தினங்கள் சுகமாய்க்காலங்கழித்து 14-உ பம்பாயிலிருந்து சுதேச சமஸ்தானங்களாகிய இந்தூர், உதயபுரி, ஜயப்பூர், பிக்கானீர் இவைகளிற் சிறிதுநாள் தங்கி அங்குள்ள இந்திய ராஜ தம்பதிகளால் உபகரிக்கப்பெற்று 28-உ பஞ்சாப்தேசத் தின் முக்கிய பட்டணமாகிய லாகூர் வந்து சேர்ந்தார்கள்.

இங்கு நாலுநாளிருந்து பக்கத்திலுள்ள சிற்றரசர்களும் பிரபுக்களும் முக்கியஸ்தர்களும் இளவரசர் இளவரசியாரு க்கு மரியாதை செய்ததை அங்கிகரித்துத் தக்கவிதமாய்ப் பதிலளித்தார்கள். டிசம்பர் மாதம் முதல் தேதிபுறப்பட்டு பரிவாரத்துடன் பெஷாவரைச்சேர்ந்து இந்தியாவின்மேல்எவ ரும் படையெடுத்து வாராதபடி வைக்கப்பட்டிருக்கும் சேனை களையும், அங்குள்ள குன்றுகளையும், காடுகளையுங் கண்டு களித்ததுமன்றி அநேக சிற்றரசர்களுக்கும் பேட்டி கொடுத் தார்கள். அங்கிருந்து பிரயாணமாகி, ராவல்பிண்டி, ஜம்ரூ, அமிர்தசாஸ், டில்லி, ஆக்ரா, பாடிப்பூர், லக்னோ, இவைக ளைப்பார்த்துக்கொண்டு டில்லியில் மட்டும் மூன்று நாள் தங்கி மற்ற இடங்களில் ஒருநாளிரண்டுநாள் தங்கியும், அங்

கங்கு கிடைத்த மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு டிசம்பர் மாதம் 29-உயன்று கல்கத்தா வந்து சேர்ந்தார்கள். இளவரச தம்பதிகள் வந்திறங்கினதைத் தெரிவிக்க வெடிகள் முழங்கின. லெப்டினென்ட் கவர்னர் சீப்ஜட்ஜ், லார்ட் பீஷப், நகரத்தலைவர் இன்னும் மற்றவர்களும் வந்திருந்து சந்தோஷத்துடன் நல்வரவு கூறினார்கள். பிறகு ராஜதம்பதிகளை விசித்திரமாக அலங்கரிக்கப்பட்டிருந்த மண்டபத்திற்கு அழைத்துச் சென்று நகரபரிபாலன சபையாரால் நல்வரவு பத்திரம் வாசிக்கப்பட்டதுமன்றி நவரெத்தினங்களிழைத்த அட்டிகை ஒன்றை பரிசாகவுங் கொடுத்தார்கள்.

அதை இளவரசியார் தமது கண்டத்திலணிந்து கொண்டார். அதற்காக சந்தோஷமாய்ப் பதிலளித்து ராஜமாளிகைக்குச் சென்றார்கள். ஜனவரி மாதம் 2-ந் தேதி கல்கத்தா மைதானத்தில் ராஜ தம்பதிகளுக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த பந்தலில் இத்தேசத்து பழக்க வழக்கங்களை அறிவிக்கத்தகுந்த விதமாக ஏற்பாடுகளைச்செய்திருந்தார்கள். அன்று பிஷிலாமா என்பவரும், டாங்காபெல்லாப் என்பவரும் சிக்கிம் மகாராஜாவும், இளவரசரைச் சந்தித்தார்கள். 4-ந்தேதி யன்று விக்டோரியா மஹாராணியின் ஞாபகார்த்தமாக ஒரு கட்டிடங்கட்ட யேற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்தில் அஸ்திவாரக்கல்வைக்கும்பொழுது லார்ட்கர்ஸனைப் புகழ்ந்து லார்ட்டு மிண்டோ கட்டிடத்தைக் கட்டி முடிப்பார் என்று சொன்னார். அன்று தர்பங்கா மகாராஜாவினால் பெற்ற லெட்சம் ரூபாயில் 90000 ரூபாயை வைத்தியசாலைக்குக் கொடுத்து 10000 ரூபாயை டவ்ரின் ஆஸ்பத்திரிக்குக் கொடுத்தார்.

ஜனவரி மாதம் 7-ந்தேதி மத்தியானம் பார்க்ப்பூருக்கு வந்து மூன்றுநாள் தங்கி 11வ பர்மாவுக்கு புகைக்கப்பல் மார்க்கமாய் சென்று ரெங்கூன் பட்டணத்திலும் பின்னும் பல விடங்களிலும் தங்கி அங்கு 'விக்டோரியா மிமோரியல் சிங்காரத்தோட்டத்தை' திறந்துவைத்ததுமன்றி, பௌத்த ஆலயங்களையும் பாணவேடிக்கைகளையுங் கண்டு களித்து மாண்டலே பட்டணத்துக்கு சென்று கோட்டை கொத்தளங் களையும் சிங்காரவனங்களையும் ஆலயங்களையும் விநோதங் களையும் பார்த்து ஆனந்தமடைந்து திரும்பி ரெங்கூன் வந்து சென்னைக்கு புறப்பட்டார்கள். அவர்களேறிவந்த ஸ்டீமர் 1906-ம்ஸு ஜனவரிமீ 24வ மாலை 4-மணிக்கு சென்னைத் துறைமுகம் வந்து நங்கூரம் போடப்பட்டது.

---

## II சென்னைக்கு விஜயம் செய்தது.

நமது மாட்சிமை தங்கிய இளவரசரும் இளவரசியாரும் 1906-ஸு ஜனவரிமாதம் 24-ந் தேதி சாயங்காலம் சுமார் 4-மணிக்கு சென்னை துறைமுகத்தில் வந்திறங்குவார்களென்ற ஏற்பாடுகளை அறிந்த பிரஜைகள் நல்ல உடைகளையும் ஆபா ணங்களையும் அணிந்து சமுத்திரக்கரையடுத்த ரோட்டிலும் அதைத் தொடர்ந்து ராஜகுமார தம்பதிகள் போகும் தெருக் களிலும், நெருங்கி கூட்டங் கூட்டமாய் நின்றார்கள். பாட சாலை மாணுக்கர்கள் கோட்டைக்கு மேற்கிலிருந்து மௌ ஒன்ட் ரோடு வாராவதி வரையிலும் அமைக்கப்பட்டிருந்த காலரியில் தங்கள் உபாத்தியாயர்களுடன் உட்கார்ந்திருந் தார்கள். இடையிடையே அழகான பெண்களும், எவ்வர்ண ஸ்திரீகளும், தங்கள் தோழர்களுடனும், சிலர் பர்த்தாக்

களுடனும், சிங்காரமான உடைகளைத் தரித்துக்கொண்டும், நெருங்கி நிறைந்து நின்றார்கள். சிலர் உட்கார்ந்துகொண்டும் சிலர் இனிய கீதங்களைப் பாடிக்கொண்டு மிருந்தார்கள் மாணவர்கள் கொடிகளைப் பிடித்துக்கொண்டு நின்றார்கள் ஹைகோர்டுக்கெதிரிலும் கிரிஸ்டியன் காலேஜுக்கு வெளியிலும் பற்பல வர்ணமுள்ள கொடிகளால் இடைவெளிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மௌவுண்ட்ரோடிலுள்ள ஷாப்கள் மிகவும் அலங்காரமாய்க் காணப்பட்டன.

துறைமுகத்தில் ஒரு அழகான பந்தல் அதி அலங்காரமாய் இந்திர சபாமண்டபம் போல் விளங்கிற்று. அந்த விஸ்தாரமான பந்தலில் சில சிற்றரசர்களும், ஜமீன்தார்களும், பிரபுக்களும், கவர்ன்மெண்ட் அதிகாரி முதலியவர்களும் அழகான உடுப்புகளையும், ஆபரணங்களையும், தரித்துக்கொண்டுவந்து வீற்றிருந்தார்கள். சில சிற்றரசர்களும், ஜமீன்தார்களும், புராதனமான ஜரிகை வேலைப்பாடுள்ள உடுப்புகளை அணிந்துகொண்டும், நவரத்னங்கள் இழைத்த ஆபரணங்களைத் தரித்துக்கொண்டும் வந்திருந்தார்கள். பந்தலின் மத்தியில் உயரமான ஒரு பீடம் அமைக்கப்பட்டு அதில் அழகான இரண்டு நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. பிறகு சுமார் 3-45-க்கு கவர்னர் லார்ட் ஆம்திலும், லேடி ஆம்திலும் வந்து ஜஸ்டிஸ். ஸர். S. சுப்பிரமணிய ஐயருடனும், பின்னுஞ் சிலருடனும், ராஜ தம்பதிகளை நல்வரவுகூறி அழைத்துவரும்பொருட்டு படகேறி நீராவி மரக்கலத்திற்குச் சென்று, ராஜதம்பதிகளை அழைத்துக்கொண்டுவந்தார்கள். கரைக்கு வந்தவுடன் 31-குண்டுகள் போடப்பட்டன. பாண்டு வாத்தியங்கள் வாசிக்கப்பட்டன. அவர்கள் தங்களுக்கென்று

போடப்பட்டிருந்த நாற்காலிகளில் வீற்றிருந்த பிறகு 31 குண்டுகள் போடப்பட்டது. இளவரசரும், இளவரசியும் உயர்ந்த வெள்ளை ஆடைகளைத் தரித்துக்கொண்டு முக மலர்ச்சியுடன் தங்கள் பிரஜைகளைப் பார்க்கப் பிரியமுடைய வர்களாய் விளங்கினார்கள். உடனே சென்னைநகர் நகர பரி பாலன சபையார் தங்களுடைய வந்தனோபசாரப் பத்திரிகை யை அழகான வெள்ளிப் பெட்டியில்வைத்து இளவரசரிடம் கொடுக்க அவர் சந்தோஷத்துடன்பெற்றுக்கொண்டு அடியிற் கண்டபடி பதிலுரைத்தார்.

“இளவரசியாருக்கும், எனக்கும் நல்வரவு கூறியதற்கு நான் மிகவும் வந்தனமளிக்கிறேன். இந்த பிரிட்டிஷ் இந்தி யாவில் வெகு வருஷங்களுக்கு முன்னால் எங்களுக்கு கிடைத்த இந்நகருக்கு, எப்போது வருவோமென்று எண்ணிக்கொண்டிருந்தோம். சென்னை வாசிகளும் நீங்க ளும் எங்கள் வரவுக்காக இவ்வளவு விமரிசையுள்ள ஏற்பாடு களைச் செய்ததைக் குறித்து சந்தோஷிக்கிறோம். உங்களை யும், இத்தேசத்து ஜனங்களையும், எனது நண்பராகிய லார்டு ஆம்தில்லையும் பார்க்க நேர்ந்ததைப்பற்றியும், சந்தோஷிக் கிறோம். உங்களுடைய பூரண இராஜ விசுவாசத்தை, நமது சக்ரவர்த்தியாருக்கு அவசியம் தெரிவிக்கிறேன். எனது பிரியமுள்ள தகப்பனார் சென்னைக்கு வந்து 30-வருஷங்களா யினும் அவர் உங்களையும், நீங்கள் அவருக்குச் செய்த மரியா தைகளையும், மறக்கவில்லை. கனவான்களே! நீங்கள் எங்க ளது நல்வரவை கோறியதற்காக, மறுபடியும் வந்தனமளிக் கிறோம்.”

உடனே நாலு குதிரைகள் பூட்டிய அழகான ரதத்தில் ராஜதம்பதிகள் ஊர்வலம்வந்தார்கள். துருப்புகளும் ராஜபிருது களும் பார்வைக்கு அழகாயிருந்தது. தெருக்கள் நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. சுதேச அரசர்களும், ஜெமீன் தார்களும், இன்னும் மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்களும், பிரமுகர்களும், வரிசை வரிசையாகச் சென்றார்கள். மாணாக் கர்கள் ராஜதம்பதிகளைக் கண்டு மகிழ்ந்து கரகோஷம்செய்து "இளவரசரும் இளவரசியாரும் வாழி வாழி" என்று ஆர்ப் பரித்தார்கள். பள்ளிக்கூடச்சிறுவர்களுக்கு, சிற்றுண்டிகள் அளிக்கப்பட்டது. ஊர்கோலம் முடிந்ததும் கவர்ன்மெண்டு அவுஸுக்குச் சென்றார்கள். அன்றிரவு ஒரு ராஜ விருந்து நடந்தது. அதற்கு அநேக பிரபுக்களும், ராஜாக்களும் வந் திருந்தார்கள். அங்கு சிலர் இளவரசருக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்கள். மறுநாட் காலையில் இளவரசி யார் திருவல்லிக்கேணி விக்டோரியா கோஷா ஆஸ்பத்திரி யை பார்த்தார். 25ந்தேதி வியாழக்கிழமை இரவு ஐலண்டு மைதானத்தில், சென்னை நகரவாசிகள் இளவரசருக்கு நல் வரவு கூறி உபசரித்தார்கள். ஜனங்கள் திரள் திரளாக வந் திருந்தார்கள். சுமார் 9-மணிக்கு உபசாரனைக் கமிட்டி சேர் மேன் கனம் ஜஸ்டிஸ், ஸர். எஸ். சுப்பிரமணியய்யர் இளவரச ருக்கும் இளவரசியாருக்கும் நல்வரவு பத்திரம் வாசித்து ஒரு பெட்டியில் வைத்துக் கொடுத்தார். அதை இளவரசர் பெற் றுக்கொண்டு, அடியிற்கண்டபடி பதில் சொன்னார்.

"கனவான்களே! சென்னை மாகாணத்திற்கும், கொச்சி புதுக்கோட்டை என்ற இராஜ்யங்களுக்கும் பிரதிநிதிகளாக உங்களை இங்கே பார்க்கலாமென்று, உங்கள் கவர்னர் லார்ட்

ஆம்தில் சொன்னதைக் கேட்டு நான் மகிழ்ந்தேன். இப்போது நீங்கள் வாசித்த ஆதிரவுகொண்ட உபசாரணைப் பத்திரிகை சம்மந்தமாக வேல்ஸ் இளவரசியின் பொருட்டாகவும், என் பொருட்டாகவும், உங்களுக்கு மனப்பூர்வமாக நன்றி பாராட்டுகிறேன். பிரிட்டிஷ் குடிகளின் நன்மையைப்பற்றிய எல்லா விஷயங்களிலும் நாங்களிருவரும் மிகுந்த சிரத்தையெடுத்துவருவதாக நீங்கள் கூறியது உண்மையே. பிரிட்டிஷ் ராஜ்யத்தின் தூரமான இந்த ஸ்தலங்களைப் பார்வையிடுவதன் பெருமையே நாங்கள் முற்றிலும் அறிந்தவர்களாகவிருக்கிறோம். தென்னிந்தியா எங்களுக்கு நல்வரவு கூறியதின்பொருட்டு மிக நன்றிகொண்டிருக்கிறோம். இம்மாகாணத்தில் புகழ்பெற்ற நகரங்களிலே மற்றவைகளைப் பார்வையிடாமலும் இந்திய சமஸ்தானங்களில் சென்று தாமதியாமலும், நாங்கள் போக நேர்ந்ததுபற்றி விசனிக்கிறோம். திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை என்ற இடங்களைப் பற்றியும், திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களின் அழகைப்பற்றியும் நாங்கள் படித்திருந்தபோதிலும் அவைகளைக் கண்டு களிக்க முடியவில்லை. இந்தியாவில் அநேக நாள் தங்க சாவகாசமில்லாமையால் உங்களையெல்லாம் இன்று மாலை பார்த்துக்கொண்டதின் பொருட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இப்பெருந் தேசத்தின் விஷயத்திலும், இதன் ஜனங்களின் விஷயத்திலும், நாங்கள் அன்பும் ஆதரவும் கொண்டிருப்பதாக நீங்கள் தெரிவித்தது சிறிதேனும் உபசாரவசனமில்லை; மெய்தானென்று நாங்கள் உறுதியாய் சொல்வதை உங்கள் ஊர்களிலுள்ள மித்திரர்களிடம் அறிவிப்பார்களாயின் மிகுந்த நன்றிக்கிடமாவீர்கள்.”

26உ வெள்ளிக்கிழமை காலை 11-மணிக்கு இளவரசர் இளவரசியாருடனும் கவர்ணருடனும் மியூசியத்தைப்பார்த்து விட்டு கன்னிமாரா புத்தகசாலைக்குச் சென்று திரும்பினர். பிற்பகலில் கொச்சி ராஜாவைப்பார்க்கச் சென்றார். பின்பு இளவரசர் ஜஸ்டிஸ், எஸ். சுப்பிரமணியருக்கும் ஸர். வி. பாஷியம் அய்யங்காருக்கும், பங்கனப்பள்ளி நவாப்புக்கும், சிந்து ராஜாவுக்கும், இன்னுஞ் சிலருக்கும் பேட்டிகொடுத்தார். பின்பு இளவரசர் விக்டோரியா ஞாபகச்சின்ன மாளிகைக்கு அஸ்திவாரக்கல் நாட்டினர். அப்போது நீண்ட அழகானபேச்சும் பேசினர். பிறகு வந்தனங்கூறி சபைகலைந்தது.

27உ பிற்பகலில் இளவரசர் இளவரசி கவர்ணர். இவர்கள் இராஜகோலத்துடன் கோட்டைகளுக்குப்போய் அங்குள்ள அரண்மனைகளையும் கட்டிடங்களையும் பார்த்துவிட்டு கவுன்ஸில் மண்டபத்துக்கு சென்று மெஸர்ஸ் V. C. தேசிகாச்சாரி ஜஸ்டிஸ் பென்ஸன், H. C. கிங் முதலியவர்களுக்கு சர் பட்டம் அளித்தார். பாங்க்வெட்டிங்ஹாலில் இளவரசியாருக்கு சில முக்கியமான ஸ்திரிகளை லேடி ஆம்தில் அறிமுகம் செய்துவைத்தார். இறவு 9-மணிக்கு துறைமுகத்தில் வாணவேடிக்கை நடந்தது.

28உ ஞாயிற்றுக்கிழமை காலையில் இளவரசர் இளவரசியுடனும் இன்னும் மற்றப் பரிவாரங்களுடனும் கோட்டையிலுள்ள ஸெண்ட்மேரி தேவாலயத்தை அடைந்து கடவுளை வணங்கினர்கள். அன்று இரவு $9\frac{1}{2}$மணிக்கு இளவரசர் இளவரசி சமேதராய் பெங்களூருக்கு புறப்பட்டார். அவரை வழியனுப்ப அநேகர் சென்டிரல் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள். ஸ்டேஷன் நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அப்போது ஒரு கடிதம் கவர்னராகிய லார்டு ஆம்திலுக்கு அனுப்பினர். அது பின் வருமாறு:—

"சென்னைக்கு விஜயஞ்செய்ததில், வேலஸ் இளவரசியும் நானும், சந்தோஷமடைந்தோம். நாங்கள் இங்கு புறப்பட்டு வந்ததினத்தன்றும், அதற்கு முன் ஜனங்களிடையேகாணப் பட்ட சமயங்களிலும், ஜனங்கள் எங்களுக்கு ஆசையுடன் நல்வரவு கூறியதைப்பற்றி நாங்கள் நன்றி பாராட்டுகிறோம், என்பதை தாம் ஜனங்களுக்கு அறிவிக்க விரும்புகிறோம். எங்களை வரவேற்றல் உபசரித்தல் ஆகிய விஷயங்களில் சென்னை வாசிகள் மிகவும் ஆலோசனையுடனும், சிறத்தை யுடனும் ஏற்பாடுகள் செய்து வைத்திருந்ததும் எங்களுக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணிற்று என்பதையும் அவர்களுக் குத் தெரிவிக்க வேணும். தென்னிந்தியாவிலுள்ள ஜனத் தலைவர்களைப்பார்த்து பேசும்படியான சவுகரியத்தை எனக்கு தாம் அமைத்ததற்காக உமக்கும் நன்றி செலுத்துகிறேன். நாங்கள் சென்னையையும் அதன் ஜனங்களையும் எங்கள் ஞாபகத்தில் வைத்திருப்போம்." சென்னை வரவேற்பு 24உ முதல் 29உ இராத்திரி 9½ மணிவரையில் நடந்தது.

ஜனவரிமீ 29உ இளவரச தம்பதிகள் இராத்திரி சென் னையைவிட்டு புறப்பட்டு பெங்களூர் சென்டிரல் ஸ்டேஷனை வந்தடைந்தவுடன் நகரவாசிகளின் உபசாரத்தையும் வந்தனத் தையுமேற்று மைசூருக்குச் சென்று மைசூர் மகாராஜாவால் உபசரிக்கப்பட்டபின் மகாராணி காலேஜைச் சேர்ந்த சில பிரமுகர்களும் சீமாட்டிகளும் ஒரு வரவேற்புபத்திரம் வாசித் துக் கொடுத்தார்கள். அதைப் பெற்றுக்கொண்டு "நாங் கள் இந்தக்காலேஜ் நன்றாக நடத்தப்பட்டு வருகிறதைப் பற்றி மிகவும் சந்தோஷிக்கிறோம். இதை வந்து பார்க்க எங்களுக்கு அவகாசமில்லாததைப்பற்றி விசனிக்கிறோம். உங்கள் விடாமுயற்சி இந்த பரோபகாரியச் செயல் நிறை வேறு மென்று நம்புகிறோம்" என்று பதில் சொன்னர். பிறகு சிவசமுத்திரம், காவேரி நீர் வீழ்ச்சி முதலியவற்றைப் பார்த்து விட்டு காசி ஹைதராபாத் முதலியவற்றையும்

பார்த்து ஜென்மதேசம் சென்றார்கள். இப்படியாக சுமார் ஐந்தரைமாசகாலம் இந்தியாவில் பிரயாணஞ்செய்து 1906-ம் வருஷம் மேயீ 7உ போர்ட்ஸ்மத் என்னும் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது இவர்களுடைய 4 குழந்தைகளும் எட்வர்டு சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் கப்பலில் வந்து சந்தித்து சந்தோஷித்தார்கள். ரெயில்வே ஸ்டேஷனில் மிஸ்டர் ஜான்மார்லியும் லார்ட் ராபர்ட்ஸூம் பின்னும் சிலபிரபுக்களும் சிநேகிதர்களும் மற்றவர்களும் இளவரச தம்பதிகளை வந்துபார்க்க கூடியிருந்தார்கள். மரியாதையாக பீரங்கி வெடிகள் முழங்கின. கடைசியாக அரண்மனைக்கு வந்து தாய் தந்தையர்களிடம் தங்களுடைய சுற்றுப்பிரயாணத்தை விவரித்துச்சொன்னார்கள்.

ஜென்மதேசத் தலைநகரமாகிய லண்டன் போய்ச்சேர்ந்ததும் லண்டன் நகரில் அதற்கென்று கில்டுஹாலில் ஓர் ராஜ விருந்து நடந்தது. அவ்விருந்துப்பேச்சில், இந்தியா இன்னும் அன்பாயாளப்படவேண்டுமென்று சொன்னார்.

## III கில்டுஹாலில் இளவரசர் பேச்சு.

---

இளவரச தம்பதிகள் இந்தியயாத்திரையை முடித்துக்கொண்டு லண்டன்நகர்போய்ச் சேர்ந்ததும் அவர்களுக்கு நல்வரவு கூறும் பொருட்டு கில்டு ஹாலில் ஒரு பெரிய ராஜ விருந்து நடந்தது. அப்போது ஜார்ஜ்மன்னர் அடியிற்கூறும் அபிப்பிராயத்தை யடக்கி ஒரு விருந்துப்பேச்சு பேசினார். அதின் சுருக்கம் இந்தியாவைபற்றிய மட்டில் அடியில் வருமாறு காணப்பட்டிருக்கிறது.

### சீமான்களே! சீமாட்டிகளே!!

"நாங்கள் இந்தியாவுக்குப்போய் க்ஷேமகரமாய்த்திரும்பி வந்ததற்காக நீங்கள் என்னை வரவழைத்து இவ்விருந்து செய்ததை ஏற்று மனப்பூர்வமாய் சந்தோஷப்படுகிறேன் மகாராஜா சக்ரவர்த்தியின் உத்திரவுப்படி பிரயாணஞ்செய்து வந்திருக்கிறோம். இந்தியா கவர்ன்மெண்டார் நாங்கள் ரயி

வில் பிரயாணஞ் செய்வதற்கு நல்ல யேற்பாடுகளை செய்திருந்தார்கள். குவாலியரில் பஞ்சமாயிருப்பதால் 6000-த்துக்கு அதிகமாக குழந்தை ஸ்திரி புருஷர் ஆகிய இவர்கள் போஷிக்கப்பட்டு வருகிறார்கள். சக்தியுள்ளவர்கள் வேலை செய்து ஜீவிக்கிறார்கள். நாங்கள் சுதேசமன்னர்களுடைய ராஜ்யங்களையும் பார்த்து சந்தோஷமடைந்தோம். 30 கோடி ஜனங்களையுடைய இந்தியாவை ஒரு தேசமாக எண்ணக் கூடாது. இது ஒரு பெரியகண்டம் போலிருக்கிறது பற்பல மதஸ்தர் பற்பல பாஷைகளை வழங்கிவருகிறார்கள். நாகரீகம் அந்தந்தஸ்துக்கு தகுந்தாற்போலிருக்கிறது. வடக்கேயுள்ள இமயகிரி பர்வதத்தின் அழகையும் எல்லையில்லாத வனாந்தரங்களையும் பெரிய நதிகளையும், பர்வதங்களையும் புராதனக் கட்டிடங்களையும் அவைகளுக்குறிய சரித்திர சம்மந்தங்களையும் கண்டு ஆச்சரியமடைந்தோம். இந்தியருடைய சாந்தகுணம் நல்லநடவடிக்கை ராஜவிசுவாசம் மதவைராக்கியம் முதலியவைகளை தெரிந்துகொண்டேன். நமது நியாயமான அரசாட்சியில் அவர்களுக்கிருக்கும் நம்பிக்கையும் எனக்குத்தெரியும். நான் பார்த்தவைகளிலிருந்தும் கேட்டவைகளிலிருந்தும் இந்தியர்களின்மீது அனுதாபம் இன்னுமதிகமாக காட்டிவந்தால் இந்தியாவை ஆண்டுவருவது இன்னும் சுலபமாகவிருக்குமென்பதைத் தெரிந்துகொண்டேன். இந்தியா இன்னும் அன்பாயாளப்படவேண்டும். புதிய வருஷப்பிறப்பின்போது கல்கட்டாவிலிருந்தோம் விக்டோரியா மிமோரியல் ஹாலுக்கு அஸ்திவாரக்கல்லை வைத்து சந்தோஷித்தேன்—ஆனலிங்கிருந்து செல்லும் கனவான்கள் அனுதாபத்தைக் காட்டி சகோதரத்துவத்தை விருத்திசெய்துவரலாம். அப்படி இரு தேசமும் ஐக்கபத்துடன் பரஸ்பரன்றி இருக்குமாறு கடவுள் அருள்புரிவாராகவென்று முடித்தார்.

அன்பே பிரதானம்
அதுவே வேதமாணம்.

ஏழாவது எட்வர்டு சக்ரவர்த்தியவர்களுக்கு 1906-ம் ஞுத்தில் இந்தியாராஜப்பிரதிநிதியவர்கள் "இளவரச தம்பதிகள் இந்தியாவுக்கு வந்து போனதில் இந்திய ஜனங்

களுக்கு அடங்கா மகிழ்ச்சியைக்கொடுத்தது” என தந்தி மூலமாய் தெரிவித்தார்கள். அதை சக்ரவர்த்திபவர்கள் பெற்று, அன்புள்ள எனது பிரஜைகள் காட்டிய விசுவாசத்திற்காக மனம்பூரிப்படைகிறேன் என்று பொருள்படும்படி தந்திமூலமாய்த் தெரிவித்தார்கள்.

நம் ஜியார்ஜ் மன்னர் 1908-ம் வருஷத்தில் ஷெப் போர்ட்டு புஷில் என்னுமிடத்தில் ஒரு பொருட்காட்சியை திறந்தார் பிறகு கன்னடா தேசத்துக்கு போனதில் அங்குள்ளார் இளவரச தம்பதிகளின் உருவம் ஒவ்வொரு ஸ்டாம்பிலுமிருக்கும்படி செய்து சந்தோஷித்தார்கள். 1909-ம் வருஷத்தில் அத்யட்ச குருவிசாரணை ஸ்தானத்தின் ஆயிரவருஷ ஸ்தாபனக் கொண்டாட்டத்திற்கு போயிருந்தார்கள். வடதுருவத்திற்கு “கமெண்டா பியரி” போய் வந்ததைக் குறித்து தீர விசாரிக்க விரும்பினார். பிறகு இவர் தகப்பனார் ஏழாவது எட்வர்டு சக்ரவர்த்திபவர்கள் 1910-ம் வருஷம் மேமீ 6வ இறந்துபோக அந்தஸ்தானத்தை வார்சு முறையிலேற்றுக் கொண்டார்.

## IV இங்கிலீஷ் ராஜ்யத்தின் பெருமை.

இங்கிலண்டின் தலைநகரான லண்டன் பட்டணத்திலிருந்து தற்காலம் ஸாக்ஸ்கோபர்க்கு வம்ஸத்திலுதித்த அரசரால் நம்மிந்தியா ஆளப்பட்டுவருகிறது என்பது யாவருமறிவார்கள். ஏழாவது எட்வர்டு சக்ரவர்த்தியிடமிருந்து ஐந்தாவது ஜார்ஜசக்ரவர்த்திக்கு கிடைத்தராஜ்யத்தின் பெருமையையும் அருமையையும் சிறிது எழுதுகிறோம். நமது ஐந்தாவது ஜார்ஜ் சக்கிரவர்த்திக்கு வம்ஸபாரம்பரையில் ஆளும்படி எவ்வளவு கிடைத்ததோ அவ்வளவு இராஜ்யம் இதுவரையில் எந்தராஜாவாலும் ஆளப்பட்டதில்லை. இந்தப் பிரிட்டீஷ் ராஜ்யத்தில் ஒரு பெரிய கண்டமும் 100 பரியாயத்தீவுகளும் 500 தேச முனைகளும் 1000 பெரிய ஏரிகளும் 2000 நதிகளும் 10 000 தீவுகளுமடங்கியிருக்கின்றன. விக்டோரியா மகாராணியார் சிம்ஹாசனமேறும் போது அவரது ராஜ்யம் 83 லெட்சம் சதுரமைல் விஸ்தீரணமுள்ளதாயிருந்

தது. அவர் எட்வர்டு சக்ரவர்த்தியிடம் விட்டுப்பிரிந்த பொழுது 300 லெட்சம்சதுரமைல் கொண்டதாயிற்று. மற்ற இராஜ்யங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் பிரிட்டிஷ் ராஜ்யமானது—பிரான்சு தேசத்திலும் 53 மடங்கு பெரியதாயும் ஜர்மனி ராஜ்யத்திலும் 52 மடங்கு பெரியதாயும் அமெரிக்கா ஐக்கியமாகாண மென்கிற யூனைட்டெட்ஸ்டேட்டைக்காட்டிலும் மூன்றரைமடங்கு பெரிதாயும் ஐரோப்பா கண்டத்திலும் 3 மடங்கு பெரிதாயுமிருக்கிறது இதற்கு முன் 7 கோடியே 50 லெட்சம்பவுனுகளிருந்த அரசிறை இப்போது சுமார் 30 கோடியே 50 லெட்சம் பவுனுகவிருத்தியடைந்திருக்கிறது. இன்னும் சிறிது காலத்தில் 40 கோடி பவுனுகவிருத்தியடையக்கூடுமென்றெதிர்பாக்கலாம் ஆனல் நமது மகாராஜா சக்ரவர்த்தியின் குடிகளில் ஆங்கிலேயர் 8-ல் ஒரு பங்கிற்கதிகமில்லை மற்றைய ஏழுபங்கும் பலஜாதி பலமதம் பல பல பாஷைகளையு முடையவராயு மிருக்கின்றார்கள். உலகத்திலுள்ள 180 கோடி ஜனங்களில் சுமார் 80 கோடி ஜனங்களில் பிரிட்டிஷ் ஆளுகையிலிருக்கக்கூடுமென்றெண்ணப்படுகிறது. கிரேட்பிரிட்டனில் எங்குபார்த்தாலும் ரயில் போடப்பட்டிருக்கிறது. இந்தியாவிலோ 23000மைல் ரயில்போடப்பட்டிருக்கிறது. தபால் ஆபீசுகளும் நம்மிந்தியாவில் பெருகி 1837-ம் வருஷத்தில் 10 கோடி சிப்பங்கள் தபால்மூலமாய் அனுப்பப்பட்டு வந்தது. இப்போது 500 கோடி சிப்பங்களுக்கதிகமாக விருக்குமென்று மதிக்கப்படுகிறது.

இவ்வளவு மேன்மையும் செல்வாக்கும் ஒழுங்கும் பெருமையும் ஐஸ்வரியமும் படைத்த மகாபெரிய இராஜ்யங்களை 7-வது எட்வர்டு மகாராஜா சக்ரவர்த்தி இறந்தவுடன் அதாவது 1910-ம் வருஷம் மேமீ 6உயில் வாரிசு முறைப்படி நமது 5-வது ஜார்ஜ் சக்ரவர்த்தி யடைந்தார். இராஜ்ய முழுமைக்கும் இவரே சர்வாதிகாரியாய் விளங்கிநிற்கிறார். அப்படிக்கிருந்தாலும் தந்தையாரிறந்தவுடன் ஜார்ஜ் மன்னர், புராதன வழக்கப்படி சென்டு ஜேம்ஸ் அரண்மனையில் ஐந்தாவது ஜார்ஜ் அரச சக்ரவர்த்தி என்று அறிக்கைபத்திரம் வாசிக்

கூட்டப்பட்டது. அப்போது ஜார்ஜ் சக்ரவர்த்தியுடன் அவரது இரண்டு குமாரர்களும், லார்டுரோஸ்பரியும், குருமார்களும் மற்றவர்கள் பலரும் வீற்றிருந்தார்கள் அப்போது சிம்ஹாசனத்திலிருந்து பிரஸ்தாபித்ததுமன்றி ஜார்ஜ் அரசர் தமது தந்தையார் இறந்த துக்க சமாசாரத்தை உலகத்தாருக்கும், கப்பற்படை, காலாட்படை முதலியவர்களுக்கும், அசேஷ மகா ஜனங்களுக்கும் பின்வருமாறு தெரிவித்தார்கள்.

## 5-வது ஜார்ஜ் சக்கரவர்த்தி
## V இந்தியருக்கனுப்பிய செய்தி.

"என் தந்தை, மகாராஜா சக்கிரவர்த்தி இறந்ததால் நேர்ந்த துக்கத்தை இந்திய ஜனங்கள், மதம், அந்தஸ்து, முதலிய பேதங்களில்லாமல் பாராட்டி அனுதாபமும் விசுவாசமும், காட்டியிருப்பதையும் கவர்னர் அனுப்பிய செய்தியைக்கொண்டு தெறிந்து சந்தோஷத்தை அடைந்தேன். அவர் மரணத்தைக்குறித்து எல்லாவிடங்களிலும் ஒரே விதமாய் துக்கங்காட்டப்பட்டிருப்பதை நினைக்க என் மனம் நெகிழ்கிறது. அவர் இந்தியாவைப் போய்ப்பார்த்து வந்ததை எப்போதும் ஞாபகத்தில் வைத்திருந்தார். அதன் க்ஷேமம் அவர் க்ஷேமமென அவர் மனதில் குடிகொண்டிருந்தது. இந்திய மன்னர்களும் பிரஜைகளும் என் சிம்மாசனத்தில் வைத்திருக்கும் பூர்ண விசுவாசத்தை நான் அனுபோகத்தில் அறிந்தவன். அவர்கள் நான் சிம்மாசனமேறினபோது எனக்குச் சேவை புரிந்ததை மனதிற்கொண்டேனென்று அவர்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன். என்னுடைய இந்திய ஏகாதிபத்தியத்தின் க்ஷேமமும் சந்தோஷமும் காலஞ்சென்ற சக்கிரவர்த்திக்கும் அவருக்கு முன்னால் மகாராணியாராயிருந்த சக்கிரவர்த்தினிக்கும் எப்படி அக்கரையும் கவலையுமாயிருந்தனவோ அப்படியே எனக்கும் இருக்கும். 50 வருஷகாலமாக நான் உங்கள் கப்பற்படையில் ஊழியஞ்செய்யும் பாக்கியம் பெற்றிருந்தேன். அப்படிச் செய்து வந்தமையால் உங்களிடத்திலிருக்கும் ராஜவிசுவாசமும் உங்

களாது கடமையைச் செய்ய வேண்டுமென்ற திடபக்தியும் எனக்கு நன்றாய்த் தெரியும். புகழ்பெற்ற கப்பற்படையி னால் இவைகள் உண்டாயின. இவைகள் எப்பொழுதும் இருந்து வருமென்று நினைக்கிறேன்."

---

## பத்தாவது அத்தியாயம்.

---

### I லண்டன் மகுடாபிஷேகம்.

1911-ம் ளு ஜூன் மீ 22உ பட்டாபிஷேகத்தினமாக நிச்சயிக்கப்பட்டு ஏற்கனவே உலகமுழுதும் விளம்பரம் செய் யப்பட்டிருந்தது. அத்தினத்தை உலகிலுள்ளார் யாவரும் சுபதினமாகக் கருதியிருந்தார்கள். சக்ரவர்த்திகளின் மகு டாபிஷேகங்களை பார்ப்பதும், தேவாலயங்களின் கும்பாபி ஷேகங்களை தெரிசிப்பதும் யாகங்களை காண்பதும் புண்ய மெனவும், கண்கொள்ளாக் காட்சியெனவும் புருஷார்த்த மெனவும், சாஸ்திரங்கள்கூறுகிறது. அதை அனுசரித்து அர சாங்கத்தாரின் கோருதலுக்காகவும் அமெரிக்கா, ஜெர்மனி, ருஷியா, ஜப்பான், சைனு, ஸ்விடன், இட்டாலி, பிராஞ்சு முதலிய தேசங்களிலிருந்தும், இந்தியாவிலிருந்தும், லெட் சக்கணக்கான ஜனங்கள் வந்து லண்டன் பட்டணமுழுதும் நிறைந்திருந்தார்கள். அவர்களிற் பலர் இராஜவிருந்தாடி களாக உபசரிக்கப்பட்டு வந்தார்கள். மேலே குறிப்பிட்ட தினத்தில் மகுடாபிஷேகம் செய்வதற்காக பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து வெஸ்டுமினிஸ்டர் ஆபே என்னும் தேவாலயத்திற்கு சக்கிரவர்த்தி சக்கிரவர்த்தினியுடனும் பரிவாரங்களுடனும் புறப்பட்டார். அதிர் வெடிசப்தம் முழங்கிற்று. அலங்காரம் செய்யப்பட்டிருந்த வீதிகளெல் லாம், ரமணீயமாக விளங்கியதுமன்றி சக்கிரவர்த்தி தம்பதி களின் வருகையை எதிர்பார்த்து, ஜனங்கள் நிறைந்திருந் தார்கள். அப்போது தங்க முலாம்பூசிய அழகிய எட்டுக் குதிரைகள் பூட்டப்பட்டிருந்த ரதத்தில் வந்து கொண்டி ருந்தார்கள். அப்போது மகுடாபிஷேகஉடைகளணிந்திருந்த

ராஜதம்பதிகளைப் பார்த்த ஜனங்கள், அவர்களின் அழகையும் அணிந்திருந்த ஆபரணங்களின் பிரகாசத்தையும், உடைகளின் உன்னதத்தையும் பார்த்து, இவர்கள் தேவாம்ஸமென்றே புகழ்ந்து பேசினார்கள். லண்டன் நகரத்து அதிகாரியும், ராஜவம்ஸத்தைச்சேர்ந்த பிரபுக்களும், இதர தேசத்து மன்னர்களும், பிரதிநிதிகளும், பிரபுக்களும், கோவிலுக்கு சமீபத்தில் வந்துநின்று, சந்தோஷத்தால் கரகோஷம் செய்தார்கள். தேவாலயத்தினுள் காலை 6½ மணி முதல் 11 மணி வரையில் 7500 முக்கியஸ்தர்கள் வந்து வீற்றிருந்தார்கள் அங்கு கீழேவிரித்திருந்த விலையுயர்ந்த ரெத்தினக் கம்பளங்களின் பற்பலவர்ணங்களும் அலங்கரித்திருந்த மற்றபொருள்களின் தோற்றங்களும், சொல்லவும், எழுதவும் முடியாத விதமாய் அவர்களுக்கு உற்சாகத்தை உண்டாக்கின. பிஷப்புகள், அரசர்கள், பிரபுக்கள், இன்னும் மற்றவர்களணிந்திருந்த உடுப்புகளும், ஆபரணங்களும், ஜொலித்து விளங்கின. அதில் இந்திய மன்னர்களணிந்திருந்த உடைகளும் நகைகளும், விலையேறியதும் இதுவரையில் ஆங்கிலேயர் எவரும் பார்த்திராததுமான காட்சியைதந்தமையால், அதை மற்றவர்கள் பார்த்தவண்ணமையாயிருந்தார்கள். அப்போது அவ்வாலயம் தேவேந்திரச் சபையைப்போலுமிருந்ததுமன்றி ஆத்மார்த்தமான ஞானத்தை விருத்திசெய்வது போலும் விளங்கின.

அவ்விடத்தில் ஜார்ஜசக்கிரவர்த்தி கடவுள் முன்பாக "நாம் தமது பிரஜைகளை சரியாக ஆளக்கடவேன் மன்னர்களுக்கெல்லாம் மன்னனாக கடவுள் கையிலிருந்து எனது கடமையைப்பெற்றேன்" என்றார். 5-வது ஜார்ஜசக்கிரவர்த்தியும், சக்கிரவர்த்தினியும், கோவிலுக்குள் பிரவேசித்தபொழுது குருபார் தமது பரிவாரங்களுடன் நான்கு திக்குகளிலும் நோக்கி வந்திருந்தவர்களைப் பார்த்து "உங்களுடைய அரசராகிய 5-வது ஜார்ஜைப்பாருங்கள். இவர்தான் உங்களுக்கு அரசன். அவரைவழிபடுவதற்கு வந்திருக்கிற நீங்கள் எல்லோருக்கும் வழிபாடு செய்ய இஷ்டமா"? எனக்கேட்டார்.

அங்குள்ளயாவரும் மிகச்சந்தோஷத்துடன் "ஜார்ஜ்மகாராஜா வாழ்க? ஜார்ஜ் மகாராஜன் வாழ்க" என்று சொன்ஞர்கள். உடனே அரசசக்கிரவர்த்திக்கெதிரில் பிரதமகுரு தேவதோத்திரஞ்செய்து "ஐயா தாங்கள் சத்தியஞ்செய்து கொடுக்க இஷ்டமா?" என்று கேட்டார். "இஷ்டந்தான்" என்று மகாராஜா அவர்கள் பதிலுரைத்து "சட்டத்தையும் வழக்கத்தையும், அனுசரித்து நியாயமாயும் சட்டபூர்வமாயும் இராஜ்பாதிகாரம் நடத்துவேன்" என்று சத்தியம் செய்து கொடுத்தார். உடனே பிரதானகுரு பழையகாலத்து விநோதமான கரண்டியிலெண்ணெயை எடுத்து சிலுவை போன்ற அடையாளம் செய்து, அரசனின் தலையிலும் மார்பிலும் உள்ளங்கையிலும் அடையாளஞ் செய்து, "அநேகராஜக்கள் ஆண்டுவந்ததுபோலவே தாங்களும், நியாயமாய் ஆண்டு வரும்படி கடவுள் தங்களுக்கு இப்பதவியைக் கொடுத்திருக்கிறார். அவருடைய கிருபையால் உமது பிரஜைகளைக் காப்பாற்றியும், உமது அகண்ட ராஜ்யத்தை விவேகத்துடனும், ஞாபகத்துடனும், மதசம்பிரதாயங்களுடனும் ஆண்டுவருவீராக என ஆசீர்வதித்தார்.

பலிபீடத்தில் வைக்கப்பட்டிருந்த அழகாக கத்தியை பிரதமகுரு எடுத்துச் சக்கிரவர்த்தியைப்பார்த்து "இந்த நியாயம் பொருந்திய கத்தியை வகித்து தேவாலயங்களைக் காப்பாற்றும்; விதந்துக்களுக்கும், அநாதைகளுக்கும் உதவி புரியும், அழிந்தவைகளைச் சீர்படுத்திச் சரியாய் வைத்துக் கொள்ளும், தப்பிதங்களைக் கண்டித்துச் சீர்படுத்தும், இவ்விதம் செய்தால் எல்லா தர்மகாரியங்களிலும் கீர்த்தி அடைவீர். ஏசுகிருஸ்து நாதரை விசுவாசத்துடன் பணிந்து ராஜ்யத்தை ஆளும்" என தோத்திரம் செய்து அரசர்கையிற் கொடுத்தார். அக்கத்தி உறையின்றி மகுடாபிஷேகச் சடங்கு முழுதும் சக்கிரவர்த்திக்கு முன் கட்டியக்காரர் பிடித்துக் கொண்டிருந்தார். பிறகு சக்கிரவர்த்திக்கு ராஜ உடுப்பு தரிக்கப்பட்டது. "கடவுள் தங்களுக்கு ஞானத்தை அளிப்பாராக அவர் இரக்கத்தால் உண்மை அணைத்துக்கொண்

டிருக்கட்டும். நற்காரியம் என்ற உடுப்பை உமக்குத் தரிக்கட்டும்; என்ற ஸ்தோத்திரம் முழங்கிற்று, பலிபீடத்திலிருந்து சிலுவையையும், சக்கிரம்போன்ற பரிசுத்தமான ஆர்ப் என்றதையும், சக்கிரவர்த்தி கையிற்கொடுத்தார். பிறகு முத்திரை மோதிரத்தை சக்கிரவர்த்தியின் வலதுகைச் சிறுவிரலில் தரிப்பித்தார். சிலுவை வடிவம் அமைந்த செங்கோலை வலதுகையிலும் புறாவடிவமமைந்த ராஜதண்டத்தை இடதுகையிலும், தரிக்கப்பட்டது. சமர், நீதி, இவைகளைக்குறிக்கும் ராஜதண்டத்தைப் பெற்றுக்கொள்ளும். கடவுள் உமக்களித்திருக்கிற வாளாயுதத்தைக்கொண்டு ராஜ்யத்தைப் பரிபாலியும். அவர் உமக்கு அருள்புரிவார். அதிக இரக்கத்தை மனதில் பதியவைத்துக்கொண்டு நியாயத்தை நிறவேற்றி துஷ்டர்களைக் கண்டித்து சிஷ்டர்களைப் பரிபாலித்து பிரஜைகளை நல்வழியில் நடக்கச்செய்யும்" என்று ஆசீர்வதித்து பிறகு முடிபுனைதல், இந்தக் கிரீடம் சுவர்ணத்தால் வட்டமாகச் செய்யப்பட்டு விலையுயர்ந்த முத்து இரத்தினம் வைடூரியம் முதலிய நவரெத்னங்களால் இழைக்கப்பட்டதாயுமிருக்கின்றது. பார்வைக்கு ஆங்கிலேயர் அதிகமாய் விரும்புகிற அல்லி என்ற புஷ்பத்தைப்போன்ற சித்திர வேலைப்பாடுள்ளதாயும், தற்காலநாகரீகத்துக்கு ஒத்ததாயும், செய்யப்பட்டிருக்கிறது. அக்கிரீடத்தை பலிபீடத்திலிருந்து பிரதானகுரு எடுத்துச் சக்கிரவர்த்திக்குத் தரிப்பித்தார். உடனே ராஜவம்சத்தார்களும் தங்கள் தங்கள் கிரீடங்களைத் தரித்துக்கொண்டார்கள். "கடவுள் நியாயமும் கீர்த்தியும் பொருந்திய கிரீடத்தை கொடுப்பாராக எங்களது ஆசீர்வசனங்களால் உமது செங்கோல் செழித்தோங்குக, என்று "பிரதம குரு சொன்னார். ஜனங்களும் பிரபுக்களும் நமது சக்கிரவர்த்தியைக் கடவுள் காப்பாற்றுவாராக" என்று சொல்லிக் கரகோஷஞ்செய்தார்கள். வாத்தியங்கள் கோஷித்தன. பீரங்கிகளின் சப்தம் கேட்டது. உடனே பைபிள் என்ற கிறிஸ்து வேதபுத்தகத்தை சக்கிரவர்த்திக்கு இனாமாகக் கொடுத்து அப்பிரதமகுரு அடியில் வருமாறு ஆசீர்வதித்தார் "மாட்சிமைதங்கிய மகாராஜாவே இப்புத்தகத்தை

தங்களுக்கு இனமாகக் கொடுக்கிறோம். இது இவ்வுலகத்தி லுள்ளவைகளுக்கெல்லாம் அதிக விலையுயர்ந்தது, ஞானம் இதிலிருக்கிறது. கடவுள் தங்களை ஆசிர்வதித்து இரட்சிப் பாராக. ஜனங்களுக்கெல்லாம் அரசராக தங்களைச் செய்திருக்கிறபடியால் தாங்கள் சவுக்கியமாய் ஜீவித்திருக்கும்படி தீர்க்காயுளைக் கொடுப்பாராக" இத்துடன் பட்டாபிஷேகச் சடங்குகள் நிறைவேறிற்று. 700 வருஷங்களுக்கு முன் செய்த விலையுயர்ந்த அழகான சிம்மாசனத்தில், நமது ஜார்ஜ் சக்கிரவர்த்தி உட்கார்ந்து சடங்கைச் செய்துகொண்டார். பிறகு விக்டோரியா மேரிராணியாருக்கும், எண்ணெயிடப் பட்டு வலதுகையின் நாலாவது விரலில் மோதிரம் தரிக்கப் பட்டது. ராஜதண்டமும், தந்தத்தால் செய்யப்பட்ட புறா வடிவமைந்த தண்டமும் கொடுக்கப்பட்டது. இவைகளை யெல்லாம் ராணியார் பெற்று அரசசக்கிரவர்த்திக்கு முன் னின்று தலைவணங்கி வீற்றிருந்தார். முதலில் பிரதம குரு நமது அரச சக்கிரவர்த்தியை முழங்காலிட்டு வணங்கி சத் தியஞ்செய்தார். மற்றக் குருமார்களும் முழங்காலிட்டு வணங்கினார்கள். பிறகு இளம் பிராயமுள்ள இளவரசர் ராஜ உடைகளைத் தரித்துக்கொண்டு புராதன மதசம்பிரதாயப்படி சக்கிரவர்த்தியை வணங்கினார். சக்கிரவர்த்தி அன்போடு தன் புத்திரனை ஆலிங்கனம்செய்து ஆசீர்வதித்தார்.

பிறகு மற்றவர்கள் வரிசைப்படி வணங்கினார்கள் கடைசி யில் சக்கிரவர்த்தியும், ராணியும், பலீபீடமிருக்குமிடத்திற் குப்போய், தங்கள் கிரீடங்களையும் ராஜதண்டங்களையும் பக்கத்தில் வைத்துவிட்டு சொர்ணம் வஸ்திரம் முதலியவை களைக் காணிக்கையாக வைத்து கடவுளின் பரிசுத்த நற் கருணையைப் பெற்றார்கள். உடனே பாண்டு வாத்தியம் நமது இறைவன்வாழ்க என்று முழங்கி வாழ்த்துக்கூறிற்று. பிறகு கிரீடத்தை அணிந்துகொண்டு மேரிராணியுடன் ஊர் வலம் புறப்பட்டார்கள். ஜனங்களின் ஊக்கமும் சந்தோஷ மும் தேவாலயத்தில் கட்டுப்பட்டிருந்தபோதிலும், ராஜ தம்பதிகள் வெளிப்பட்டவுடன், ஜனங்கள் சந்தோஷத்தால்

ஆரவாரித்துக்கொண்டாடினார்கள். ஜனங்கள் திரள் திரளாக வந்து கண்கொட்டாமல் சக்கிரவர்த்தியை பட்டாபிஷேக உடையுடன் கண்டு தரிசித்துப்போனார்கள். ராஜதம்பதிகள் சகலரும் தம்மைப்பார்க்கும்படி பக்கிங்ஹாம் அரண்மனையின் மெத்தையில் நின்று மரியாதையாகத் தமது சந்தோஷத்தைத் தெரிவித்தார்கள். இந்தியத்துருப்புகளும் வணங்கி கோஷம் புரிந்தனர். அன்று ராஜகுடும்பத்தாருடன் ஜார்ஜ சக்கிரவர்த்தியும் ராணியும் முக்கியமானவர்களையுங் கூட வைத்துக்கொண்டு விருந்துண்டார்கள். மறுநாள் வெள்ளிக்கிழமை ராஜதம்பதிகள் பிரஜைகளெல்லாம் தங்களைப் பார்ப்பதற்காக காத்திருக்கிறார்களென்றறிந்து தாங்கள் ஊர்கோலஞ் சென்றார்கள். இப்படி ஊர்கோலம் வந்ததூரம் 9 மைலுக்குமேலிருக்கும். ஏழைகளும் மற்றவர்களும் தம்பதிகளைச் சந்தித்து மகாசந்தோஷத்துடனிருந்தார்கள். இந்த ஊர்கோலத்தில் இந்தியமன்னர்களும் பிரபுக்களும் தங்கள் சுதேச ராஜாங்க உடுப்புகளுடன்கூட பவனிவந்ததைக்கண்ட ஜனங்கள், முகமலர்ச்சியுடன் அவர்களுக்கு மரியாதை செய்தார்கள். முதல் வண்டியில் பரோடா மகாராஜாவும், கடைசி வண்டியில் கொண்டால் தாகூர்சாகிப் அவர்கள் தமது மனைவி புத்திரிகளுடனுமிருந்தார்கள். செண்ட்பால் கோவிலில் கடவுள் ஸ்தோத்திரம் முடிந்தவுடன் லண்டன்மாநகரத்து அதிபதி பிரார்த்தித்தபடி கில்ட்ஆலில் லண்டன் நகரத்தார் செய்தவிருந்தை ராஜதம்பதிகள் அநேக மன்னர், பட்டவர்த்தனர், பிரபுக்கள் சீமாட்டிகள் இவர்களுடன் அருந்தினார்கள்.

பிறகு யுத்தக்கப்பல்களைப் பார்வையிட்டார்கள். அங்கு "மங்கோலியா" என்ற யுத்தக்கப்பலில் இந்தியா சிகிரிட்டரியான லார்டு குருவும் லேடிகுருவும் இந்தியதேசத்து மன்னர்களும் தங்கள் ராஜபக்கவலையின்றி வீற்றிருந்தார்கள். சில ஜட்ஜிகளும், கவுன்சிலர்களும் மேல் தட்டிலிருந்தார்கள், லண்டன் துறைமுகத்தில் நின்ற 167 பிரிட்டீஷ் கப்பல்களிலும் 18 இதர தேசத்துக்கப்பல்களிலும் நெருப்பு மஞ்சள் நிறத்துடன், பளீரென்று மின்னிக்கொண்டு சாம்பல் நிறமான

புகை மேலெழும்பிக்கொண்டிருந்தன. சக்கிரவர்த்தி வந்ததும் பீரங்கி சப்தம் கேட்டது. அக்கப்பல்களில் ஜப்பான் தேசத்துஸ்டீமரே முதன்மையானதென்று குறிக்கப்பட்டது. ராஜ தம்பதிகள் அயல் நாடுகளிலிருந்து வந்திருந்தவர்களுக்கு தாங்களே வந்துபார்த்து மரியாதை வசனங்கூறியதும், அவர்களுடைய மேலானஎண்ணங்களையும், நடவடிக்கைகளையுங் குறிப்பதாய்க் காட்டின. உடனே அயல்நாட்டுக் கப்பல்கள் தம் தேசங்களுக்கு பயணப்பட்டன. கடவுள் அரசரைக் காப்பாற்றுவாராக.

## II முடிசூட்டு வைபவமும் சக்கரவர்த்தியின் செய்தியும்.

என்னுடைய பிரஜைகளுக்கு ? முடிசூட்டு வைபவமும் அதைச் சேர்ந்த விசேஷாதிகளும் இப்போது முடிவுக்கு வந்துவிட்டன. அவை நடைபெற்றதெல்லாம் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள பிரஜைகளின் இருதயம் என்னுடனிருந்த தென்பதை நான் பூரணமா யுணர்ந்து அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைச் செலுத்த விரும்புகிறேன். ஆலயத்தில் நடந்த விசேடங்களுள் இந்த முடிசூட்டு வைபவமே மிகவசீகரமானதும் ஆழ்ந்து பதியக் கூடியதுமான விசேஷம்; என்பதை நான் உணருகிறேன், என்னை ஜனங்கள் தங்களுடைய அரசன் என்று மனமாற உவந்து ஏற்றுக்கொண்ட இந்த விசேஷமே என்னுடைய வாழ்நாளில் ஏற்பட்டுள்ள அனுபவங்களுள் ஆத்மார்த்த அனுபவமென்பதை நான் உணர்ந்திருக்கிறேன். வெஸ்டமினிஸ்டரிலும் லண்டனைச் சேர்ந்த பல பாகங்களிலும் காட்டப்பட்ட விசுவாசத்தினால் மட்டும் நான் இவ்விதம் சொல்லவில்லை, ஏகாதிபத்தியத்தின் பலபாகங்களிலும் வந்திருக்கும் நற்செய்திகளாலும் உணர்ந்து சொல்லுகிறேன் இத்தகைய இராஜபக்தி என் மனதில் நன்றாய் ஊன்றி எனக்குப் புதிய ஊக்கத்தையும் நம்பிக்கையையும் கொடுத்து வருகிறது.

ராணிக்கும் எனக்கும் ஜனங்கள் முழுமனதுடன் காட்டிய உதாரமானவும் வெளிப்படையுமான அனுதாபம் எங்கள் பலத்துக்கு உண்மையான மூலாதாரமென்று நம்பி காலை முன்வைக்க நம்பிக்கையுடன் தைரியமுண்டாகிறது. எனக்கும் என்னுடைய பிரஜைகளுக்கு மிடையில் எத்தகைய கஷ்டநிஷ்டூரங்கள் ஏற்பட்ட போதிலும் என் பிரஜைகளுடன் ஒன்றுசேர்ந்து திடமாயும் சாவதானமாயும், பொதுநல நோக்கமாயும், கடவுளுடைய அருளைக்கொண்டு அவைகளை எதிர்த்துப் போராடமுடியுமென்று நான் நம்புகிறேன்."

---

## பதினோராவது அத்தியாயம்.

---

### சக்கரவர்த்தியின் குணாதிசயமும் அவரது கடமைகளும்.

இப்போது கிரேட்பிரிட்டன் ராஜ்யத்துக்கு அரசராயும் இந்தியாதேசத்துக்கு சக்கரவர்த்தியாயுமிருக்கும் 5-வது ஜார்ஜ்சக்கரவர்த்தியவர்களின் இடதுபுரத்தில் இந்தியபிரஜைகளும் வலதுபுரத்தில் பிரிட்டிஷ் பிரஜைகளும் வீற்றிருக்கிறார்களென்றும், உலகத்திலுள்ள அன்னிய வியாபாரிகளும், சில தூதர்களும் எதிரில் வீற்றிருப்பதாகவும் பாவிக்கலாம். அவர்களில் அந்நிய வர்த்தகர் சிலர் இந்தியாவில் கைத்தொழில் விருத்தியாகாமலிருந்தால் இந்திய வியாபாரத்தால் பெரும்பொருளைச் சம்பாதிக்கலாமென்று எண்ணுகிறார்கள். வேறு சிலர் வேறுவிதமாய் நினைக்கிறார்கள், இப்படிப்பட்ட நிலைமையில் நமது சக்கரவர்த்தி இந்திய ராஜ்ய நிர்வாகம் புரிய வேண்டும். குடியேற்ற நாட்டிலுள்ள ஜனங்கள் தங்கள் தங்கள் நன்மையை நாடியே இந்தியாவை அவமதித்து இராஜ்யாதிபத்தியம் நடத்தி வருகிறார்கள். இராஜாங்க விவகாரங்களை நன்றாயறிந்தும் அறியாமலுமிருக்கும் இந்தியப் பிரஜைகளை, முன்னுக்கு கொண்டுவரும் பெரும் பொறுப்பை நமது சக்கிரவர்த்தியவர்களே சுமந்து கொண்டிருக்கிறார்கள் இதே அபிப்பிராயத்தை இளவரசராயிருக்கும்போது தமது இராஜ்யத்திலிருக்கும் பிரஜைகள் எந்தமதஸ்தராலும் எந்த

நிறத்தாராலும் எந்த வகுப்பை சேர்ந்தவர்களாயிருந்தாலும் அவ்வளவு பிரஜைகளும் லண்டன் நகரத்திலுள்ள தமது தகப்பனாரின் புத்திரர்களுக்கு சமானமானவரென்றே சொல்லியிருக்கிறார். அவ்விதம் பாராட்டி இந்தியாவிற்கு நன்மை செய்யுங்காலம் வந்துவிட்டது. இனி வறுமை நீங்கி நன்மை வளருமென்பதை நிச்சயமாய் எதிர்பார்க்கலாம். ஒருபானை சோற்றிற்கு ஒரு சோற்றை பதம் என்பது போல் நமது சக்கரவர்த்தியின் குணத்தை இந்த வசனங்களைக் கொண்டும் நடத்திவரும் திருத்தங்களைக்கொண்டும் இந்தியரும் மற்றவரும் நன்றாய்த் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆயினும் ஜார்ஜ்சக்கரவர்த்தியின் குணாதிசயங்களிற் சிலதை சுருக்கி கீழே எழுதுகிறோம்.

பகிமை தங்கிய நம் சக்கிரவர்த்திக்கு வேட்டையாடுவதில் அதிகப்பிரியம். அதையே நோக்கமாகக் கொண்டு, தான் குறிவைத்ததை செய்தபிறகு திரும்பிவருவார். தான் திருப்தியடையுமட்டும் வேட்டையாடுவார். நம்மவர்கள் செய்வதுபோல் இவர் ஆரம்ப சூரத்துவமாக ஒரு காரியத்தையுஞ் செய்வதில்லை. ஒவ்வொன்றையும் நிதானித்து குறிவைத்தபடி செய்து முடிப்பது வழக்கம். இவருக்கு புட்பால் (Foot Ball) என்னும் பந்தாட்டத்தில் பிரியமதிகம். சூதாட்டமுதலியவைகளுக்கு போகமாட்டார். அதை முற்றிலும் வெறுக்கிறார். மகாராணிக்கும் இதே குணந்தானுண்டு, அரசருக்கு குதிரைச்சவாரியில் பிரியமாகையால் அதிலும் தேர்ந்தவராயிருக்கிறார். இவர் காலையில் எழுந்திருப்பார். அதுபோலவே இவர் குழந்தைகளும் தங்கள் படுக்கையைவிட்டு அதிகாலையிலேயே எழுந்திருப்பார்கள். இவர்களுக்கு வீட்டு வழக்கத்தில் நல்ல பழக்கமுண்டு, தங்கள் குழந்தைகள் தங்களைவிட்டு பிரிந்திருக்க ஒருபோதும் சம்மதிக்கமாட்டார்கள். இவர்கள் தங்கள் குழந்தைகளிடத்தில் அதிகப்பட்சம் வைத்திருந்தார்கள். குழந்தைகளை நல்வழியிலும் கொண்டுவந்தார்கள், குழந்தைகளை வளர்ப்பதில் மேரிராணியார் மிகப் பிரயாசையும் கவலையுமெடுத்துக்கொண்டார். இதற்காக சில

புஸ்த்தகங்களையும் படித்திருக்கிறார்கள். அதிகாலையில் நமது சக்கிரவர்த்தியும் குழந்தைகளும் தத்தம் படுக்கையைவிட்டெழுந்து கசரத்து சொல்லிக் கொடுப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் உபாத்தியாயரிடம்போய் கசரத்து செய்வார்கள். ஒழிவு நேரங்களில் தமது குழந்தைகளுடன் அரண்மனையில் விளையாடுவார்கள். நம் சக்கிரவர்த்தியாருக்கு புஸ்தகங்களைப் படிப்பதில் பிரியமதிகம்.

அரசர் ஒவ்வொரு காரியத்தையும் தீர்க்காலோசனையின் மேல் செய்வார். இவர்டாம்பீகமாக விருக்க பிரியப்படுகிறதில்லை. கடவுளிடத்தில் பக்தியுள்ளவர். தமதுபிரஜைகளிடத்தில் விசுவாசமும் அன்புமுள்ளவர். அதிலும் இந்தியர்களிடத்திலிவருக்கிருக்கும் பிரியத்திற்கு அளவில்லை. ஜார்ஜ் மன்னர் தன்னாலியன்றவளவு தர்மம் செய்வார். இவர் பத்தினியுமப்படியே. தர்மம் பண்ணுவதில் பின்னடைகிறதே இல்லை. நம் சக்கரவர்த்தியிடம் தன்னடக்கம், பரநேசம், ஜீவகாருண்யம் முதலிய நற்குணங்கள் பிரகாசிக்கின்றன. இவருக்கு உலகத்திலுள்ள ஒவ்வொரு மதத்தினரையுங்கண்டு அவரவர்கள் மதத்தின் நோக்கங்களையும் அறிந்துகொண்டு, அதிலுள்ள முக்கியமான கருத்துக்களை கவனித்துவருகிறார். இவருக்கும் எல்லாவிதத்திலும் பொதுவாக நல்லபழக்கமும் நம்பிக்கையுமுண்டு. தன் தகப்பனார், பாட்டியார் முதலியவர்களின் எண்ணங்களையும் கொள்கைகளையும் பின்பற்றி நடக்கப் பிரியப்படுகிறார். "காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லனல்லனேல் மீக்கூறு மன்னிலம்" என்பதற்கிவரே சாக்ஷியென்னலாம். இன்சொலால் யீத்தளிக்க வல்லார்க்குத் தனசொலாற் றான்கண்டனைத்திவழக்காடு. டில்லி மகுடாபிஷேகத்திற்கு 1911-ம் வருஷம் டிசம்பர்மீ த்தில் இந்தியாவுக்கு வந்திருந்தபொழுது ஆங்கிலபாஷையில் இந்து மதசம்மந்தப்பட்ட புஸ்தகங்கள் இருக்கின்றனவா என்பதை நம் சக்கரவர்த்தி விசாரித்ததாகவும் இந்துமதத்தைப்பற்றி பார்க்கர் என்னும் பாதிரியார் எழுதியிருக்கும் புஸ்தகத்தை வாசிக்க நேர்ந்த தென்றும் சுதேசமித்திரன் பத்திரிகை கூறுகிறது.



THE ROYAL FAMILY

இராஜ குடும்பம்

THE GUARDIAN PRESS MADRAS

# பனிரண்டாவது அத்தியாயம்.

## ஜார்ஜ் சக்ரவர்த்தியின் குடும்பம்.

*பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த*
*மக்கட்பேறல்ல பிற.*

இப்போது இந்தியர்களாகிய நம்மையாளும் நம்மிந்திய சக்கிரவர்த்தியவர்களின் குடும்ப க்ஷேமத்தை இந்தியர் அறிய விரும்புவது சகஜமேயாகும். அதை இங்கு சுருக்கி முக்கியமானவைகளை மட்டும் வெளியிடப்பட்டிருக்கிறது. அதாவது நமது 5-வது ஜார்ஜ் சக்கரவர்த்திக்கு 1912-ம் வருஷமாகிய இக்காலத்தில் வயது 47 நடக்கிறது. முத்தும் பவளமும் கோர்த்ததுபோல இப்போது 5-ஆண் மக்களும் ஒரு பெண் மகளுமிருக்கிறார்கள். அவர்களில் பட்டத்து குமாரரான பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் அவர்களுக்கு டியூக் ஆப் யார்க்கு, என்ற பட்டமுமுண்டு. அவ்விளவரசரின் பெயர் பிரின்ஸ் எட்வர்டு என்று அழைக்கப்படுகிறது. அவருக்கு இப்போது 17 வயது நடக்கிறது. இவருடைய சரித்திரம் கீழே சுருக்கி யெழுதப்பட்டிருக்கிறது. மற்றக் குழந்தைகளின் வயது முதலியவை பின் வருமாறு காண்க.

| பெயர். | பிறந்த வருஷம். |
|---|---|
| 1. பிரின்ஸ் எட்வர்ட் | 1894-ஷு ஜனவரிமீ 23உ |
| 2. பிரின்ஸ் ஆல்பர்டு | 1895-ஷு டிஸம்பர்மீ 14உ |
| 3. பிரின்ஸ் மேரி | 1897-ஷு ஏப்ரல்மீ 25உ |
| 4. பிரின்ஸ் ஹென்ரி | 1900-ஷு மார்ச்சுமீ |
| 5. பிரின்ஸ் ஜியார்ஜ் | 1902-ஷு டிஸம்பர்மீ 20உ |
| 6. பிரின்ஸ் ஜான் | 1905-ஷு ஜூலைமீ 12உ |

மேற்குறிப்பிட்டபடி ஜார்ஜசக்காவர்த்திக்கு சிரேஷ்ட குமாரன் பிறந்த பிறகு 1895-ம்ஸ்ரீ டிசம்பர்மீ 14உயன்று 2-வது ஆண்குழந்தை ஜனித்தது. இதைக்கேட்ட பலரும் ஜார்ஜ்மன்னருக்கு பல விடங்களிலுமிருந்து சந்தோஷக்கடிதங்கள் அனுப்பினார்கள். பிறகு இக்குழந்தைக்கு சகலவைபவத்துடனும் ஞானஸ்நானம்செய்வித்து, "ஆல்பர்ட்டுபிரடிரிக் ஆர்தர் ஜார்ஜ்" என்று நாமஞ்சூட்டினார்கள். இவர் பிறந்த தினம் விக்டோரியாமகாராணியின் கணவரும், மகாராணியின் பிரியம்வாய்ந்த பிரின்ஸஸ்ஆலீஸ்புத்திரியுமிறந்ததினம். இந்த துக்கமான தினத்தில், இந்தக் குழந்தை பிறந்தது சந்தோஷத்தையுண்டாக்கிற்று. 1897-ம்ஸ்ரீ ஏப்பிரல்மீ 25உ மூன்றாவது பெண்குழந்தை ஜனனமாயிற்று. அதற்கு "விக்டோரியா அலெக்ஸாண்டிரா ஆலீஸ்மேரி" என்று நாமகரணமிட்டார்கள் இக்குழந்தை தேகசவுக்கியமாயும் பலமுள்ளதாயுமிருந்தது. இந்தபெண் குழந்தையின் மீது தாய்தந்தைகளுக்கும் சகோதரர்களுக்கும் பிரியமதிகம்.

## 2 அயர்லண்டு தேசயாத்திரை.

ஜார்ஜ் அரசர் தமது ராணியாகிய மேரியுடன் 1897-ம் வருஷம் ஆகஸ்டுமீ 17உ லண்டனைவிட்டுப் புறப்பட்டு அயர்லண்டு முதலிய தேசங்களுக்கு சுற்றுப் பிரயாணஞ் செய்தார்கள். இவர்கள் டப்ளின் நகரின் ராஜவீதிவழியாய் ஊர்கோலம் வந்தார்கள். பிறகு இன்னும் சிலமுக்கியமான விடங்களைப் பார்வையிட்டு குதிரைப்பந்தயம் ராணுவச்சேனை முதலியவைகளைப் பார்வையிட்டார்கள். அங்கே ஆகஸ்டுமீ 29உ கில்லாணி என்ற பெரிய ஏரியைப்பார்க்க சென்றிருந்தார்கள் ஆனால் சிறு படகு வைத்துக்கொண்டு போக முடியவில்லை.

இப்படியிருக்குஞ் சமயத்தில் இவர்களுக்கு கொஞ்சம் மனக்கவலையை உண்டாக்கக்கூடிய ஒரு சமாச்சாரம் கிடைத்தது. அதாவது மேரிராணியின் அருமைத்தாயார் வியாதியினால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தாரென்பதே. மேரியின்

தாயாருக்கு ஏப்ரல்மாதம் முதலே உடம்பு அசௌக்கியமாயிருந்தது. பிறகு கொஞ்சம் சொஸ்தமாயிற்று. ஆனால் அக்டோபர்மாதத்தில் மேரியின் தயார் வியாதியால் வருந்தி உயிர்துறந்தார். சவத்தை அடக்கம் செய்தவுடன், உத்தரக் கிரியைகள் நவம்பர்மீ நடந்தேறியது. இதனால் எல்லாருக்கும் மனம் வருத்தமாகவேயிருந்தது. மேரிராணியின் தகப்பனான டெக்கு பிரபு தம் மனைவியிறந்தது முதல் துக்கமேலிட்டு அவர் சரீரம் நாளுக்குநாள் மெலிந்துகொண்டே வந்தது. திருப்பி லண்டன் நகரை வந்துசேர்ந்தார்கள். மேரிராணியின் தந்தையாராகிய டெக்குப் பிரபு தன் மனைவி யிறந்ததுமுதல் அதே விசாரமாக விருந்தார், நாளுக்கு நாள் இவருக்கு உடம்புமெலிந்துகொண்டே வந்தது. கடைசியாய் இவர் 62-வதுவயதில் 1910-ம்வருஷம் ஜனவரிமாசத்தில் இறந்தார். இவர் இறந்தது மேரிக்கு வருத்தத்தை உண்டாக்கியது. 1900-ம்வருஷம் மார்ச்சுமீ மேரிராணிக்கும் நம் ஜார்ஜ மன்னருக்கும் 4-வது ஆண்குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தை கொஞ்சம் பலஹீனமானது. இதற்கு ஹென்ரி வில்லியம் பிரெடரிக்கு ஆல்பர்ட் என்றுபெயர் வைத்தார்கள் இக்குழந்தையை வெகு கவலையுடன் பாதுகாத்துவந்தார்கள்.

ஜார்ஜ் அரசரும் மேரிராணியாரும் ஆஸ்டிரேலியாவுக்குப் புறப்பட்டுச் சென்றபொழுது பாட்டனாரும் பாட்டியாரும் இந்தக்குழந்தைகளை வளர்த்து வருவதில் கவலை யெடுத்துக்கொண்டார்கள். குழந்தைகளை விட்டுப் பிரியும் பொழுது வருந்திய பெற்றோர்களைப்பார்த்து ஜேஷ்டபுத்திரனும் இப்போது நமக்கு இளவரசராகவுமிருக்கும், பிரின்ஸ் எட்வர்ட் என்னும் 7 வயது குழந்தையானது "நான் எனது தம்பி தங்கை முதலியவர்களை பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று சொல்லியதைக்கேட்டு அனைவரும் அகமகிழ்ந்தார்கள்.

1902-ம்வருஷம் டிசம்பர்மீ 20உ 5-வது ஆண்குழந்தை ஜனனமாயிற்று. குழந்தைக்கு ஒருமாசமானவுடன் பிரின்ஸ் ஜார்ஜ் எட்வர்ட்டு அலெக்ஸாண்டர் எட்மண்ட் என்ற பெயரிட்டார்கள் எல்லாக்குழந்தைகளும் ஜாக்கிரதையாய் வளர்க்கப்

பட்டுவந்தன. இவர் லண்டன் தெருக்களில் சவாரிசெய்யும் பொழுது சோல்ஜர்கள் அல்லது உத்தியோகஸ்தர்கள் சலாம் செய்தால் இவர் அவர்களுக்கு பதில் சலாம்செய்யும்படி போதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

1905-ம் வருஷம் ஜூலை 12உ ஜார்ஜ் அரசருக்கு 6-வது குமாரர் ஜனனமானார். இக்குழந்தைக்கு ஜான்சார்லஸ் பிரான்ஸிஸ் என்ற பெயர் வைத்து சண்டிரிங்காமில் ஞானஸ்நானம் செய்வித்தார்கள்.

---

## 3-இளவரசரின் சரித்திரம்.

1894-வருஷம் ஜூன் 23உ ஜார்ஜ் அரசருக்கு பட்டத்துக் குமாரன் ஜெனனமானார் இந்த க்ஷேம சமாசாரத்தைக் கேட்டு உலகத்திலுள்ளவர்கள் சந்தோஷமாய் குழந்தை தீர்க்காயுளுடனிருக்கவேண்டுமென்று ஆசிகூறினார்கள். மேரி ராணியின் தாயாரும், மாமியாரும், வொயிட் அவுஸில் பிரஸவம் நடக்கும் சமயமுதற்கொண்டே கூடவிருந்தார்கள்.

விக்டோரியா மகாராணியார் இரண்டு தினங்கழித்து சிம்மாசனத்துக்கு மூன்றாவது சுதந்தரவாளியாகிய குழந்தையைப்பார்க்க வந்தார். இக்குழந்தைபிரகாசமான கோடை காலத்தில் பிறந்தது என்று சந்தோஷித்து ஆசிகூறி கடவுளைப்பிரார்த்தித்து தீர்க்காயுளைகொடுக்க விரும்பினார்கள். உலகமுழுவதிலுமிருந்து பல சந்தோஷக்கடிதங்கள் வந்து பதினாயிரக்கணக்காய் நிரம்பின. ஒருமாசங்கழித்தவுடன் அக்குழந்தையை தங்கத்தொட்டியில் வைத்து வழக்கப்படி ஞானஸ்நானம் செய்வித்தார்கள். அப்போது "எட்வர்டு ஆல்பர்ட் கிரிஸ்டியன் ஜார்ஜ் ஆன்ட்ரூபேட்ரிக் டேவிட்" என்று பெயரிடப்பட்டது. பந்துக்கள் "பிரின்ஸ் டேவிட்" என்று கூப்பிட்டுவந்தார்கள்.

1905-ம் வருஷம் ஜூன்மாதத்தில் 11-வது வயசு நிரம்பிற்று அப்போது அதற்கென்று ஒரு கொண்டாட்டம் நடந்தது.

அன்றையதினம் பார்க்மோரில் கிரிக்கட் பந்தவிளையாட்டு நடந்தது. அதில் பிரின்சு எட்வர்டும் விளையாடினார். ராஜ குடும்பத்தாரெல்லோரும் தங்கள் குழந்தைகள் அவர்கள் சினேகிதர்களோடு சேர்ந்து விளையாடுவதை பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு 1910-ம் வருடம் ஜூன்மீ 23உ இங்கிலீஷ் ஏகாதிபத்தியத்தின் இளவரசுப்பட்டம் சூட்டப் பட்டது. இவர் கப்பற்றொழில் பழகிவருங்காலத்தில் ஒரு சமயம் அசௌக்கியமாகவிருந்தார். அப்போது உருசி யான பதார்த்தங்களை கொடுத்தபொழுது, நான் அவை களை புசிக்கமாட்டேன். எல்லாப்பிள்ளைகளும் புசிக்கும் ஆகாரத்தை சாப்பிட்டுவரும்படி என்தகப்பனார் சொல்லி யிருக்கிறார். அவரிஷ்டப்படி தான் நடப்பேன் என்றாராம். இவருக்கு படிப்பில் மிகப்பிரியம். சமுத்திர சம்மந்தமான சாஸ்திரங்களை அடிக்கடி படிப்பார். இவருடைய ஒரு பிறந்த நாள் கொண்டாட்ட சமயத்தில் உனக்கு என்ன வெகுமதி வேண்டுமென்று கேட்டபொழுது எனக்கு திமிங்கிலம் பிடிப் பதைப்பற்றிய கதையைச் சொல்லுங்கள் என்றார். விக் டோரியா மகாராணியார் சரித்திரத்தையும், அவரநுசரித்து வந்த முறைகளையும், இராஜதந்திரங்களையும், செவ்வனே அடிக்கடி கேட்டுவருகிறார். விக்டோரியாராணியாரிடத்தில் மிகுந்த பக்திவிசுவாசமுண்டு. எட்வர்டு சக்கிரவர்த்திக்கு அன்புள்ளபேரன், தமது பாட்டனாருடன் பிரசங்கத்துக்கும் கட்டிடத்திறப்புகளுக்கும் போய்வந்தார். வியாதியஸ்தர்க ளிடமும் ஏழைகளிடமும் காருண்யமுண்டாகும்படி, அலெக் ஸான்டிரா ராணியார் கற்பித்திருக்கிறார். பிராணிகளிடத் தில் விசேஷப்பிரியமுண்டு. எப்படியென்றால் ஒரு சமயத் தில் அவர் சொன்னதாவது, நான் அரசனானால் நாய்களின் வால்களை அறுக்கக்கூடாதெனச் சட்டஞ்செய்வேன் என்றா ராம். இவருக்கு கீர்த்திபெற்ற மனிதர்களைப்பற்றிய சரித் திரங்களைபடிக்கவும், கேட்கவும், நேரிற்பார்ப்பதிலும் பிரிய முண்டு. இவர் கீர்த்திபெற்றவர்களின் உருவப்படங்களை அவரவர்கள் அந்தஸ்து யோக்கிதை இவைகளுக்குத்தக்கபடி ஒழுங்குப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறார். ஒருநாள் அப்

படங்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில், அமெரிக்காவுக்கு பிரஸிடெண்டாக விருந்த ரூஸ்வெல்ட்டின் படத்தைப் பார்த்து, தாத்தா! இவர் நல்லவர்தானே? என்றுகேட்டார். அதற்கு பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு மிகவுங் கெட்டிக்கார மனிதன் என்று அவர் மறுமொழி சொன்னார். இதைக் கேட்டவுடன் அந்தப்படத்தை எடுத்து கெட்டிக்காரமனிதர்களின் படமிருக்குமிடத்தில் வைத்துவிட்டு, தாம் செய்த மாதிரியை பாட்டனாரிடம் சொன்னார். அதைக்கேட்டவுடன் அவர் அப்படிச் செய்யலாகாது, முன்னிருந்த விடத்திலேயே வைத்துவிடு என்று சொன்னார். இவருக்கு அடிக்கடி போட்டோபடம் எடுத்துக்கொள்ள இஷ்டமிருக்கிறதில்லை. ஆனால் பாட்டனார், தகப்பனார் எடுத்துக்கொள்ளும்படி விரும்பின சமயங்களில் அவர்களுடனுட்கார்ந்து எடுத்துக்கொள்வார். கம்பியில்லாமல்தந்திகொடுக்கும் வித்தையை நன்றாய் கற்றுக்கொண்டிருக்கிறார். தச்சுவேலையும் தோட்டவேலையுமிவருக்கு நன்றாய்த்தெரியும். பின்னும் பலநற்குணங்களும் பெருந்தன்மையும் ஜீவகாருண்யமும் யீஸ்வரபக்தியுமுடையவராக விருக்கிறார்.

## பதின்மூன்றாவது அத்தியாயம்.

### 5-வது ஜார்ஜ் சக்கிரவர்த்தியின் ஜாதகமும், ரேகை சாஸ்திரமும்.

நம் பரதகண்டத்தில் இந்தியராகப்பிறந்த எவரும் குழந்தைகள் பிறப்பதற்குமுன்னமே கெடிகாரமுதலிய காலமளக்குங்கருவிகளை வைத்துக்கொண்டு ஜெனனமான நிமிஷந்தவறாதபடி கணக்கெடுப்பது வழக்கமென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. அப்படிப்பட்ட நமது ஜனங்கள் நமது பிதாஸ்தானத்திலிருக்கும் சக்கிரவர்த்தியினுடைய ஜாதகத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கருதுவார்களாகையால் அதையிங்கு எழுதுகிறோம். பிறந்த நாளி

கையைக்கொண்டு ராசிச்சக்கரம் ஏற்பாடு செய்வது வழக்கமாயிருக்கிறது. இந்தக் கணக்குகள் தேசங்களுக்குத்தகுந்தபடி மாறி வருவதையறியாமல் அநேகர் இங்கிலாந்து முதலிய தேசங்களிற் பிறந்தவர்களுக்கும் இந்தியதேசக்கணக்கைக்கொண்டு ஜாதகங்கணித்து பலன்சொல்லும்பொழுது பிசகுகள் ஏற்பட்டுவிடுகிறது. அப்படிப்பட்ட தவறுதல்களின்றித்தக்க ஜோதிடர்களைக்கொண்டு ஜாதகங்கணித்து, அதன் ராசிச்சக்கரமும், அதற்கு வேண்டிய சில அவசியமான விபரங்களையும் கீழே குறிப்பிட்டிருக்கிறோம்.

1865-ம்௵ ஜூன்௴ 3௳ இரவு 1-மணி 18-நிமிஷத்திற்கு, லண்டன்மாநகரத்தில், நமது 5-வது ஜார்ஜ் சக்கிரவர்த்தி ஜெனனமானார். அன்று காலை லண்டனில் 3-51 மணிக்கு சூரியன் உதயமாகி 8-9க்கு அஸ்தமனமாயிற்று. சக்கிரவர்த்தியின் ஜாதகத்தை சோதித்துப் பலன்சொல்லி 1911-ம்௵ டிசம்பர்௴ 11௳ மெயில் பத்திரிகையில் எழுதியிருக்கும். காளஸ்திரி ஜோதிஷராகிய மிஸ்டர் T. விஸ்வாம்பரய்யர், லண்டன் சூரியோதயநேரத்தை மறந்து இந்திய சூரியோதய நேரப்படி கணித்திருப்பதால் ஜாதகம் பிழைபட்டுப்போயிருக்கிறதென்று எடுத்துக்காட்டி கல்கட்டா ஜோதிஷராகிய இராஜாணிகாந்த ஜோதிசாஸ்திரி மெயில் பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். கல்கட்டா ஜோதிஷர் கிரகநிலை தெசாபுத்தி இவைகளைப்பற்றி கூறியிருக்கும் விவரங்களை இங்கு எழுதக்கூடவில்லை. சக்ரவர்த்தி மேன்மேல் பெருகிய செல்வமும், கவுரவமும், ஜனாபிமானமும் பெற்று, இன்னும் அரைநூற்றாண்டுகாலம் ராஜ்யபரிபாலனம் செய்வாரென்று கூறி இருப்பது யாவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும். லக்னம் மீனம்என்று சிலர் தவறுதலாக எழுதி இருப்பதை மறுக்கிறோம். மகரலக்னம், மேஷத்தில் கேதுவும், ரிஷபத்தில் புதனும், சுக்கிரனும், மிதுனத்தில் சூரியனும், சிம்மத்தில் செவ்வாயும், துலாத்தில் சந்திரனும், சனியுமாகவும், தனுசில் குருவும், கிரகநிலையாக இருக்கிறது. சில ஆங்கிலேயர் எழுதியிருக்கும் பலன்களில், சிலவற்றை

மாத்திரம் எடுத்துச் சொல்லுகிறோம். இக்குழந்தை பூர்ண ஆயுளோடிருந்தால் இங்கிலாந்தின் மன்னராக வந்து 5-வது ஜார்ஜென்ன மகுடம்புனைவார். இவரது புத்தியும் நடவடிக்கைகளும் இவரது பாட்டனரைப்போன்றிருக்கும். குரு அமைந்திருக்கும் இடத்தைக்கொண்டு இவருடைய ஆளுகையில் அமைதியும் சுபிட்சமும் நிறைந்திருக்குமென்று சொல்லலாம். யுரேனஸ் என்ற கிரகத்தால் கொஞ்சம் கொஞ்சம் தடைகளேற்பட்டாலும் மொத்தத்தில் சுகமே. இது ஜார்ஜ் மன்னரின் 2-வது வயதிற் சொல்லப்பட்டது. அப்போது பட்டத்துக்கருகமாக இவரது தமயனிருந்தார். மற்றொருவர், சுக்கிரன் சுயவீட்டிலே, விருஷபத்திலிருப்பதால் அயர்லண்டு தேசத்தாரிடம் நற்பெயர் பெறுவார் இவர் காலத்தில் அயர்லாண்டு தேசவாசிகள் நீண்டகாலங்களாக அபேட்சித்த ஆசைகள் பூர்த்தியாகும். என்றெழுதியிருக்கிறார்.

## ராசிசக்கரம்.

| | | | |
|---|---|---|---|
| | கேது | புதன் சுக்கி | சூ |
| | ராசி | | |
| ல | | | செவ் |
| குரு | | சந் சனி ராகு | |

கீர்த்திவாய்ந்த கும்பகோணம் சோதிடரொருவர் அடியிற்கண்டபடி விசேஷ உரிமைகள் இந்தியருக்கு கிடைக்குமெனக் கணித்திருக்கிறார். அதாவது ஒன்பதாமாதியான

புதன் திரிகோணமான ரிஷபத்திலும் லெக்னாதிபதி சனி தசமகேந்திரத்தில் உச்சனாய் சந்திரன், இராகு இவர்களுடன் கூடியிருப்பதால், இப்போதிருக்கும் இராஜ்யங்களினும் பெருகுமென்றும், சிலதேசங்களில் இவரது ஆட்சிபரவுமென்றும் எண்ணுகிறார். இன்னும் முன் சொன்ன கிரகங்களுக்கு இந்தியாவில் சுதந்தரமும் பலமும் அதிகமுண்டாகையால் இந்தியருடைய மனோரதங்கள் நிறைவேறுமென்பது நிச்சயம், இந்தியர் உயருத்தியோகங்களில் விசேஷமாய் நியமிக்கப்படுவார்கள். 1917-ம்௵ ஜூன்மீ 4உ-க்குமேல் இந்திய சட்டசபைகளை பார்லிமெண்டாக விசாலிக்க யோஜனையுண்டாகும். 1924-ம்௵ டிசம்பர்மீ 24உக்குமேல் இரண்டுவருஷகாலத்திற்குள் இந்தியாவுக்கு பார்லிமெண்டு சுதந்தரங்கொடுக்கப்படும். அல்லது இன்னும் மதிசுதந்தரம் கிடைக்கும்.

---

## 2 ரேகைசாஸ்திரம்.

### டாக்டர் பேரின்—சாமுத்திரிகா சாஸ்திரி.

---

டாக்டர் கர்ல் L. பெரின் என்னும் அமெரிக்கர் ஒருவர் அஸ்தரேகை சாஸ்திரத்தில் வல்லவரென்றும், அவர் உலகசஞ்சாரமாகப் புறப்பட்டு கல்கத்தாவிற்கு வந்தார். இவர் ராஜயாதிபதிகள் முதலான அநேக பெரியோர்களின் ஜீவியகால பலாபலன்களை டாக்டர் பெரின் சொல்லி, தாம் சொன்னதெல்லாம் தவறாமல் நிறைவேறியதால் எங்கும் பிரக்கியாதி பெற்றிருக்கிறாரென்று சொல்லப்படுகிறது, கல்கத்தாவில் பிரசுரமாகும் 'எம்பையர்' பத்திரிகை இவரின் பிரசஸ்தியைக் கேள்விப்பட்டுத் தன் பிரதிநிதி ஒருவரை இவரிடம் அனுப்பிச்சிலவிபரங்களை அறிந்து பிரசுரித்திருக்கிறது. இவர் ஜார்ஜ் சக்கரவர்த்தியை வந்து பார்க்கவென்று அனுமதி செய்யப்பட்டதன்மேல், போய்ப்பார்த்துச் சொல்லியிருக்கும் பலன்களைக் கீழே குறிக்கிறோம்:—

## ஜார்ஜ் சக்கிரவர்த்தியின் அஸ்தரேகைக்குறிகள்.

‘ஸோல்ஜர்கள், லாயர்கள், தௌத்தியர்கள், தத்வ சாஸ்திரிகள், இவர்களிடம் காணப்படுவதுபோல, ஜார்ஜ் சக்கரவர்த்தியின் கைகள் உத்தம தரத்தினவாய் இருக்கின்றன. தேகாரோக்கியத்தைக் குறிக்கும் ரேகை நன்றாய்ச் சரியானபடியிருக்கிறது மிகுந்த திடகாத்திரம் உடையவரென்பதை இது குறிக்கிறது. அசாதாரணமான வன்மையோ, புஷ்டியோ உள்ள தேக மல்லாவிட்டாலும், கம்பிபோன்ற இலாகவமுடையதாய் எவ்வளவு களைப்பு ஏற்பட்டாலும் ஓரிரவு நித்திரையில் மீண்டும் பூரண திடத்தை அடையக் கூடியதாயிருக்கிறது. விக்டோரியா அரசியார் என்னைக் குறி கேட்கும்படியான கௌரவம் எனக்குக் கிடைத்திருக்கிறது. எட்வர்ட் அரசர் கையையும் மூன்று தடவைகளில் பார்த்திருக்கிறேன். ஜார்ஜ் சக்கரவர்த்தி விக்டோரியாவின் தேகத்தைப்போன்ற தேகவாசியுடையவர். புதன் ரேகை அவர் உழைப்பாளியும், முற்போக்குடையவரும் ஆவாரென்பதைக் காட்டுகிறது. அவரை முதற்றர மன்னைக் கடவுள் செய்திருக்கிறார். ஈனமான காரியத்தைச் செய்யவோ பக்ஷபாதம் காட்டவோ ஒருக்காலும் அவரால் முடியாது. சிரரேகையைப்பார்க்கும்போது மூளைவலுவையும் பரிபாகத்தையும் காட்டுகிறது. ஹிருதய ரேகையைப் பார்க்கும்போது இவர் ஒருபோதும் தோற்று விபாதிக்கு உள்ளாகமாட்டாரென்று விளங்குகிறது. செவ்வாய் ரேகை, இவர் அநாகரிகமான அல்லது ஈனமான எதையும் மனதால் நினைக்கவும் கூசுவார் என்பதையும், பெருந்தன்மையையும் காட்டுகிறது. தமக்கு நியாயமென்று தோன்றியதினின்றும் ஒருபோதும் பிறழமாட்டார். மனவலுவுடையவர். பரமார்த்திக புத்தியுடையவர். மனதில் வேகம் பிறந்துவிட்டால் மலைவெள்ளம்போல எதுவும் எதிர் நிற்க மாளாமல் அள்ளிக்கொண்டு போகக் கூடியவர். விடாமுயற்சியும் பிடித்தகாரியத்தைச் சாதிக்குங் குணமுமுடையவர் மகா தைரியசாலி. மனிதனுக்

கோ, மிருகத்துக்கோ, அஞ்சுபவரல்ல. மனித சுபாவத்தை அறிவதில் விசேஷ சமர்த்தரென்பது ஹஸ்தரேகையில் விளங்குகிறது கூர்மையும், ஸ்வயபுத்தியும், வேகமும், கற்பனசக்தியுமுடையவர். மென் மனமும் தர்மசிந்தையும், தயாளமும், தாராளமும் கொண்டவர். கவிதை, சித்திரம் போன்ற உயர் கலைகளில் உருசியுள்ளவர். மனத்திண்மையுள்ளவர். தனக்கு மனதில் முதலில் பட்டது எதுவோ அதன்படி நடக்கக்கூடியவர். குழந்தைகளிடத்திலும் ஜீவம் பிராணிகளிடத்திலும் விசேஷ அன்புடையவர். பேராவலுமுடையவர், ஆனால் வெகு ஜனாபிமானத்துக்கு ஆசைப்பட்டுத் தம் நீதிப்புலன் மறைபட விடக்கூடியவரல்ல. மென்மனதுடைய வராகையால், நேசர்களும் பொது ஜனங்களும் செய்யும் வாழ்த்தோவசைபோ இவர் மனதில் கூர்மையாய் உருக்கும். மனநெகிழ்ச்சியும் நேசமும் உத்சாகமும் ஜன வாஞ்சையுமுடையவர். பொதுவாய் மனிதராசியில் அபிமானம் வைத்தவர். இவர் தம் மகுடத்திலும் மேம்பட்ட மனமுடையவராய் மத வர்ண ஸ்தல பேதமின்றித் தம்பிரஜைகளை யெல்லாம் நேசிக்கிறார் நீதிவானாய் பிறர் க்ஷேமத்தில் கவலைகொண்டு பிறரை மன்னிக்கும் சுபாவமுடையவர். இவர் ராஜசிரேஷ்டராயிருப்பதுமன்றிப் புருஷோத்தமருமாவர். இடது கையில் விதிரேகையானது, ஜார்ஜ் அரசர் வாழ்நாள் முழுமையும் அமைதியுடன் ஆட்சி செய்வாரெனத் தெரிவிக்கிறது. இவருக்குத் துக்கமோ, நஷ்டமோ, அபாயமோ கிடையாது. இவருக்கு வியாழன் தலைமையான கிரகம். 88-வருஷம் வாழ்ந்து தம் சக்திகளொன்றும் மலின மடையாதிருக்கையில் இவர் தேக வியோக மாவார்.

இப்படி நம் சக்கரவர்த்தியின் கையைப்பார்த்துச் சொல்லியிருப்பதோடு விக்டோரியா அரசி, எட்வர்ட் அரசர், ஜெர்மனி சக்கரவர்த்தி, ஜெர்மன் இளவரசர், கைஸர் ஜோஸப், ஆஸ்திரியா சக்கரவர்த்தினி எலிஸபத், ருஷியா ஸார், அமெரிக்கன் பிரெஸிடெண்டுகளான மக்கின்லி, ரூஸ்வெல்ட், டாப்ட், ஸ்வீடன் அரசர், மிஸ்டர் கிளாட்ஸ்டன், மிஸ்டர்

ஆஸ்க்வித் சீனு, ஜப்பான் சக்கரவர்த்திகள், துருக்கியின் ராஜிசுல்தான் அப்துல் அஜிஸ், பிரான்சுப் பிரஸிடெண்டுகள், கார்னட், பார் முதலான அநேகரின் கைபார்த்து இவர் சொல்லி சர்டிபிகேட்டும் வாங்கியிருக்கிறார். மக்கிலி கொலை செய்யப்படுவாரென்று முன்னமேயே சொன்னதன்றி, எலிஸாபெத் சக்கரவர்த்தினி கொலைசெய்யப்பட்டதற்கு 4 வருஷத்திற்கு முன்னமேயே அவள் கொலை செய்யப்படுவாளென்று சொன்னாராம். அப்துல் அஜிஸுக்கு இவர் ஜோஸியம் சொன்னபோது இவருக்கே ஆபத்து வரும்போலிருந்தது. அப்துல் அஜிஸ் இரண்டு வருஷத்திற்குள் தற்கொலை செய்துகொள்ளுவரென்று இவர் ஜோஸியம் சொன்னவுடன் சுல்தான் கோபங்கொண்டு சேவகனைக் கூப்பிட்டு டாக்டர் பெரினைச் சிறையிலடைப்பித்து விட்டாராம். அங்கு 4-நாளிருந்த பிறகு இவரை அமெரிக்க ஸ்தானிகர் வெகு பிரயாசைப்பட்டு சிறையினின்று மீட்டார். 2-வருஷத்துக்கப்புறம் டாக்டர் பெரின் சொன்னபடியே கத்திரிக்கோலால் தன் தொண்டையை அறுத்துக்கொண்டு சுல்தான் தன் படுக்கையில் பிணமாய்க்கிடந்தார் ஜப்பான், சீனசக்கரவர்த்திகளின் கையைப்பார்த்தாய் சொல்லியவற்றைத் தாம்வெளியிட அனுமதி யில்லையென்று டாக்டர் பெரின் சொன்னார். ஆயினும் சீனசக்கரவர்த்தி இப்போது சிறு குழந்தை அவர் தம் ஜீவகாலத்தில் வெகு கஷ்டத்துக்கும் துக்கத்துக்கும் உள்ளாவாரென்று சொன்னார். கைபார்த்து ஜோஸியம் சொல்லல் பல்லாயிரவருஷங்களாயுள்ள சாஸ்திரம். நிற்க முற்காலத்தில் ஸிஸிரோ, ஜூலியஸ்ஸீஸர், அப்புறம் நெப்போலியன், பால்ஸக் விக்டர் ஹூகோ, முதலானவர்கள் இந்த சாஸ்திரத்தில் நம்பிக்கை வைத்திருந்தார்கள். 'முதலில் தன் கையைப்பார்த்துக்கொள்ளாமல் அலெக்ஸாண்டர்-தி-கிரேட் ஒரு யுத்தத்துக்கும் போனதேயில்லை. ராஜா அரண்மனையில் சாமுத்திரிக சாஸ்திரிகள் இல்லாத காலமே இல்லை. ரோமன் காதோலிக்குகளில் மிகுந்த தெய்வபக்தியுடையவர்களும் இதில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இவை இந்தியர் அனுஷ்டானங்களிலொன்றாகும்.

## 3 சக்கரவர்த்தியின் இந்திய ஆபரணங்கள்.

இந்திய சக்கரவர்த்தியாய் லண்டனில் வீற்றிருக்கும் மகாராஜாவுக்கு இந்தியாவிலிருந்து கிடைத்த ஆபரணங்களின் சரித்திர மடங்கிய ஒரு புஸ்தகம் பிரசுரம் செய்யப்படுமென்று அறிய இந்திய ஜனங்கள் சந்தோஷப்படுவார்கள். இது வரையில் அம்மாதிரி சரித்திரம் பிரசுரமாகவில்லை. விக்டோரியா மகாராணியும் மேரி சக்கரவர்த்தினியும் அணிந்த கோஹினூர் என்ற இரத்தனத்தின் சரித்திரம் மட்டும் நமக்கு ஒருவாறு தெரியும். இந்த கோஹினூர் ரத்தினம் விக்டோரியா மகாராணி வசம் வந்தபோது லாகூர் அரசன் ரஞ்ஜித் சிங் (Ranjit Singh) கிடமிருந்து அவன் தரித்த முத்து ஹாரம் கூட ஒன்றும் வந்தது. இந்த ஹாரத்தில் 224-முத்துக்கள் கோர்க்கப்பட்டிருந்தன. அதில் இரண்டு முத்துக்களை எடுத்து விக்டோரியா மகாராணி காதணியாகச் செய்து கொண்டார். ஆனால் அது டம்பமாய்த் தோன்றுமென்று நினைத்து அதை அவர் தரிக்காமல் ஆபரணசாலையில் வைத்து விட்டார். இந்தமுத்து ஹாரத்தையும் வேறு பல ஆபரணங்களையும் ரஞ்ஜித்ஸிங் ஆப்கான் அரசனாகிய ஷாஷுஜாவை வென்றபோது, அவனிடமிருந்தும் அவன் ஸ்திரீகளிடமிருந்தும் பெற்றிருக்கக்கூடுமென்று நம்பப்படுகிறது. பஞ்சாப் மாகாணத்தைப் பிரிட்டிஷார் சீக்கியரிடமிருந்து வென்று கட்டிக்கொண்டபோது, மேற்கண்ட கோஹினூர் இரத்தினத்தையும் முத்து ஹாரத்தையும் மற்ற விலைபெற்ற ஆபரணங்களையும் ஈஸ்ட் இந்தியாக் கம்பெனியார் விக்டோரியா மகாராணிக்கு வெகுமதியாகக் கொடுத்தார்கள்.

இந்த நகைகளில் ‘டைமர் சிவப்பு’ என்று உலகத்துச் சிகப்புகளிலெல்லாம் பெரிதாக ஒன்று இருப்பதாக பல பேருக்குத் தெரியாது. இந்தசிவப்பு 352 காரட் (கழஞ்சி) எடையுள்ளது இந்தச் சிவப்பு வேறுமூன்று சிறிய சிவப்புகளுடன் ஒரு கழுத்து அட்டிகையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. லார்ட் ஆக்லண்ட் கவர்னர் ஜெனரலாயிருந்தபோது

சுமார் 1840-ம் வருஷத்தில் பஞ்சாபுக்குப்போக அவருடன் கூடச்சென்ற ஆனரபில் எமிலி எடன் என்பவர் சீக்கிய தர்பாரைச்சேர்ந்த முக்கியமான ஆபரணங்களுக்கெல்லாம் ஒரு ஜாப்தா தயார் செய்தார். அப்போது இந்த இரத்தினம் செதுக்கப்படாமலிருந்ததாகவும் அதில் சில பெர்ஷிய எழுத்துக்கள் வெட்டப்பட்டிருந்ததாகவும் சொல்லப்பட்டது. இதனாலும் அந்த இரத்தினத்தைப்பற்றிப் பல ரிகார்டுகளில் வந்திருக்கும் வக்கணைகளாலும் அந்த இரத்தினந்தான் இப்போது பிரிட்டிஷ் ஆபரணசாலையில் இருக்கிற இரத்தினமென்று தெரிகிறது. 1398-ம் வருஷத்தில் டெல்லிநகரத்தை டைமர் அல்லது தாமர்லேன் கட்டிக்கொண்டபோது, இந்த இரத்தினம் அவனிடம் அகப்பட்டது. அது வெகுகாலத்துக்குப் பிறகு பெர்ஷிய அரசனால் மறுபடியும் மொகலாயச் சக்கரவர்த்தியாகிய ஜிஹாங்கீருக்கு இனாமாகக் கொடுக்கப்பட்டது. ஜிஹாங்கீர் தன் பேரையும் தன் தகப்பன் ஆக்பர் சக்கரவர்த்தியின் பேரையும் அதில் வெட்டிவைத்தான். அவர் மனைவியாகிய நூர்ஜிஹான் இரத்தினத்தைக் கெடுத்துவிடுவதாக ஜிஹாங்கீரிடம் முறையிட்டாளென்றும், ஜிஹாங்கீர் தன் பேரும் தன் தகப்பன் பேரும் இந்த இரத்தினத்தால் உலகத்தில் நிலைத்து நிற்குமென்றும், வேறு எந்த புஸ்தகத்தாலும் அப்படி நிலைக்காதென்றும் டைமரின் வமிசம் அழிந்துபோனாலும் உலகத்தில் அரசன் ஒருவன் இருக்கிற வரையில் இந்த இரத்தினம் இருக்குமென்றும் சொன்னான் இம்மாதிரி 300-வருஷத்துக்கு முன்னாற் சொன்னது இப்போது உண்மையாயிருக்கின்றது. மொகலாயச் சக்கவர்த்தி ஷாஜிஹான் அவன் செய்த மயிலாசனத்தில் இந்த இரத்தினத்தைப்புதைத்து வைத்தான்.

ஆனால் 1839-ம் வருஷத்தில் நாதர்ஷா என்ற பெர்ஷிய அரசன் டெல்லி மீது படையெடுத்து அதை வென்று கொள்ளை கொண்டபோது, இந்த இரத்தினத்தையும் மயிலாசனத்தையும் இஸ்பகான் என்னுமிடத்துக்கு கொண்டுபோய்விட்டான். அந்த 1153-ம் வருஷத்தில் இந்தியாவிலிருந்து

இஸ்பஹானுக்கு வந்த 25,000 உண்மையான இரத்தினங்களில் ஒன்றென்று இந்த இரத்தினத்தில் வெட்டப்பட்டது. பிறகு நாதர்ஷாவைக் கொலைசெய்து ஆமத்ஷா துரானி என்பவன் ஆப்கான்ஸ்தானத்தில் ராஜ்யம் ஸ்தாபித்தபோது, அவன் இந்த இரத்தினத்தைக் கொண்டுபோனான். அவன் வமிசத்தானாகிய ஷாஷுஜா லாகூரில் சிறையாய் அடைக்கப்பட்டிருந்த போது இந்த இரத்தினத்தையும் கோஹினூரையும் கொடுத்துவிடும்படி ரஞ்ஜித் ஸிங் கட்டாயம் பண்ணிப் பெற்றுக்கொண்டான். பிறகு ரஞ்ஜித்ஸிங் ஆண்டுவந்த பஞ்சாபை பிரிட்டிஷார் கட்டிக்கொள்ள அப்போது இந்த இரண்டு இரத்தினங்களும் மற்ற ஆபரணங்களோடுகூட லண்டனுக்கு அனுப்பப்பட்டு, 1851-ம் வருஷத்துப் பொருட்காட்சியில் வைக்கப்பட்டன. பிறகு கோர்ட் ஆப்டைரக்டர்கள் இந்த நகைகளையும் இரத்திரனங்களையும் விக்டோரியா மகாராணிக்குக்கொடுத்து விட்டார்கள்.

தாமஸ் பிட் என்பவன் இங்கிலாந்தில் முதல் மந்திரியாயிருந்து மகா கியாதிபெற்ற ஏர்ல் ஆப்சாதம் என்பவனின் பாட்டன். இவன் 1701-ம் வருஷத்தில் சென்னைக்குக் கவர்னராயிருந்தான். கவர்னர் உத்தியோகத்தோடு, அக்காலத்தில் சகஜமாயிருந்ததுபோல, ஒரு ஆங்கிலேய வர்த்தக கம்பெனிக்குப் பிரதிநிதியாயும் இருந்தார். அப்படியிருக்கையில் ஒருநாள் ஒருவன் ஒருபெரிய வைரக்கல்லைக்கொண்டு வந்து 89,090-பவுனுக்கு விற்பதாக தாமஸ்பிட்டிடம் சொன்னான். இந்த வைரத்தை மொகலாயச் சக்ரவர்த்திகளின் சுரங்கங்கள் ஒன்றிலிருந்து இவன் திருடிக்கொண்டு வந்திருக்கவேண்டும். இந்த வைரத்தைக் கண்டதும் தாமஸ் பிட் கவர்னராகையால் அந்த இரத்தினம் அவனுக்கு எப்படிக் கிடைத்ததென்று அவனைக் கண்டித்திருக்கவேண்டும். அல்லது தன் வர்த்தகக் கம்பெனிக்குச் சார்பாக அதை வாங்கியிருக்கவேண்டும். இரண்டும் செய்யாமல் தாமஸ்பிட் அந்த மனுஷனைப் பயமுறுத்தி அந்தக்கல்லை 20,000 பவுனுக்கு தன் சொந்தத்துக்கு வாங்கிக்கொண்டான் உடனே அவன்

தன்பிள்ளையிடம் அந்தக்கல்லைக்கொடுத்து இங்கிலாந்துக்குக் கொண்டுபோய் அங்கே அதைச்செதுக்கச் சொன்னான். பிள்ளை அந்தக்கல்லைக் கொண்டுபோனதும் தாமஸ் பிட்டுக்கு மனதில் பயமுண்டாயிற்று. இந்தக்கல் 8-லக்ஷட் பவுன் பெறுமென்று மதிப்புப்போட்டான். அவ்வளவு மதிப்புள்ள கல்லை தன்பிள்ளை செலவாளியாயிருந்தபடியால், விற்றுவிடுவானோவென்று பயந்தான். அது விலைக்கு வந்து அந்தக்கல் தாமஸ் பிட்டிடம் இருப்பதாகப் பகிரங்கமானால் தன்பேருக்குக் கேடு வருமென்று அஞ்சினான். இந்தக்கல்லைச் செதுக்க ஆரம்பித்த போது அதுஎடையில் 423-காரட்டிலிருந்து 123-காரட்டாக குறைந்துபோயிற்று. இதனால் தாமஸ்பிட் ஏமாந்துபோனான் மேலும் தாமஸ்பிட்டின் விரோதிகளின் முயற்சியால் அவனுடைய கம்பெனிகோர்ட்டில் வழக்குத்தொடர்ந்து கல்லின் முழுவிலையையும் அவனிடமிருந்து வாங்குவதாகத் தீர்மானித்தார்கள். தாமஸ் பிட் திகிலடைந்து, இந்தக்கல்லை எப்படியாவது விற்றுவிட வேண்டுமென்று முயன்றான். அப்போது இங்கிலாந்தில் அரசியாயிருந்த க்வீன் ஆனி (Queen Anne)க்கு எப்போதும் பணத்தட்டிருந்தபடியால் அதை அவள் வாங்கக்கூடவில்லை. அவன் மகன் ஜார்ஜ் அரசனோ அப்படி விலைபெற்ற கல்லை பார்லிமெண்ட் வாங்கி தனக்கு இனாமாகக்கொடுப்பது இதன் கடமையென்று நினைத்து, அவனும் வாங்கவில்லை. ஆகையால், இங்கிலாந்தில் அதை வாங்குவோர் ஒருவருமில்லை. பிரான்ஸ் தேசத்து ரிஜெண்ட் இதை வாங்குவதாக ஒப்புக்கொண்டு அதற்கு லக்ஷம் பவுன் கொடுப்பதாகச் சொல்லவே, அந்த ரிஜெண்டுக்கு அதை விற்றுவிட்டான். கோஹினூர் இரத்தினம், டைமர் சிவப்பு, முத்துஹாரம், மொகலாயவைரக்கல், மைலாசனம், இவைகளைப்போல விலைபெற்ற எத்தனை இரத்தினங்களும் ஆபரணங்களும் அளவில்லாமலிருக்கின்றன. கூடிய சீக்கிரம் வெளியாகும் புத்தகத்தில் இந்திய புராதன ஆபரணங்களான கிரீடங்கள், பாகுவலயங்கள், புஜகிருதுகள், மேகலாபரணங்கள் முதலியவைகளும் கண்டுங் கேட்டுமிராத பலவகை ஆபரணங்களின் பெயரையும் மதிப்பையும் படிக்கலாம்.

# பதிநான்காவது அத்தியாயம்.

## I டில்லிமா நகரின் பூர்வம்.

இந்த டெல்லி நகரமானது கலியுகவாரம்பமுதல் பிரபலமாயிருந்த இந்திர பிரஸ்தமெனவிளங்கிய அதி உன்னதமான நகரம். துவாபரயுக அந்தத்தில் சர்வாதிகாரமண்டலாதிபதியாய் அஸ்தினாபுரத்திலிருந்து உலகமுழுமையுமாசாண்டவர்களான பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவைக்கொண்டு தேவதச்சனாகிய விஸ்வகர்மாவை வரவழைத்து, இந்திரன் பெயரால் ஒரு சிறந்த நகரத்தைகட்டுவித்து அதற்கு இந்திரப்பிரஸ்தமென்று பெயரிட்டு அதிலிருந்து அரசாட்சி புரிந்து வந்தார்கள். இதற்கு மேற்கே 50 மைல் தூரத்தில் அஸ்தினாபுரமிருக்கிறது. இதிற்றான் துவாபரயுக முழுதுமிருந்து இந்திய மன்னர்கள் பலரும் அரசாட்சி புரிந்துவந்தார்கள். அதற்குமுந்திய திரேதாயுகமுழுதும், அரிச்சந்திரன், நளன், தசரதன், ஸ்ரீ ராமன் முதலிய சக்கிரவர்த்திகள் அயோத்தியாபுரியை இராஜதானியாகக்கொண்டு செங்கோல் செலுத்திவந்தார்கள். இந்த டில்லி நகரமானது யமுனா நதிக்கரையில் கட்டப்பட்டிருக்கும் அழகிய பெரிய நகரம். அஸ்தினாபுரம் கங்காநதிக்கரையிலும், அயோத்திநகரம் சரயுநதிக்கரையிலும் கட்டப்பட்ட புராதன பட்டணங்கள். இப்பொழுது டில்லி நகரமானது பஞ்சாப் மாகாணத்திற் சிறந்த டெல்ஹி ஜில்லாவுக்கு தலை நகரமாய் விளங்குகிறது. இந்நகரம் முன்பு 30 மைல் நீளமும் 20 மைல் அகலமுமுள்ள நகரமாயிருந்ததுமன்றி 25 சதுரமைல் விஸ்தாரமான சமதரையை வடக்கில் மைதான் தரையையுடையதாயுமிருந்தது. இப்போது சுமார் 7 மைல் நீளமுள்ள அழகிய சிறுபட்டணமாய் புராதனமான அநேக நோக்கியான கட்டிடங்களையும் பெரிய பூர்வீக அடையாளங்களையுமுடையதாய் விளங்குகிறது தவிர அநேக பெரிய ரோட்டுகளாலும் பக்கத்துக்கு கரையிலுள்ள மாடமாளிகை கூட கோபுரங்களாலும் அழகான ஸர்ஜீவஸ்தலங்க

ளாலும் நேர்த்தியான உத்யாவனங்கள், தோட்டங்கள் வாவி கூபதடாகங்கள் நதிகள் முதலியவைகளாலும் அலங்காரமான ஸ்திரிபுருஷர்களாலும் அநேக கைத்தொழிற் சாலைகளாலும், சிங்காரமாகப் பிரகாசித்து விளங்குகிறது. கலியுகவாரம்பத்தில் தர்மராஜா முதலிய கௌரவகுல அரசர்கள் தங்கள் அரசாட்சியை பரீட்சித்து மகாராஜனிடம் ஒப்பிவித்து யுதிஷ்டிரர் சரீரத்துடன் பரலோகஞ் சென்றபின் சுமார் 2000 இரண்டாயிரம் வருஷகாலம் பிரிதிவியுமன்னன் அரசாட்சிவரையில் சந்திரவம்சத்து அரசர்களே அரசாட்சி புரிந்து வந்தார்கள். பிறகு, பௌத்தமதம் தலையெடுத்து பிராமணர்களை யடக்கி, சந்திரகுப்தன், அசோகன், அநகபாலன் முதலிய சிலவரசர்கள் சுமார் 200 வருஷம் அரசு புரிந்து க்ஷீணித்துப்போனார்கள். அவர்களில் அசோகச் சக்ரவர்த்தியின் காலத்திற்றான் புத்தமதம் பிரசித்திபெற்று, சீனம், மங்கோலியம், அருணம் சிங்களம், பர்மியம் முதலிய தேசங்களில் பிரசித்திபெற்றது. இவன்தான் ஜீவகாருண்யத்தையே உருவமாயமைந்த பௌத்தமத தருமத்தை உலக முழுதும் பரவச்செய்தவன். பிறகு பார்ஸீகத்திலிருந்து மகமது கஜினி என்பவன் கி. பி. 1008-ம் வருஷத்தில் வந்து இந்தியாவின் சிலபாகத்தை ஜெயித்து ஆளத்தொடங்கி கடைசியாய் கி. பி. 1857-ம் வருஷம் வரையில் பலர் ஆண்டு மகமது பகதூர் பாதுஷாவினுடைய காலத்தில் மகமதிய அரசாட்சி முடிவடைந்தது. ஆனால் டில்லியை அரசாண்ட மகமதிய சக்கிரவர்த்திகளின் காலம் 1806-ம் வருஷத்தோடு நின்றுவிட்டது. 1803-ம் வருஷத்தில் லார்டுலேக என்ற ஆங்கிலேய ஜெனரல் மகாராஷ்டிர அரசரை ஜெயித்து, ஷாஆலம் என்பவனை சிம்மாசனமேற்றினார். அது முதல் டில்லி ஈஸ்டு இன்டியா கம்பெனியாரின் ஆளுகையில் சேர்க்கப்பட்டது. பிறகு 1806-ம் வருஷத்தில் 86-ம் வயதில் ஷாஹாலம் இறந்துபோக அவன் மகன் 2-வது அக்பர் பேருக்கு பட்டங்கட்டினார்கள். அவனும் 1836-ம் வருஷத்தில் மரணமடைந்தபின் மகமது பகதூர் பாதுஷா என்பவனுக்குப் பட்டங்கட்டி கடைசியாய் வருஷமொன்றுக்கு

பிரிட்டிஷார் 15 லெட்ச ரூபாய் பென்ஷன் கொடுத்துவந்தார்கள். அது முதல் ஈஸ்டு இந்தியா கம்பேனியின் நேர் ஆளுகைக்கு வந்துவிட்டது. சில மகமதிய சக்ரவர்த்திகளின் ஆளுகையில் இந்தியாபட்ட கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. இந்தியாவிலுள்ள அநேக தேவாலயங்கள் இடிக்கப்பட்டும் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டும் தேவாலயங்கள் கொள்ளையிடப்பட்டும், சாஸ்திரங்கள் தீயிலிடப்பட்டும் போயின. இவர்களில் சிலர் செய்த அக்கிரமங்களாலேயே அவர்கள் ஆட்சி மறைந்துபோயிற்று. இந்த டில்லி பட்டணம் மொகலாயர் ஆளுகையில் 7 தடவை தீயிடப்பட்டும் இடிக்கப்பட்டும் கொள்ளையிடப்பட்டும் போய்விட்டதென்றால் இந்துக்களுக்கு அக்காலத்தில் நேர்ந்திருக்கும் கஷ்டங்களை சொல்லவும் வேண்டுமா? ஆங்கிலேய வியாபாரிகளின் 40 ஸ்டீமர்களை ஒரே சமயத்தில் நெருப்புவைத்து கொளுத்தும்படி அவுரங்கசீப் என்னும் மொகலாய் சக்ரவர்த்தி 17-ம் நூற்றாண்டில் உத்திரவிட்டார். அதன் பிறகுதான் ஈஸ்டு இந்திய கம்பேனியார் வியாபாரஞ் செய்வதற்கும் அதிகாரம் வேண்டுமென்றெண்ணினார்கள். ஆனால் பேபர், அக்பர் முதலிய நல்ல மகமதியர் ஆட்சியில் சுகமாயிருந்தாலும் அநேக அரசாட்சிகளில் பலவித துன்பங்களையும் கஷ்டங்களையும் அநுபவித்து கடைசியாய் ஆங்கிலேய அரசாட்சியில் நிம்மதியாய் இந்தியர் சுகவாழ்வு பெற்றார்கள். இந்த டில்லிமாநகரம் கெம்பீரமான காட்சியை யுடையது. அந்தப் பட்டணத்துக்கு பதினொரு வாயில்களுண்டு. அந்த கேட்டுகளின் பெயர், டில்லி, நெகம்பாத், காஷ்மீரம், லாகூர், காபூல், பதிமோரா, ஆஜ்மீர், தர்கோமான், லால், கைலா, என்றழைக்கப்படுகிறது. டில்லியைக் கடைசியா யழித்த பிறகு மகமதிய சக்கரவர்த்திகள் தமக்குப் பிரியமான ஜாதியார்களை வரவழைத்து தனித்தனியே பிராகாரம், அல்லது பேட்டைகளை, கட்டிக்கொடுத்து தனக்குச் சமீபத்தில் வாழும்படி செய்து அந்தப் பேட்டைகளில் வசிக்கும்ஜாதியார்களின் பெயர்ப்படியாயிருக்கும்படி மேற்சொல்லிய கேட்டுகளை கட்டிவைத்தார்கள். இந்த அரண்மனைகளில் முக்கியமானது "திவானியம்," என்பதேயாம்.

## 2. டில்லிபட்டணத்தின் பூர்வ சின்னங்கள்.

1. பழையஅரண்மனை :—சண்டிசவுக்கு என்னுமிடத்துக் கருகில் பிரமாண்டமான இராஜ அரண்மனை யொன்று கட்டப்பட்டிருக்கிறது. இது ஒருமைல் சுற்றளவுள்ளதாயும் 40 அடி உயரமுள்ளதாயும் செங்கருங்கற்களாற் கட்டப்பட்டு அநேக கலசங்களுடையதாகவிருக்கிறது. இதற்கு மூன்று பக்கங்களிலும் அரணாகசுவர்களிருப்பதன்றி ஒரு பக்கத்தில் யமுனை நதியின் கிளையுமோடுகிறது. இந்தக் கோட்டைக்கு இரண்டு விஸ்தாரமான கேட்டுகள் கட்டப்பட்டிருக்கிறது, கோட்டைக்குள் திவான்காஸ் என்ற அந்தரங்க மந்திராலோசனை சபாமண்டபம் வெள்ளை ஸ்படிக்க கற்களாலும் குரான் வாக்கியங்களோடுகூடிய பூங்கொடி சித்திராலங்கார வேலைகளாலும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சிங்கார மண்டபத்தின் ஒருபக்கம், பைரங்க மைதானமாக விட்டு ஒருபக்கம் உத்யானவனமும் அதில் ஸ்படிக நீரூற்றுக்களும் சிறந்து விளங்குகின்றன. இந்தக் கட்டிடத்தில் தான் Peacock Throne பீகாக்துரோன் என்னும் மயில் சிம்ஹாசனமிருந்தது. அது அக்காலத்தில் முப்பது லக்ஷ ரூபாய் பொருமான முள்ளது. இப்போது முன்னூறு லக்ஷம் பவுன் மதிக்கக்கூடிய அருமையான சிம்ஹாஸனத்தை 1739-ம் வருஷத்தில் நாதர்ஷா என்பவன் பார்ஸீகத்துக்கு பலவித ஆபரணங்களுடன் கொள்ளைகொண்டுபோய்விட்டான்.

2. இதற்கு சமீபத்தில் “ரோஷன் உட்டவுலா” என்றும் பெரிய கட்டிடமிருக்கிறது. அதில் நாதர்ஷா என்னும் கொடிய மகம்மதிய அரசன் உட்கார்ந்துகொண்டு டில்லி ஜனங்களைக் கொன்று கொள்ளையிடும்படி தன் சேனைகளை ஏவி அந்தப் பரிதாபக்காட்சியை பார்த்துக்கொண்டிருந்தான்.

3. ஜம்மாமஸ்ஜீது :—இது பூமிமட்டத்துக்கு மேல் 30 அடி உயரமுள்ள மண்மேட்டில் 450 அடிகள் சுற்றள

வுள்ள அழகும் கெம்பீரமும் வாய்ந்த கட்டிடம். அநேக படிக்கட்டுகளைக் கடந்து உயரப்போனால் ஸ்படிக்க கற்களாற் கட்டிய தடாகமிருக்கிறது. இக்குளத்துக்குப் பக்கத்தில் ஒரே சூத்திரக் கருவியினுதவியால் ஜலம் குளத்துக்கு வருகிறது. இந்த தடாகத்தை தாண்டி சிலபடிக்கட்டுகள் ஏறிப்போனால் 261 அடிகள் நீளமுள்ளதும் ஸ்படிக்க கற்களால் வளைத்த கமான் வளைவுள்ளதும் அநேக கலசமுள்ளதுமான கோவிலிருக்கிறது. இக்கட்டிடத்துக்குப் பக்கத்தில் 130 அடிகள் ஏறி மேல்மாடிக்குப் போய் டில்லிப்பட்டணத்தை பார்த்தால் இதன் காட்சிகள் நன்றாய்த்தெரியும். இந்த மசூதியை ஷாஜிகான் சக்கரவர்த்தி அக்காலத்தில் 10 இலட்ச ரூபாய் செலவழித்து ஆறு வருஷங்களிற் கட்டிவைத்தான்.

4. இந்து தேவாலயங்கள் :—இந்த நகரத்தை எத்தனையோ அன்னிய அரசர்கள் வந்து ஆலயங்களை இடித்துத் தகர்த்தும் தங்களிஷ்டப்படி புது கட்டிடங்களையும், கோவில்களையும், அரண்மனைகளையும், உத்யானவனங்களையும் கட்டினார்கள் என்றாலும் புராதன இந்து தேவாலயங்களையும் சில தர்மஸ்தாபனங்களையும், சில அடையாளங்களையும் முற்றிலும் அழிக்கமுடியாமல் இன்னும் பலநிலைபெற்றிருக்கின்றன. இவ்வளவு அழகும் பெருமையும் வாய்ந்த டில்லி பட்டணமானது சுமார் 2500 வருஷகாலமாக இந்து மன்னர்கள் ஆட்சியை விட்டிருந்தும் இந்துமதச்சின்னங்கள் உடைத்தாயிருப்பது ஆச்சரியமல்லவா? அது இந்து மதத்தின் மேன்மையையும் வல்லமையையும் உண்மையையும் காட்டுகிறது.

5. கோடிலா வென்னும் புராதனக் கோட்டை :— இந்தக் கோட்டை பிரோஜிஷாவால் கட்டப்பட்டது. மத்தியிலிருக்கும் ஜெயஸ்தம்பம் 2200 வருஷங்களுக்கு முன் அசோக சக்கிரவர்த்தியால் நிறுத்தப்பட்ட ஒரே செஞ்சந்தனக்கல்லினால் செய்த துஜஸ்தம்பம், அந்த கல் ஸ்தம்பம் மன்னார்குடி கெருடகம்பக்கல்லைப்போல சுமார் 50 அடி உயரமுள்ளதாயிருக்கிறது,

6. நட்சத்திர மேடை:—டில்லி நகரின் மேல்பாகத்தில் ஜெயசிங்கமகாராஜாவால் கட்டிவைக்கப்பட்ட நட்சத்திர மேடை இருக்கிறது.

7. குதுப்மினார்:—டில்லிக்கு தெற்கே 11-மைல் தூரத்தில் இந்த பூலோகத்திற்கெல்லா முயர்ந்த கோபுர ஸ்தம்பமிருக்கிறது. இது 242 அடி உயரமும், 100 அடி அகலமுமுடையதாய் உருளையும் திரளையும் ஐந்தடுக்கு மெத்தையுமுடையதாய் மேற்சிகரம் 30 சதுர அடியுள்ளதா யமைக்கப்பட்டிருக்கிறது. இது மகா ஆச்சரியமான கட்டிடம். இது இந்துக்களால் 1193-ம் வருஷத்தில் கட்டப்பட்டது.

8. இதற்குச் சமீபத்திலுள்ள ஷாஆலம் சக்கரவர்த்தியின் சமாதிக்குப் பக்கத்தில் 60 அடி உயரமுள்ள இரும்பினால் செய்யப்பட்ட ஜெயஸ்தம்பமொன்று நிறுத்தப்பட்டிருக்கிறது, இதைப் பார்க்கவர்கள், புராதன இந்திய இரும்பு வேலையையறிவார்கள். இன்றைக்கும் புதிதாகவே தோன்றுகிறது. துருவே கிடையாது.

9. கோட்டாவளி:—சவுக் வீதியானது 74 அடி அகலமுள்ள ராஜபாட்டை, இதில் கோட்டாவளி யென்ற கவர்ன்மெண்டு கட்டிடமிருக்கிறது. இங்கேதான் இங்கிலீஷ்காரரை எதிர்த்துச் சண்டை செய்யவந்த பகைவரை மடியச் செய்த விடம். இந்தவிடத்திற்றான் 1876-ம் வருஷத்தில் விக்டோரியா மகாராணியாருக்கு சக்கிரவர்த்தினிப் பட்டம் சூட்டப்பட்டது.

10. இன்னும் கலாமஸ்மீது, காஷ்மீர் கேட்டுக்கருகிலுள்ள கிறிஸ்துவக்கோவில், உமாயூன் சமாதி, நைஸாம் உட்டி என்ற மகம்மதிய ஞானியின் ஞாபகச்சின்னக் கட்டிட முதலிய அநேக கட்டடங்களிருக்கிறது. இங்கு அரசாட்சி புரிந்த அநேக இந்து மகமதிய அரசர்கள் தனித்தனியாய் அரண்மனைகளையும் கோட்டைகளையுங் கட்டி, அவைகள் தனித்தனியே இடிந்தும் பழுதாகியுமிருக்கின்றன.

## 2. ஜார்ஜ் சக்ரவர்த்தி வருகை.

நமது 5-வது ஜார்ஜ சக்ரவர்த்தி தம்பதிகள் இளவாசராயிருந்து 1906-௵ இந்தியாவை 6 மாசகாலம் சுற்றிப் பார்த்து ஜன்மதேசம் திரும்பும்போது இந்தியாவைவிட்டுப் பிரியும் சமயத்தில் அன்பு மேலிட்டு கண்ணீர் ததும்பப் பேசினார்கள். அதுமுதலே இந்தியாவுக்கு தாங்களின்னொரு முறை வரவேண்டுமென்ற எண்ணமுதித்துவிட்டது. அது முதல் இந்தியாவானது தங்களுடைய கீர்த்திக்கும், ஆஸ்திக்கும், உறைவிடமென்றும், அதை இன்னம் அன்பாய் ஆளப் படவேண்டுமென்றும் நினைத்தார்கள். பிறகு அதுமுதலே இந்தியா சம்மந்தமான விஷயங்களிலும், லார்டு மார்லியின் கௌன்ஸில்ஸ் திருத்தங்களிலும், கலந்து பேசியிருக்கக் கூடுமென்றுஊகிக்கப்படுகிறது.

பிறகு 1911-ம் ௵த்தில் தாம் இராஜ்யப் பொறுப்பை வகித்து சக்ரவர்த்தியானவுடன் முதலில் இந்தியாவை பார்க்க வேண்டுமென்ற எண்ணம் ஸ்திரப்படுத்தப்பட்டது. அதை மந்திரிகளுக்கறிவித்தவுடன், மந்திரிகளும், சில பார்லிமெண்டுமெம்பர்களும் போகக்கூடாதென மறுத்தும், சக்ரவர்த்தி பிடிவாதமாய் இந்தியாவுக்குவர தீர்மானித்தார். அதையனுசரித்தே லண்டனைவிட்டு இராஜகோலத்துடன் இராஜதம்பதிகள் இந்திய மந்திரியுடனும் புறப்பட்டார்கள். நமது இராஜ தம்பதிகள் ஏறிவந்த "மெடினா" ஸ்டீமர் 1911-ம் வருஷம் டிசம்பர் 2உ சனிக்கிழமை காலை 9—30-க்கு பம்பாய் துறைமுகம் வந்துசேர்ந்தது. இராஜ மரியாதையாக 101 குண்டுகள் போடப்பட்டன. ராஜப்பிரதிநிதி லார்டு ஹார்டிஞ்ச் தமது பிரைவேட் செக்ரடரி மேஜர் மாக்ஸ் வெல்லுடனும் மூன்று மெய்க்காப்பாளருடனும் கடற்படைத்தலைவராகியஎட்மண்டஸ்லேடுடனும், அப்பாலோ பந்தர் துறைமுகத்தில் நங்கூரம் போடப்பட்டிருந்த ஸ்டீமரில் போய் சக்ரவர்த்தி தம்பதிகளை சேவாஞ்சலிசெய்துபேட்டி செய்துகொண்டார்கள். பிறகு பம்பாய் கவர்னரும் ஹைகோர்ட்டு ஜர்ஜுகளும்

கண்டுகொண்டார்கள். அங்கு தங்கியிருந்தபொழுது சக்ரவர்த்தி இரண்டு ராஜவிருந்துகள் நடத்தினர். அதற்கு இராஜப்பிரதிநிதியும், பெரிய உத்தியோகஸ்தர்களும் போயிருந்ததுமன்றி பம்பாய் கவர்னரின் நிருவாகசபை மெம்பரான ஆனரபிள் மிஸ்டர் செல்பாலும், ஜஸ்டிஸ் சந்திரவர்க்கரும், அவர் மனைவியும், ஆனரபிள் ஸர் விட்டல்தாஸ் தாமோதரதாக்கஸேயும், மிஸ்டர் R. J. டாடாவும் ஜஸ்டிஸ் தேவாரும், ஹிஸ் ஹைனஸ் ஆகாகானும், ஸர் ஜேம் ஜெட்ஜீபாயும், பம்பாய் ஷெரீப் மிஸ்டர் ஷாபூஜி புரோசகரும் சென்றிருந்தார்கள். அங்கு ராஜபவனியாய் பம்பாய் நகரைச் சுற்றிப்பார்த்து முனிசிபாலிட்டியாராலும் மற்றவர்களாலும் பூஜிக்கப்பட்டு 7உ டில்லிநகர் வந்துசேர்ந்தார்கள்.

## தர்பார் காம்புகள்.

இராஜ அரண்மனையையொட்டிய பெரிய மைதானத்தில் புதிதாய் ஏற்படுத்திய பசுமையான தோட்டத்தில் வரிசையாயும் அழகாயும் அமைக்கப்பட்டிருந்த வெண்ணிறக் கூடாரங்களின் அழகும், அக்கூடாரங்களுக்குப் போவதற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த வில்லைபோன்ற பலபாதைகளின் விசித்திரத் தோற்றங்களும், தீபங்களின் அழகும் வர்ணிக்க முடியாதனவாயிருந்தது. பத்திராதிபர்களுக்கும், தந்தி டிபார்ட்மெண்டுகளுக்கும், செக்கிரிட்டரிகளுக்கும் தனித்தனிக் காம்புகள் அமைக்கப்பட்டிருந்தன. இதன் மத்தியில் அழகான பங்களாக்கள் சக்கரவர்த்திக்கென்று நிர்மிக்கப்பட்டிருந்தது. இக்கூடாரங்களைச்சுற்றியுள்ள அழகான காம்பில் நம் மகாராஜா சக்கிரவர்த்தி தங்கியிருந்தார். இதை யொட்டியே ராஜப்பிரதிநிதிக்கும், கவுன்சில் மெம்பர்களுக்கும், மகாண கவர்னர்களுக்கும், துருப்புகளுக்கும் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தேசமன்னர்கள் காம்புகளும் சமீபத்திலேயே யிருந்தன. ராஜ சக்கரவர்த்தி காம்புக்கும் தேச மன்னர் காம்புக்கும் மத்தியில் தர்பார் கொலு மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. காம்புகளைச்சுற்றி படைகள் அணிவகுக்கப்பட்டிருந்தன. சேனை காம்புகளுக்கும் தர்பார்

மேடைக்கும் இடையே 3-ரயில் பாதைகள் போடப்பட்டிருந்தன. ஒவ்வொரு கூடாரத்திற்கும் வேண்டிய சௌக்கியங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இராஜ விருந்தினர்களாக வந்திருக்கும் அனைவருக்கும், தனித்தனியே கூடாரங்கள் ஏற்பட்டிருந்தன. ஒவ்வொரு கூடாரத்தின் முன்புறத்திலும் கண்ணுக்குக் குளிர்மையாயிருக்கும்படியாய் பச்சை பயிர்களும் புஷ்பச்செடிகளும் வைத்து வளர்க்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கூடாரத்திலும் படுக்கை அறை, சாமான்கள் வைக்கும் அறை, ஸ்நான அறை, மலஜலோபாதைக்கு ஒதுங்குமிடம், இரண்டு மேஜைகள், முகக்கண்ணாடி, பீரோ, பீங்கான்கள், தொட்டிகள், படுக்கக் கட்டில்கள், உட்கார நாற்காலிகள், குளிர்காய நெருப்புக் கணப்புகள், வேலையாட்கள் எழுதுவதற்குவேண்டிய சாமான்கள், ஸ்னானபானங்களுக்குக் குழாய் ஜலம், (உஷ்ணஜலம், பச்சை ஜலம்) முகங்கழுவ உயர்ந்த சோப்புகள், துவாலைகள், மின்சார விளக்குகள், டெலிபோன்கள், தபாற்பெட்டிகள் முதலிய சகல சௌகரியங்களும் ஏற்பட்டிருந்தன. தர்பார் கூடாரங்கள் 5 மைல் விஸ்தீரணமுள்ள இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

டிசம்பர்மீ 7௳ ராஜதம்பதிகள் டில்லிக்கு விஜயம் செய்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரபுக்களும் மற்றவர்களும் தங்கள் தங்கள் சிநேகிதர்களுடன் ஸலீம்கார் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து காம்பு வரையில் வரிசையாய் போடப்பட்டிருந்த காலரிகளிலும் மற்றுமுள்ள வீதிகளிலும் அமர்ந்து ராஜதம்பதிகள் வரவை எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்கள். ஸலீம்கார் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் ராஜப்பிரதிநிதியும், லேடி ஹார்டிஞ்சும், இன்னும் சில உத்தியோகஸ்தர்களும், ஜனத்தலைவர்களும் நின்றுகொண்டு ராஜதம்பதிகள் வருவதும் ஸ்பெஷலின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஸ்பெஷல் ஸ்டேஷன் பிளாட்பாரத்தை அடைந்ததும், ராஜப்பிரதிநிதியும், லேடி ஹார்டிஞ்சும், ஸ்டேஷனிலிருந்து இறங்கிய பில்ட்மார்ஷல் உடுப்பைக்

தரித்திருந்த ஜார்ஜ்சக்கரவர்த்தியையும் ராணியையும் வரவேற்றார்கள். அச்சமயம் ஸெலீம்கார்ஸ்டேஷன் என்ன ஆரவாரத்தோடு இருந்த தென்பது சொல்லமுடியாது. உடனே 101 மரியாதைக்குண்டுகள் போடப்பட்டன. ஸ்டேஷனில் மகாணக்கவர்னர்களும் மற்றவர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். ஸ்டேஷனிலிருந்து கால்நடையாய் வரவேற்பு மண்டபத்துக்குச்சென்றார்கள். அங்கே வந்திருந்த சிற்றரசர்கள் ஒருவர்பின் ஒருவராக சக்கரவர்த்திக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்கள். உடனே ராஜபவனி புறப்பட்டது. முதல் வரிசையில் கவர்னர்கள், லெப்டினென்ட் கவர்னர்கள், சீப்கமிஷனர் ஆகிய இவர்களும், 2-வது ஊர்கோலத்தில் ராஜதம்பதிகளும், 3-வது ஊர்கோலத்தில் தேசமன்னர்கள் வண்டிகளும், அவரவர்கள் தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட புராதன சின்னங்களுடன் பவனி சென்றார்கள். உயர் மட்டத்திலிருந்த ரிட்ஜ் ஸ்தலத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த வரவேற்பு மண்டபத்தை யடைந்ததும் ஜனங்கள் குதூகலத்துடன் ராஜதம்பதிகளை வரவேற்றார்கள். சட்டசபை மெம்பர்களும், ஜனத்தலைவர்களும் பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகளாய்க் காத்திருந்து ராஜதம்பதிகளுக்கு வரவேற்பு பத்திரம் வாசித்துக்கொடுத்தார்கள். உடனே ராஜபவனி ரிட்ஜை விட்டிறங்கி காம்புக்குச் சென்றது. பிற்பகலில் தேசமன்னர்கள் சக்கிரவர்த்தியை பேட்டிகண்டார்கள். ராஜப்பிரதிநிதி மறுபேட்டி கண்டார். காலஞ்சென்ற எட்வர்ட் சக்கரவர்த்தியின் ஞாபகார்த்தமாக ஏற்படப்பட விருந்த வெண்கலச் சிலைக்கு அஸ்திவாரக்கல்லை ஜார்ஜ்சக்கரவர்த்தி கையால் திறந்துவைத்தார். அன்று சாயங்காலம் ஒரு ராஜா விருந்து நடந்தது.

## தர்பார் கிரீடமும், சிம்ஹாஸனமும்.

சக்ரவர்த்தி ஏகாதிபத்தியக் கிரீடம் ஒன்றைத்தரித்திருந்தார். அதில் ஒன்னே முக்கால் அங்குல அகலமுள்ள வச்சிரங்களும் அதன்மத்தியில் 4 கோமேதகங்களும் வைத்து இழைக்கப்பட்டிருந்தன. 8 வில்வளைவுகளும் அதன் மேல் ஒருசிலுவை

யும் பதிப்பிக்கப்பட்டு இழைக்கப்பட்டிருந்தன. சக்ரவர்த்தி ஆர்டர் ஆப்தி கார்டரும், ஸ்டார் ஆப் இந்தியாவும் அமைந்த காலரை கழுத்தில் அணிந்திருந்ததுமல்லாமல், ஊதா நிற முள்ள சொக்காவையும், பீதாம்பரக் குல்லாவையும் தரித்திருந்தார். சக்ரவர்த்தினி புஷ்பங்களால் சித்திரிக்கப்பட்ட வெண்பட்டை உடுத்தியிருந்தார். சிரஸில், வைரக்கிரீடம் தரித்திருந்தார். இத்தர்பாரை முன்னிட்டே 2 சிம்ஹாஸனங்கள் கல்கத்தா கவர்ன்மெண்டு நாணயச்சாலையில் வார்க்கப்பட்டன. இதற்கு முன்னிருந்த 2 ஆசனங்களைத் திருத்தி புதுப்பித்தார்கள். இச்சிம்ஹாஸனங்களை மெஸர்ஸ் ஹாமில்டன் கம்பெனியார் செய்ததாக சொல்லப்படுகிறது. இச்சிம்ஹாஸனங்களைச் செய்வதற்கு 80,000 பழைய ரூபாக்களை உருக்கப்பட்டதாகத் தெரிகிறது. சிம்ஹாசனம் முழுதும் வெள்ளியால் வார்க்கப்பட்டு மேலே தங்கத்தகடுகள் அரையப்பட்டவை. இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாண்டு என்னும் இந்நான்கு பிரதானமான தேசங்களைக் குறிப்பிடுவதற்காக ரோஜா, திஸ்ஸில், ஷம்ராக், தாமரை இந்த நாலு புஷ்பச்சின்னங்களும், அதன் மத்தியில் இங்கிலாந்து அரசரின் ராஜச்சின்னமும் செதுக்கப்பட்டிருந்தன.

---

## பதினைந்தாவது அத்தியாயம்.

## டில்லிமகுடாபிஷேகம்,

### 1. டில்லிதர்பார்.

1911-ம் வருஷம் டிசம்பர்மீ 12உ காலமே துருப்புகள் தங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இடங்களை அடைந்தன. டில்லி மாநகர வாசிகளும், காம்பு வாசிகளும் ரயில் வண்டிகளிலும், மோட்டார் வண்டிகளிலும், இன்னும் இதர வண்டிகளிலும் தர்பார் மண்டபத்திற்கு வந்தார்கள். இதர ஜனங்கள் மேட்டுப்பாங்கான இடங்களில் ஏறி நின்றுகொண்டிருந்தார்கள். காலை 10 மணிக்கு தர்பார் மண்டபத்தில் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். அவர்கள் ராஜப் பிரதிநிதி, ராஜதம்பதிகள்

ஆகிய இவர்களின் வரவை எதிர்பார்த்தவண்ணமாகயிருந்தார்கள் எங்கே பார்த்தாலும் ஜனக்கூட்டமாயிருந்தது. தர்பார் மண்டபத்தின் முகப்பில் 20000 துருப்புகள் நின்றுகொண்டிருந்தன. 11 மணிக்கு ராஜப்பிரதிநிதி லார்டு ஹார்டிஞ்ஜ் அவர் மனைவியுடன் தர்பார் மண்டபம் வந்து சேர்ந்தார். சிறிது நேரத்துக்கெல்லாம் ஜெயொலியும் வெடிகளும் கிளம்பியதும் மண்டபத்திலுள்ளவர்கள் ராஜதம்பதிகள் வந்துவிட்டதாக நினைத்து தங்களிடத்தில் எழுந்து நின்றுகொண்டிருந்தார்கள். பீரங்கிப்படைகளும், குதிரைகளும் வரிசை வரிசையாய் வந்துகொண்டிருந்தன. அதன் மத்தியில் ராஜதம்பதிகளின் வண்டிவந்தது. 101 மரியாதைக்குண்டுகள் போடப்பட்டன. சக்கரவர்த்தி தம்பதிகள் ஏறிவந்த Royal Escort ராயல் எஸ்கார்டு குதிரை வண்டி தர்பார் மண்டபத்தின் ஆசாரவாசலில் வந்து நின்றதும், ராஜப்பிரதிநிதி அவர்களை வரவேற்றார். சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி இவர்களுடைய புரளும் உடைகளை ராஜகுமாரர்கள் ராஜகுமாரிகளும் தாங்கிவர ராஜதம்பதிகள் மெல்ல நகர்ந்து கொலுமண்டபத்தில் அவர்களுக்கு அமைக்கப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்தார்கள். உடனே தர்பார் காரியாதிகாரி சக்கரவர்த்தியிடம் தர்பாரைத்திறக்க அனுமதிபெற்றதும், எக்காள வாத்தியக்காரர்கள் கொம்புகளை ஊதினார்கள், பேரிகை முதலிய வாத்தியங்கள் முழங்கின, சப்தம் அடங்கியதும் நம் 5-வது ஜார்ஜ் சக்கரவர்த்தி அடியிற்கண்டபடி பேசினார்.

## சக்கரவர்த்தியவர்களின் சிம்மாசனப்பேச்சு.

இன்றைய தினம் நான் உங்களோடிருப்பதானது எனக்கு மனப்பூர்வமான ஆனந்தத்தைக்கொடுக்கிறது. இந்தவருஷம் முழுதும் மஹாராணிக்கும் எனக்கும் பல பெரிய சங்கடங்களிருந்ததோடு எப்பொழுதுமில்லாத அலுவல்களும் இருந்தன. ஆனால் அந்த அலுவல்களெல்லாம் சந்தோஷகரமானவைகளே. நான் உங்களை முதல்தடவை பார்த்து நாளாகி என்னுடைய வெகுதூரமுள்ள தேசத்துக்குப்போனபோதிலும், நாங்கள் உங்களிடத்தில் கொண்ட ஆசையும்

ஆநந்தமான ஞாபகமும் உங்களை மறுபடியும் பார்க்கவேண்டுமென்று எங்களைத்தூண்டின. ஆகையால் எங்கள் வீடுபோலவே நடத்திவந்த உங்களுடைய தேசத்தைப்பார்க்க இந்த நீண்டயாத்திரை செய்யத்தொடங்கினேன். இப்படிச் செய்ததால் நான் ஜுன்மீ 22உ வெஸ்ட்மினிஸ்டர் ஆபீயில் ஈசுவரகிருபையால் மகுடாபிஷேகமானதை இந்தியாவிற்கு நேரில் வந்து விளம்பரம் செய்வதாகச் சொன்னதை நிறைவேற்ற முடிந்ததாயிற்று. மஹாராணி சக்கரவர்த்தினியுடன் நான் இங்கேவந்து இந்தியாவிலுள்ள மன்னர்களும் விசுவாசமுள்ள ஜனங்களுக்கும் எங்களுடைய அன்பைக் காட்ட ஆவலுள்ளவனாயிருப்பதோடு, இந்தியாவின் க்ஷேமமும் சந்தோஷமும் எங்கள் இருதயத்திற்கு எவ்வளவு அருமையாய் இருக்கிறதென்பதையும் காட்ட ஆவலுள்ளவனாயிருக்கிறேன். என்னுடைய மகுடாபிஷேகக் கொண்டாட்டத்தை பார்க்காதவர்கள் டெல்லியில் நடக்கும் வைபத்தைப் பார்க்க வேண்டுமென்பதுஎன்கருத்து.

"இந்தப் பெருங்கூட்டத்தைப்பார்க்க எனக்கும் சக்கரவர்த்தினிக்கும் உண்மையான சந்தோஷமும் திருப்தியும் உண்டாகின்றன. என்னுடைய கவர்னர்களையும், நம்பிக்கை பெற்ற உத்தியோகஸ்தர்களையும், என்னுடைய மேலான மன்னர்களையும், ஜனப்பிரதிநிதிகளையும், என் இந்திய சமஸ்தானங்களைச்சேர்ந்த ராணுவங்களின் டெபுடேஷன்களையும், இந்தக்கூட்டத்தில் பார்த்துச் சந்தோஷமும் திருப்தியும் அடைகிறேன். அவர்கள் எனக்கு பக்தியுடன் செலுத்த விரும்பும் சேவாஞ்சலியையும் ராஜபக்தியையும் மனப்பூர்வமான திருப்தியுடன் நான் நேராகப்பெறுவேன். சரித்திரத்தில் நிலைபெறக்கூடிய இந்த சமயத்தில் மன்னர்களும் ஜனங்களும் ஒற்றுணர்ச்சியையும் அன்புவாய்ந்த நல்லெண்ணங்களையும் பாராட்டி என்னோடு ஒன்றாகச் சேர்ந்திருக்கிறார்கள் என்ற எண்ணம் என்மனதில் ஆழப்பதிகிறது. இந்தஉணர்ச்சிகளுக்கு அறிகுறியாக என்னுடைய விசேஷ தயவையும் மதிப்பையும் காட்டும் குறிகளால் என்னுடைய மகுடாபி

ஷேக ஸம்பவம் ஞாபகத்திலிருக்கும்படி செய்ய விரும்புகிறேன். இன்று இன்னும் சில நேரம் பொறுத்து இவைகள் இன்னவையென்றும் இந்தக் கூட்டத்திற்கு என் கவர்னர் ஜெனரலைக்கொண்டு சொல்லிவிப்பேன். முடிவில், என்னுடைய பூஜியர்களான மூதாதைகளால் உங்களுடைய சுதந்திர பாத்தியங்களைக் காப்பதாகச் செய்த உறுதிகளை புதுப்பிக்க இந்த ஸமயம் வாய்த்ததென்று நான் சந்தோஷப்படுகிறேன். உங்களுடைய க்ஷேமம், அமைதி, திருப்தி, இவைகளைப்பற்றி நான் கொள்ளும் கவலையைத் தெரிவிக்க ஸமயம் நேரிட்டதென்றும் சந்தோஷப்படுகிறேன். என்னுடைய பிரஜைகளுக்குக் காவலாய் கடவுள் அருள் இருந்து அவர்களுடைய ஸந்தோஷத்தையும் வளப்பத்தையும் முற்படுத்த என்னாலியன்ற முயற்சியில் உதவி புரிவாராக. இங்கிருக்கும் மாமந்த மன்னர்களுக்கும் பிரஜைகளுக்கும் என்னுடைய அன்புவாய்ந்த வாழ்த்துக்களைச் செய்கிறேன்.”

சக்கரவர்த்தி பேசிமுடிந்ததும் இராஜப்பிரதிநிதி சேவாஞ்சலி செய்துவிட்டு ஒதுங்கி நின்றார். பின்பு கமாண்டர் இன்சீபும், கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபை மெம்பர்களும், முதல் வகுப்பு தேசமன்னர்களும், வங்காள ஐகோர்ட் ஜட்ஜ்களும், இந்தியா சட்டசபை மெம்பர்களும் சக்கரவர்த்தி தம்பதிகளுக்கு சேவாஞ்சலி செய்தார்கள். பிறகு மகாணத்து தேசமன்னர்கள் வணங்கினார்கள். பிறகு சக்கரவர்த்தி தம்பதிகள் ராஜகோலத்துடன் கொலுமண்டபத்தை விட்டெழுந்து ராஜமண்டபத்தை அடைந்தார்கள். அம்மேடையின் இடதுபக்கத்தில் லேடி ஹார்டிஞ்சும், வலது பக்கத்தில் லார்டு ஹார்டிஞ்சும் நின்றுகொண்டிருந்தார்கள். பாண்டு வாத்தியக்காரர்கள் பாண்டு வாசிக்க, வெளிப்புறத்திலிருந்து ஆடம்பரமாய் உடை உடுத்திக்கொண்டிருந்த கட்டியக்காரர்கள் வெண்ணிறக் குதிரைகளின்மேல் மண்டபத்து நடைவழியாய்வந்து ராஜதம்பதிகளின் உத்தரவுபெற்று, அடியிற்கண்ட ராஜவிளம்பரத்தை இங்கிலீஷிலும், உருது பாஷையிலும், படித்தார்கள்.

## 2. இராஜ விளம்பரம்.

### ஜார்ஜ் மகாராஜா சக்ரவர்த்தி அவர்கள்.

நமது அரசாட்சியின் முதல் வருஷமாகிய நமது கர்த்தருடைய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தாம் வருஷம் ஜூலை மாதம் பத்தொன்பதாம் தேதியும் நவம்பர் மாதம் ஏழாம் தேதியுமுள்ள நம்முடைய இராஜ விளம்பரங்களினலே, ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் ஜூன் மாதம் இருபத்திரண்டாம் தேதியில் நமது இராஜ மகுடாபிஷேக மகோற்சவத்தை சர்வசக்தியுள்ள கடவுள் கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும் கொண்டாடவேண்டுமென்னும் நமது ராஜ உத்தேசத்தை நாம் பிரசித்திப்படுத்தி அறிவித்தபடியாலும்;

சர்வசக்தியுள்ள கடவுள் கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும் சென்ற ஜூன் மாதம் இருபத்திரண்டாம் தேதி வியாழக்கிழமை மேற்படி மகோற்சவத்தை நாம் கொண்டாடக் கூடியவர்களா யிருந்தபடியாலும்;

நமது அரசாட்சியின் முதல் வருஷமாகிய நமது கர்த்தருடைய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் மார்ச்சு மாதம் இருபத்திரண்டாம் தேதியுள்ள நம்முடைய இராஜ விளம்பரத்தினாலே, மேற்படி மகோற்சவமானது அந்தப்படி கொண்டாடப்பட்டதென்று நம்முடைய இந்திய இராஜ்ஜியங்களுக்குள் நம்மிடத்தில் அன்பு பாராட்டும் எல்லாக் குடிஜனங்களுக்கும் நாமே நேரில் பிரசித்தப்படுத்துவதும், நம்முடைய கவர்னர்களையும், லெப்டினென்ட் கவர்னர்களையும், நம்முடைய மற்ற உத்தியோகஸ்தர்களையும், நமது சம்ரக்ஷணையிலிருக்கும் சுதேச இராஜ்ஜியங்களின் அரசர்களையும், அதிபதிகளையும், பிரபுக்களையும், நமது இந்திய ராஜ்ஜியத்தைச் சேர்ந்த சகல மகாணங்களின் பிரதிநிதிகளையும் நமது சந்நிதானத்துக்கு வரவழைப்பதும் நம்முடைய கோரிக்கையென்றும் விருப்பமென்றும் நாம் தெரிவித்தபடியாலும்;

நமது இந்த இராஜ விளம்பரத்தினால் நாம் இப்போது அதைப் பிரசித்தஞ்செய்து, நம்முடைய சகல உத்தியோகஸ்தர்களுக்கும் இப்போது டேல்லியில் கூடியிருக்கும் சகல அரசர்களுக்கும், அதிபதிகளுக்கும், பலவகையான ஜனங்களுக்கும் நாம் மகாராஜாவாகவும் சக்ரவர்த்தியாகவும் வாழ்த்து கூறி, நமது இந்திய இராஜ்ஜியத்தில் நாம் ஆழ்ந்த அன்பு வைத்திருப்பதையும், அதன் க்ஷேமத்திலும் அபிவிருத்தியிலும் நாம் இடைவிடாமல் அக்கறைகொண்டவர்களாயிருப்பதையும், இனி எப்போதும் அப்படியே இருந்து வருவதையும் அவர்களுக்கு உறுதியாய்ச் சொல்லுகிறோம்.

டெல்லியில் நமது இராஜ சபையிலே நமது அரசாட்சியின் இரண்டாவது வருஷமாகிய ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினோராம் வருஷம் டிஸம்பர் மாதம் பன்னிரண்டாம் தேதியில் கொடுக்கப்பட்டது.

மகாராஜ சக்ரவர்த்தி அவர்களைக் கடவுள் ரக்ஷிப்பாராக.

ராஜவிளம்பரம் வாசித்து முடித்ததும், ராஜகீதம் வாசிக்கப்பட்டன. கொம்புகள் ஊதப்பட்டதும் 101 குண்டுகள் போடப்பட்டன. மறுபடியும் கொம்புகள் ஊதப்பட்டது.

## தர்பார் நன்கொடைகள்.

உடனே ராஜப்பிரதிநிதி லார்டு ஹார்டிஞ் எழுந்திருந்து இம்மஹோற்சவ சந்தர்ப்பத்தில் சக்ரவர்த்தி அளித்திருக்கும் நன்கொடைகள் இன்னவையாகுமென்று சொன்னார். அவை பின்வருமாறு :—

**வெது ஜனக் கல்விக்காக ரூபாய் 50 லட்சம் :—**பெருமை தங்கிய அரசரின் இஷ்டத்துக்குக் கீழ்ப்படிந்தும், அவருடைய ஸெக்ரிடெரி ஆப் ஸ்டேட்டின் ஸம்மதத்தைப் பெற்றும், கல்வி விருத்தியின் ஆவசியகத்தை யுணர்ந்தும், இவ்விஷயத்தில் பொதுவாயுள்ள உணர்ச்சியை அங்கிகரித்தும், இந்தியாவில் கல்வி வெகுவாயும் விசாலமாயும் கிடைக்கும்படி செய்ய இந்திய கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த நோக்கத்தை யனுஸரித்து,

வெகு ஜனக் கல்வியை விருத்திப்படுத்த உடனே 50 லக்ஷம் ரூபா செலவழிப்பதாக யோசனை செய்திருக்கிறார்கள். இந்தத்தொகையுடன் இனி வருஷா வருஷம் தாராளமாய் மேலும் தொகைகள் கொடுப்பதாக கவர்ன்மெண்டின் உத்தேசம்.

**கடற்படை, தரைப்படை, யாட்களுக்கு அரைமாதச் சம்பளம் இனாம்**:—ராஜ சக்ரவர்த்தி தம் கடற்படை, தரைப்படை யாட்களின் நன்றியுள்ள அரிய ஸேவகத்தைக் கொண்டாடி "நான் கம்மிஷன்ட்" ஆபீஸராயும், இந்தியாவிலுள்ள ப்ரிட்டிஷ் சேனையையும் இந்தியா சேனையையும் சேர்ந்த ரிஸர்வ் (கையிருப்பு) ஆட்களாயும், இன்னும் ராணுவ இலாகாவிலிருந்து சம்பளம் வாங்குபவர்களாடம், இருக்கும் மாதம் ரூபா 50 சம்பளத்துக்கு மேற்படாதவர்களுக்கெல்லாம் அந்தந்த அந்தஸ்துக்குள்ள சம்பளத்தில் ½ மாத சம்பளம் இனாம் கொடுப்பதாக விளம்பரப்படுத்தும்படி எனக்கு ஆக்ஞையிட்டிருக்கிறார்.

**இந்தியர்களுக்கு "விக்டோரியா க்ராஸ்"**:— மேலும், இது முதல் தம் இந்திய ஸைனியத்தில் ஆட்களாயும் ரிஸர்வ்களாயும் உள்ளவர்களும் நேடிவ் ஆபீஸர்களும் சௌகரியத்தின் பொருட்டு "விக்டோரியா க்ராஸ்" என்ற அந்தஸ்து பெற உரியவர்களாவார்கள் என்றும், ராஜ சக்ரவர்த்தியின் முடிசூட்டு தர்பாராகிய இதுமுதல் 10 வருஷத்தில், "ஆர்டர் ஆப் ப்ரிடிஷ் இந்தியா" மெம்பர்கள் முதல் வகுப்பில் 52 பேர் அதிகமாகும்படி செய்வதோடு, இக்கொண்டாட்டங்களின் அறிகுறியாக புதியதாய் முதல் வகுப்பில் 15 ஸ்தானங்களும், இரண்டாவது வகுப்பில் 19 ஸ்தானங்களும் உடனே ஏற்படுத்தப்படுமென்றும், இதுமுதல் எல்லைப்புறமிலிஷியா படையையும் மிலிடெரி போலீஸையும் சேர்ந்த இந்திய ஆபீஸர்கள் மேற்சொன்ன அந்தஸ்தைப்பெற அருகர்களாவார்களென்றும், நெடுங்காலம் கௌரதைக்குறியவிதமாய் ஸேவகம் செய்து, ராஜ சக்ரவர்த்தியின் இந்திய சேனையில் இந்திய ஆபீஸர்களாயுள்ளவர்களுக்கு, அவரவர்களுக்குத் தக்கபடி, ஸ்பெஷலாக நிலமோ, நிலவரி வருமானமோ, இனாம் கொடுத்து, அல்லது நிலவரி தள்ளுபடி செய்து, சன்மானம் செய்யப்படுமென்றும், இந்தியன்-ஆர்டர்-ஆப்-மெரிட்டில் உள்ளவர்களில் மரணம் நேர்ந்தால், மரித்தவரின் மனைவிக்கு மூன்றுவருஷங்களுக்கு ஸ்பெஷல் அலவென்ஸ் கொடுப்பதாக இப்போதிருப்பதைமாற்றி, இந்த தர்பார் முதற்கொண்டு, அவர்கள் இறக்கும் வரையில், அல்லது அவர்கள் மறு விவாகம் செய்துகொள்ளும்வரையில் அந்த அலவென்ஸ் கொடுக்கப்படுமென்றும் ராஜ சக்ரவர்த்தி நியமித்திருக்கிறார்.

**ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்கு இனும்:**—தம் ஸிவில் ஸர்விஸிலுள்ளவர்கள் பக்தியுடன் தத்தம் வேலைகளை நிறைவேற்றி வருவதை நன்குமதித்து கவர்ன்மெண்ட் ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் அரைமாதச் சம்பளம் இனும் கொடுப்பதாக விளம்பரப்படுத்தும்படி எனக்கு சக்ரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார்.

**பட்டம் பெற்றோர்களுக்கு அடையாளக்குறிகளும், கலைவல்லோருக்குப் பென்ஷனும்** :—திவான் பகதூர், ஸர்தார் பகதூர், கான் பகதூர், ராய் பகதூர், கான் ஸாகிப், ராவ் ஸாகிப், ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளவர்களுக்கும் இனிப்பெறப்போகிறவர்களுக்கும் கௌரவத்துக்கும மதிப்புக்கும் அறிகுறியாக அவரவர்களுக்குத் தக்கவாறு, அடையாளக்குறிகள் கொடுபடவேண்டும் என்றும், மகாமகோபாத்தியாயர், ஷாம்ஸ் உல்-உல்மா என்னும் பூஜிக்கத்தக்க பட்டங்களை இப்போது பெற்றவர்களெல்லாருக்கும இனி பெறுவோர்களுக்கும் இந்தியாவின் புராதன கலையின் புகழை உத்தேசித்து, வருஷவாரி பென்ஷன் கொடுக்கப்படவேண்டுமென்றும் ராஜசக்ரவர்த்தி கருணையுடன் ஆக்ஞாபிக்கிறார்.

**வடமேற்கெல்லைப்புறத்தில் நிலம் இனும்:**—தம் தர்பார் ஞாபகார்த்தமாகவும், பொது ஸேவகத்தில் சிறந்திருப்பதை யுத்தேசித்தும், வடமேற்கெல்லை மாகாணத்திலும் பலுசிஸ்டானிலும் நிலங்கள் வரியில்லாமல், கொடுக்கப்பெற்றவர் தம் ஜீவ்யகால முழுதுமோ, லோகல் கவர்ன்மெண்ட் இஷ்டப்படுகிறபடியே, கொடுக்கப்படும், அல்லது கவர்ன்மெண்ட் இப்போது கைப்பற்றியிருக்கும் நிலங்கள் திருப்பி கொடுத்துவிடப்படும்.

**“நாஜரானு” இனி செலுத்தவேண்டாம்:**—தம்முடைய இந்திய சிற்றரசுகளின் க்ஷேமத்தைப் பெருமனதுடன் கோரி, அவர்களின் தேச ஆதிக்கத்துக்குப் புதிதாய் ஒருவர் வருந்தோறும் செலுத்தவேண்டிய ‘நாஜரானு’ தொகை இனிசெலுத்தப்படவேண்டியதில்லையென்றும், நியாயாதிகாரம் பெறாத கத்தியவார் குஜராத் ஆகிய பிரதேசங்களிலுள்ள சிறு ராஜ்யங்களும், மீவாரில் பூமியாச்களும் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கவேண்டிய சில்லரைக் கடன்கள், இந்தியா கவர்ன்மெண்டின் உத்திரவுப்படி முழுமையுமோ ஒரு பாகமோ, தள்ளுபடி செய்யப்படுமென்றும், இம்பீரியல் ஸர்விஸ் துருப்புகளைக் கௌரவிக்கும் பொருட்டு பிரிட்டிஷ் இந்தியா ஆர்டரில் (அந்தஸ்தில்) சில அதிக ஸ்தானங்கள் ஏற்படுத்தப்படுமென்றும், விளம்பரப்படுத்தும்படி ராஜசக்ரவர்த்தி எனக்கு ஆக்ஞையிட்டிருக்கிறார்.

கைதிகள் விடுதலை:—ராஜ சக்ரவர்த்தி கிருபையையும் இரக்கத்தையும் மேற்கொண்டு, இப்போது குற்றங்கள் செய்து சட்டப்படியுள்ள தண்டனையை அனுபவிக்கும் சிலகைதிகளைச் சிறையிலிருந்து விடுவிக்கும்படியும், சிறுதொகை கடன்பட்டவராயும் மோசம் செய்யாமல் தரித்திரத்தால் சிறைப்பட்டவராயும் உள்ள ஸிவில் கடனாளிகளெல்லாரையும் விடுவித்து, அவர்கள் பட்ட கடன்களை (கவர்ன்மெண்ட்) கொடுத்துவிடும்படியும் உத்தரவிடத் திருவுள்ளம் கொண்டிருக்கிறார்.

மேற்சொன்ன இனங்களும் நன்கொடைகளும் தருமங்களும் யார்யாருக்கு எந்தெந்த நிபந்தனைக்குட்பட்டுச் செய்யப்படுமென்பது இனி வெளிப்படுத்தப்படும்.

'ராஜ சக்ரவர்த்தியை கடவுள் காப்பாராக.'

## டெல்லி தலைநகரமானது, வங்காளப் பிரிவினை மாற்றப்பட்டது.

சக்கரவர்த்தி யவர்கள் தர்பார் முடிவில் சில முக்கியமான நிர்வாகத் திருத்தங்களுக்குத் தாம் அனுமதி கொடுத்திருப்பதாக விளம்பரப்படுத்தினார். இந்தத் திருத்தங்கள் பின்வருமாறு சக்கரவர்த்தியினால் வெளியிடப்பட்டன.

"தர்பார் முடிவில் நமது ஜனங்களுக்கு நாம் வெளியிட விரும்புவதாவது: ஆலோசனைச் சபையிலுள்ள நமது கவர்னர் ஜெனரலோடு ஆலோசனைசெய்து நம்மந்திரிகள் நமக்குச் சொன்னபடி இந்தியாக் கவர்ன்மெண்டின் ராஜஸ்தலம் கல்கத்தாவிலிருந்து பழய ராஜஸ்தலமாகிய டெல்லிக்கு மாற்றுவதாக நிச்சயம் பண்ணிவிட்டோம். அதே காலத்தில் இந்த மாறுதலின் பயனாக, வெங்காளமானது ஒரு பிரசிடென்ஸியாக்கப்பட்டு அதற்கு ஒரு கவர்னர் நியமிக்கப்படுவார். பேஹார், ஒரிஸ்ஸா, சோடா நாக்பூர், இந்த மூன்று மாகாணங்களையும் சேர்த்து ஒரு லெப்டினெண்ட் கவர்னரும் நிர்வாக சபையும் நியமிக்கப்படுவார்கள்; ஆஸாம் மாகாணம் ஒரு சீப் கமிஷனருக்குள் இருக்கும். இப்படி புதிதாய் சிருஷ்டிக்கப்பட்ட மகாணங்களின் எல்லைகளும் நிர்வாகமும் ஆலோசனை சபையிலுள்ள நமது இந்தியா செக்ரட்டெரியின் சம்மதத்தின்பேரில் ஆலோசனைச் சபையிலுள்ள நமது கவர்னர் ஜெனரல் அவசியமானபடி அமைப்பார். இந்தத் திருத்தங்களால் இந்தியா இப்போதைவிட நன்றாய் நிர்வகிக்கப்பட்டு நமது அன்

பள்ள பிரஜைகளின் அதிகமான வளப்பத்துக்கும் சந்தோஷத்துக்கும் அவைகள் ஹேதுவாகுமென்று நாம் மனப்பூர்வமாய் விரும்புகிறோம்."

## 3. தர்பார் விருந்தாடிகள்.

இந்தியாவின் தலைநகரான டில்லிமாநகரில் நடக்கப்போகும் மகுடதாரணவைபவத்துக்கு ஜெர்மனி, ருஷியா, சைனா, ஜப்பான் பிரான்சு, அமெரிக்கா முதலிய விடங்களிலுள்ள சக்கிரவர்த்திகள் குடியரசு பிரஸிடெண்டுகள் மற்றுமுள்ள பேரரசர், சிற்றரசர்கள், ஜெமீன்தார்கள், பிரபுக்கள், பத்திராசிரியர்கள் பார்லிமெண்டு மெம்பர்கள், வித்துவான்கள், மதக்குருமார்கள், மதசித்தாந்திகள் முதலிய எல்லோருக்கும் 12000 அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தது அவர்களையன்றிமற்றும் ஆஸ்டிரேலியாவிலுள்ள ஸிட்னியிலிருந்து அநேக மாணாக்கர்களும் சைனா, ஜப்பான் ராஜ்யங்களிலிருந்து லீங்செங் என்ற ஸ்டீமரில் 600 பேர்களும் அமெரிக்காவிலிருந்து கிளீவ்லண்டு என்ற ஸ்டீமரில் 700 அமெரிக்கர்களும், இங்கிலாண்டிலிருந்து 150 ஆங்கிலபிரபுக்களும் டன்னட்டார்காவில் என்ற ஸ்டீமரிலும் பிரிட்டிஷ் பார்லிமெண்டு மெம்பர்களில் சுமார் 100 கனவான்களும் வேடிக்கைபார்ப்போர்களாயும் விருந்தாடிகளாயும் வந்திருந்தார்கள். இந்தியாவிலுள்ள சிற்றரசர்களில் 150 பேர்களும் பல நூற்றுக்கண ஜெமீந்தார்களும் பிரபுக்களும் மதிக்கத்தகுந்த மற்ற வகுப்பாரும் பத்திராசிரியர்களும் ரிபோர்ட்டர்களுமாக விஜயஞ்செய்திருந்தார்கள். தர்பாரில் ஒரு லெட்சம் பேர்கள் விற்றிருக்க நாற்காலிகள் போடப்பட்டிருந்தது. அதில் வேடிக்கை பார்ப்போர் 50000 ஐம்பதாயிரம் பேர்களும் மற்றவர்கள் 50 ஆயிரம் பேர்களுமாக திட்டமிடப்பட்டிருந்தது தர்பார் மண்டபமும் பந்தலும் நிறைந்து நெருக்கடியாயுமிருந்ததென்றால் வந்திருந்தவர்கள் லெட்சத்துக்குமேல் ஒண்ணரை லெட்சம் பேர்கள் வந்திருந்தார்களென்று மதிக்கப்படுகிறது. இவ்வளவு பெருந்தொகையான பிரபுக்களுக்கு அவரவர்களின் அந்தந்தஸ்துக்குத்தக்கபடி ஆசனங்களும் காம்புகளும் மற்றும் வேண்டிய உபசாரனைக்கும் ஆகாரவசதிகளும் செய்யப்பட்டன. இம்மாதிரி உயர்தர நாகரீகம்பெற்ற அநேக அரசர்களையும் சக்கிரவர்த்திப்பிரதிநிதிகளையும் பார்ப்பது அந்த ராஜவிருந்துகளில் சம்மந்தப்படும் புருஷோத்தமர்களின் பெரும்புண்யமும் புகழுமாயிருப்பதுமன்றி ஒரு புருஷ ஆயுளில்கிடைக்கும்பெரும்பேறென்பதையுமறியவேண்டும்

## வேடிக்கை விநோதங்கள்.

சக்கரவர்த்தியின் மகுடாபிஷேக காலத்தில் டெல்லியில் நடக்கும் வேடிக்கைகளில் பாதஷாஹி மேலா என்று சில வேடிக்கைகள் யமுனைநதிக்கரையில் டெல்லிக்கோட்டை மதில்களின் கீழ்நடந்தது. இங்கேதான் யுதிஷ்டிர சக்கரவர்த்தி அஸ்வமேத யாகம்செய்து மகுடாபிஷேகம் செய்துகொண்டார். மொகலாயச் சக்கரவர்த்திகளும் அவர்களுடைய விளையாட்டுகளை நடத்தின இடமும் இது தான். இந்த வேடிக்கைகள் டிசம்பர் மாசம் 10-ந் தேதி முதல் 18-ந்தேதி வரையில் விசேஷமாய் நடந்தது. இந்த வேடிக்கைகள் நடக்கும்போது, சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி இருவரும், முற்காலத்தில் மொகலாய்ச் சக்கரவர்த்திகள் ஜனங்கள் பார்க்கும்படி மேலேயுள்ள ஜன்னலில் வந்து காட்டிக்கொள்வது போல, காட்டிக்கொண்டார்கள். ஸர்வ ஜனங்களும் இவர்களைப் பார்த்துச் செல்லும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஹிந்துக்கள், மகமதியர், சீக்கியர், ஆரிய சமாஜத்தார், ஜயினர் ஆகிய பற்பல மதத்தினர் 13-ந்தேதி அவரவர்கள் மதப்படி ஆராதனைகள் செய்துவிட்டு, மேலா நடக்குமிடத்துக்கு வந்து சக்கரவர்த்தி சக்கரவர்த்தினியைத் தரிசிப்பார்கள். குஸ்திகள் சர்க்கஸ் ஆட்டங்கள் வாண வெடிக்கைகள் பாண்டு வாத்தியங்கள் ஆட்டுக்கடாச் சண்டைகள் கத்தியாட்டங்கள் முதலிய வேடிக்கைகள் நடந்தன. வேடிக்கைசெய்கிற கூட்டத்தார் பலர் இந்தச்சமயத்தில் வந்து பல வேடிக்கைகளை அதிஆச்சரியமாய் நடத்தினார்கள். சிந்தியா மகாராஜா ஒருகோட்டையைத் தாக்குவதுபோலக்காட்டும் வேடிக்கைகளும் நடந்தன.

## தென்னிந்தியாவிலிருந்து டில்லி தர்பாருக்கு வந்திருந்த இந்தியர்களான சிலமுக்கியமான ராஜவிருந்தாடிகள்.

H. H. மைசூர் மகாராஜா அவர்கள்

H. H. திருவாங்கூர் மகாராஜா அவர்கள்

H. H. கொச்சி மகாராஜா அவர்கள்

H. H. புதுக்கோட்டை மகாராஜா அவர்கள்

ராமநாதபுரம் மகாராஜா சேதுபதியவர்கள்.

ஆனரபிள் N. கிஷ்ணசாமி அய்யங்கார் கும்பகோணம்.

மகா-ள-ள-ஸ்ரீ G. S. விஸ்வநாதய்யர் சுதேசமித்திரன் பத்திராதிபர் சென்னை. இன்னும் பலரும்

**Gold Coin**–2 பவுன் நிறையுள்ள தர்பார் மேடல் கவர்னர் ஜெனரலால் தர்பார் விருந்தாடிகளுக்குக் கொடுக்கப்பட்டது.

## கவர்னரவர்களால் வழங்கிய தர்பார் மேடல்கள்.

வெள்ளியில் செய்யப்பட்டது சிங்கப்பூர் வெள்ளியைக்காட்டிலும் கொஞ்சம்பெரிதாயிருக்கும். அத்துடன் அழகான ஷெல்வ் (Shelf) காகிதம் வைக்கும் பெட்டியும் ஆனரபிள் மெம்பர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது.

சக்ரவர்த்தி தம்பதி சமேதராய் இராஜகோலத்துடன் மந்திரி பிரதானிகள் கட்டியக்காரர் முதலியவர்கள் சூழ டிசம்பர்மீ 7உ தினம் டெல்ஹி பட்டணம் வந்து தங்கி 12உ முடிசூடிக்கொண்டு இந்தியர்கள் மத்தியில் 18உ வரையிலிருந்து அளவளாவி இராஜ விருந்துகளை நடத்தி இந்தியர்களின் உண்மையான எண்ணங்களையும் அவர்களது அன்பார்ந்த செய்கைகளையும் ராஜபக்தியையும் கண்டு பரவசப்பட்டார். ஒரு சமயம் இந்தியர்களது மதசம்மந்தமான சாஸ்திரங்களைப் பார்க்க ஆசைப்பட்டார். சக்ரவர்த்தியை நேரே தரிசித்த இந்தியர் அவர்களை விட்டுப்பிரிய மனமில்லாத அன்பின் மிகுதியால் கல்கத்தாவுக்கும் கூடப்போய் அங்கும் நடந்த தர்பார் காட்சியை கண்டு களிப்புற்றூர்கள்.

தர்பார் விசிடர்களாகப்போயிருந்தவர்களுக்கும், தர்பார் தினத்தைக்கொண்டாடினவர்களுக்கும் அது சம்மந்தமான சில கமிட்டி மெம்பர்களுக்கும் ஜில்லா கலெக்டர்கள் அங்கங்கே தர்பார் கூட்டி தர்பார் மெடலை வழங்கினூர்கள்.

மதுரை ஜில்லா கானூடுகாத்தான் ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியாரவர்கள், இங்கிலீஷிலும் தமிழிலும் இங்கிலீஷ் அரசாட்சியின் பெருமையையும் அருமையையும் நன்மையையும் எழுதச்செய்து இவ்விராஜதானியிலுள்ள யாவருமறிந்து மதிக்கும்படி சிறு புத்தகங்களை லெட்சக்கணக்காய் அச்சிட்டு எல்லோருக்கும் வழங்கியது அவருடைய இராஜவிசுவாசத்தைக் காட்டுகிறதாயும் மெச்சத்தக்கனவாயுமிருந்தது.

# பதினாறாவது அத்தியாயம்.

## இராஜபக்தி.

முன் அத்தியாயத்தின் முடிவில் சொல்லியபடி தர்பார் கலைந்ததும் அந்த அலங்காரமான மண்டபத்தில் வீற்றிருந்த அநேகர் ராஜ சக்கிரவர்த்தி நடந்துசென்ற வழியில் முத்த மிட்டு, அவர் பாதத்துளியைச்சிலர் வாயில்போட்டுக்கொண் டும் சிலர் தங்கள் ஆடைகளின் நுனியில் முடிந்துகொண்டும் நெற்றியில் தரித்துக்கொண்டும் சென்றனர். இவ்விதம் அன் று மாலை 3 மணிமுதல் மறுநாள் காலை 8 மணிவரையில்நடந் தது. இதல்லவோ ராஜவிசுவாசம்? ஒருசமயம் கல்கத்தாவி லுள்ளஜனங்கள் ராஜதம்பதிகளின் வண்டியைச்சுற்றி நின்று தங்கள் ராஜபக்தியையும், விசுவாசத்தையும் காண்பித்தபொ ழுதுராஜதம்பதிகள் ஆனந்தபாஷ்பம்பெருக்கினர். இவ்விதம் நம்மிந்தியர்களுக்கு சக்கரவர்த்தியிடமிருக்கும் இராஜபக்தி யும் சக்ரவர்த்தி தம்பதிகளுக்கு நம்மிடமிருக்கும் அன்பும் ஒற்றுமையும் குறிப்பிடத்தக்கது.

மறுநாட் காலையில் சீக்கியர்கள், இந்தியர்கள் இவர் களுடைய பஜனைக்கூட்டங்கள் டெல்லியின் நாலாபக்கங்களி லிருந்தும் புறப்படத்தலைப்பட்டது. அந்தப் பஜனைக் கூட் டங்களோடு அந்தந்த மதத்தலைவர்களும், மஹாமஹோ பாத்தியாயபட்டம் பெற்றவர்களும் சில தேசமன்னர்களும் சென்றார்கள். அன்று ஊர்கோலம் வந்த 10 பஜனைக்கூட் டங்களும் அவற்றிற்குள்ள ஆடம்பரத்துடனும் வாத்திய கோஷத்துடனும், ரதங்கள், யானைகள் முதலிய சின்னங் களுடனும் வந்தன. ஊர்கோலங்கள் ஒரு மைல்தூரம் நின் றன. யமுனை நதிக்கரையில் சக்கிரவர்த்தி தம்பதிகளின் க்ஷேமத்தையும் தீர்க்காயுளையுங் கருதி ஹோமங்களும், சிஷ்டிகளும் செய்யப்பட்டன. இவ்வூர்கோலங்களின் வரவை

எதிர்பார்த்து ஸைமன் ஹார்ஜிகோட்டைவாசலில் நின்றுகொண்டிருந்த காசிமகாராஜாவும் பஞ்சாப் லெப்டினெண்டு கவர்னரும் சேர்ந்துகொண்டார்கள். கோட்டைவாசலை அடைந்ததும் குண்டுகள் போடப்பட்டன. பஜனைக்கூட்டத்தார் சக்கிரவர்த்தியின் க்ஷேமத்தையும் ஆயுள் விருத்தியையுங் கோரி மங்களம் பாடினார்கள். இன்னும் ஒவ்வொரு ஊரிலும் இராஜபக்தியைப் பிரஜைகள் காட்டியதை எழுதினால் பெரும் புத்தகமாகமுடியும். ஆகையால் இத்துடன் இதை நிறுத்துகிறோம்.

ராஜதம்பதிகள் கல்கட்டாவுக்கு விஜயம் செய்வதாயிருந்த சமயத்தில் அவர்களை வண்டியில் வைத்து உயர் குடும்பத்தைச்சேர்ந்தவர்கள் இழுக்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று ராஜப்பிரதிநிதியை பாபு பூபேந்திரநாத் போஸ் கேட்டுக்கொண்டார். அப்படி செய்வது அவசியமல்லவென்று ராஜப்பிரதிநிதி உத்திரவு கொடுக்க மறுத்துவிட்டார்.

## 2. இந்தியாவில் மகுடதாரண வைபவங்கள்.

டெல்லியில் 1911-ம் ௵ டிசம்பர் ௴ 12௳ நடந்த மகுடாபிஷேகத்தை விளம்பரப்படுத்தியதை இந்தியாவின் மூலை முடுக்குகளிலுள்ள ஒவ்வொருவரும் கொண்டாடின குதூஹலத்தையும் உற்சாகத்தையும் எழுதிமுடியாது. இந்த தினத்தில் ஒவ்வொரு ஊரிலும் பகல் 12-மணிக்கு ராஜவிளம்பரம் வாசிக்கப்பட்டது. 101 குண்டுகள் போடப்பட்டது.

கிராமங்களிலும் திருவாவடுதுறை, தருமபுரம், மதுரை திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளாதீன முதலிய சைவாதீனமடங்களிலும் மகுடதாரணவைபவத்தை கொண்டாடினார்கள். கிராமாதிகாரிகளான ஒவ்வொரு கிராமத்தலைவரும் தங்கள் தங்கள் அதிகாரங்களை செலுத்தி ஒவ்வொரு ஆலயத்திலும் பள்ளிவாசல்களிலும் ஜெபசாலைகளிலும் அபிஷேக ஆராதனைகளும் தோத்திரங்களும் ஜெபங்களும் செய்தார்கள் ஆங்காங்கு ஜனங்களைக்கூட்டி இராஜவிளம்பரத்தை வாசித்துக்காட்டினார்கள்.

## வாழ்த்து தந்திகள்.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக மூர்த்திகள் டில்லிநகரத்திலிருந்த ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களுக்கு வாழ்த்தும் ஆசீர்வாதமுங் கூறி தந்தியனுப்பினார்கள். அந்த தந்தியை நம் சக்ரவர்த்தியவர்கள் அங்கீகரித்து அந்தரங்க காரியதரிசி மூலமாய் சக்ரவர்த்தியவர்கள் மஹா சந்நிதானத்துக்கு வந்தனமளிப்பதா பதில் தந்தியனுப்பினார்கள். திருவாடுதுறை ஆதீனத்தில் நடத்திய மகுடதாரணவைபவக்கொண்டாட்டங்கள்:—

தமது ஆதீன விசாரணையிலிருக்கும் திருவிடமருதூர் ஸ்ரீ மகாலிங்கேஸ்வரசுவாமி ஆலயத்துக்கு டிசம்பர்மீ 11உ யன்று லெட்சதீபம் போடுவித்து சுவாமிக்கும் அம்மனுக்கும் மற்றுமுள்ள எல்லா மூர்த்திகளுக்கும் தம்பதிகளின் க்ஷேமத்தைக் கருதி விசேஷ ஆராதனைகள் நடத்தப்பட்டது இன்னும் தமது திருமடாலயத்திலும் ஆளுகைக்குட்பட்ட பற்பல மடங்களிலும், மாயூரம், ஆவிடையார்கோவில் திருவாவடுதுறை முதலிய எல்லாத்தேவஸ்தானங்களிலும் 12உ காலை தொடங்கி மகுடதாரண தினமாகிய அன்று முழுதும் நித்யஉற்சவாதிகள் விசேஷத்திருவிழாவாக நடத்தப்பட்டது. பகல் 12-மணி ஆனதும் திருவிடமருதூர் சபா மண்டபத்தில் மகாசந்நிதானம், தம்பிரான்கள், பிரபுக்கள், நாவலர், பாவலர், உத்தியோகஸ்தர் முதலிய பலர் புடைசூழ அழகிய ஸ்வர்ணாசனத்தில் வீற்றிருந்தார்கள். அப்போது சபைமுன்னர் ஆக்ஞையின்படி சக்ரவர்த்தியவர்களின் ராயல் புராக்ளமேஷன் அதாவது ராஜாங்க உறுதிமொழிப் பத்திரிகையான ராஜவிளம்பரம் வாசிக்க ஆரம்பித்தவுடன் ராஜமரியாதையாக 101 வெடிகள் தீர்க்கப்பட்டன. வாசித்து முடிந்தவுடனும் அவ்வாறே வெடிகள் தீர்க்கப்பட்டன பிறகு சக்கரவர்த்தியின் க்ஷேமத்தைப்பற்றி மகாசந்நிதானம் ஆசிகூற பிறகு பாவலரும் நாவலரும் வாழ்த்துப் பாக்களை கூறி அறங்கேற்றினார்கள். எல்லோருக்கும் சந்தோஷத்துடன் பழம் சிற்றுண்டி, சந்தனப்புஷ்பம், தாம்பூலம் முதலியவை

வழங்கப்பட்டு தர்பார் கலைந்தது. பிறகு ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கும் பள்ளிச்சிறுவர்களுக்கும் அவரவர்கள் தகுதிக்கேற்றபடி அன்னமும் வஸ்திரமும் அளித்து பள்ளிச் சிறுவர்களுக்கு தின்பண்டமுங் கொடுத்து சந்தோஷப்படுத்தினார்கள். மாலையில் பாட்டுக்கச்சேரிகளும் நடந்தன. அன்றிரவு ராஜதம்பதிகளின் உருவப்படத்தை யானையின் அம்பாரிமேல் வைத்து மேளதாள வைபவத்துடனும் விருதுகளுடனும் தீவர்த்தி மத்தாப்புகள் பிரகாசிக்க பலவிதமான வாணங்கள் ஜொலிக்க ஊர்கோலம் வந்து திருமடத்தின் ஆசார வாசலில் நின்றவுடன் ராஜதம்பதிகளின் படத்தை மகாசந்நிதானம் தமது திருமடத்தில் எழுந்தருளச்செய்தார்கள். அதுபோலவே ஷை மடம் சம்மந்தப்பட்ட கிளைமடங்களிலும் தேவஸ்தானங்களிலும் மகாசந்நிதானத்தின் ஆக்ஞையின்படி மகுடாபிஷேகத் தினத்தை திருநாளாகக்கொண்டு அன்னதானம், வஸ்திரதானம், சிறுவர்களுக்கு சிற்றுண்டி வேதபாராயணம் தேவாரதிருவாசகபடனம் முதலியவைகள் நடத்தியதுமன்றி, இரவில் கார்த்திகை தீபங்களும், ஊர்கோலங்களும் அதி விமரிசையாய் நடத்தப்பட்டன.

உலகத்திலுள்ள சைவாதீனங்களுக்கெல்லாம் சிரேஷ்டமாயும் இராஜசந்நியாசமாயும் விளங்கும் இம்மகாசந்நிதானத்தின் அங்கீகாரமும் ஆசீர்வாதமும் உலகிலுள்ள சைவசமயிகளின் பிரதிநிதானியாயும் மங்களவாழ்த்தாயும் தெரிவிக்கக்கூடிய பெருமை வாய்ந்ததாயிருக்கிறது.

குறிப்பு:—இம்மாதிரி சமயாசாரியர்களின் அங்கீகாரத்தையும் பெறுவது பூர்வீக வழக்கம்.

---

## கல்கத்தாவில் சக்ரவர்த்தி.

முன் அத்தியாயத்தில் சொல்லியபடி, டிசம்பர்மீ 12உ தர்பார் நடந்து முடிந்ததும், அன்றிராத்திரி வெகு பேர்களுக்கு இராஜவிருந்துநடந்தது. 13உ டில்லிமுனிஸிபாலிடியின் உபசாரப் பத்திரத்தையும், சென்னை ராஜதானி ஜனங்களின் உபசாரனைப்

பத்திரத்தையும் பெற்றுக்கொண்டு தக்கபபடி சக்ரவர்த்தி பதில் சொன்னார். அன்றுசாயந்திரம் தோட்டக்கச்சேரிக்குப் போயிருந்தார்கள். 14வ கௌரவப்பட்டதாரிகளுக்கு பதக்கங்கள் கொடுக்கப்பட்டன. 15வ புது டில்லி நகரத்திற்கு சக்ரவர்த்தி அஸ்திவாரக்கல் நாட்டினார்.

இந்தியன் நாஷணல் காங்கிரஸ் மகாசபையிலிருந்து ராஜ தம்பதிகளுக்கு நல்வரவு கூறி ஒரு தீர்மானம் செய்யப்பட அந்த தீர்மானத்தை ராஜப்பிரதிநிதி மூலமாய் சக்கிரவர்த்திக்கு தந்தி அனுப்பப்பட்டது. அதை சக்ரவர்த்தியவர்கள் அங்கீகரித்து இராஜப்பிரதிநிதிவழியாய் காங்கிரஸ் மகாசபைக்கு தமது வந்தனத்தைத் தெரிவித்து பதில் அனுப்பினார்.

டெல்லியை விட்டு சக்ரவர்த்தி சனிக்கிழமை புறப்பட்டு நேபாளம்வந்து வேட்டையாடிவிட்டு ஜனவரிமீ 5வ சக்கிரவர்த்தி மறுபடியும் கல்கட்டா வந்துசேர்ந்தார்.

சக்ரவர்த்தித்தம்பதிகளை வரவேற்று உபசரிக்க கல்கத்தவில் 6மாதமாக முன்ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எங்கு பார்த்தாலும் நல்வரவு கூறும் வளைவுகளும், வாழைமரங்களும், தோரணங்களும் ராஜதம்பதிகளின் படங்களும் நிறைந்திருந்தன. ராஜதம்பதிகள் விஜயம் செய்யும் சமயத்தில் ரோட்டுகளில் புழுதி எழும்பாமலிருக்கும்படி மண்ணெண்ணெ ஊற்றப்பட்டது. சக்கரவர்த்தி தம்பதிகள் ஏறிவந்த ஸ்பெஷல் ஸ்லூன் ஹௌராஸ்டேஷன் வந்து நின்றதும் ராஜப்பிரதிநிதியும், அவர் மனைவியாரும் ராஜதம்பதிகளை வரவேற்றனர். பிரின்ஸெப்ஸ் என்னும் கட்டிடத்திற்கு இவர்கள் சென்றதும், அன்புடன் வரவேற்கப்பட்டார்கள். உடனே இவர்களுக்கென்று தயாரிக்கப்பட்டிருந்த சிம்மாசனங்களில் அமர்ந்தார்கள். சிலபிரமுகர்கள் சக்ரவர்த்திக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்கள். முதலில் வங்காள மகாண நிர்வாக சபை மெம்பர்களும், பிறகு கூச்பீகார் மகாராஜாவும், இன்னும் சில மன்னர்களும் பேட்டி செய்துவைக்கப்பட்டார்கள்.

தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலூகா, அரித்துவாரமங்கலத்திலிருக்கும் டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர் ஸ்ரீமான் கனம் V. கோபாலசாமி ரெகுநாத ராஜாளியாரவர்களை சக்ரவர்த்திக்கு ஆனரபிள் மிஸ்டர். ஜென்கின்ஸ் கல்கத்தாவில் நடந்த லெவி (Levee)யில் பேட்டி செய்துவைத்தார். இவ்விராஜதானியின்

தென்பாக வாசிகளில் மகாராஜா சக்ரவர்த்தியின் பேட்டியை பெற்று பேசியவர் இம்மகாபுருடர் ஒருவரேயாவர்.

பிறகு கல்கத்தா கார்ப்பரேஷண் சேர்மேன் ஒரு உபசார ஊேப்பத்திரம் ராஜதம்பதிகளுக்கு வாசித்துக்கொடுத்தார். அதற்குத் தகுந்தபடி சக்ரவர்த்தி பதில் சொன்னார். பிறகு கெவர்ண்மெண்டு ஹவுசுக்குச் சென்றார்கள்.

மருநாள் நம் சக்ரவர்த்தி தனக்கு யாதொரு உதவியுமில்லாமல் தனிமையாய் கல்கத்தா தெருக்களைப்பார்த்து வந்தார். அவர் தான் இன்னாரென்று காட்டிக்கொள்ளாமல் ஜனங்களுடன் பேசி சமாசாரங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று எண்ணினார். மறு நாள் மாறுவேஷம்பூண்டு குதிரை சவாரிசெய்தார். அப்பொழுது இவர் சக்ரவர்த்தி என்று ஒருவருக்கும் தெரியாது. ஜனங்களின் மத்தியில் குதிரை சவாரி செய்தும், ராஜப்பிரதிநிதியோடு மோட்டார் சவாரி செய்தும் கல்கட்டாவைச் சுற்றிப் பார்த்தார். ஜனங்களின் மத்தியில் அவர்களை மகிழ்விக்கும் பொருட்டு தனிமையாகச் சென்றார். அவர்களிடம் நம்பிக்கையிருப்பதாக அவர்களுக்கு தெரிவிக்க இப்படிச் செய்தாரென்று ஊகிக்க வேண்டும். ஒரு தடவை சக்ரவர்த்தி பைரங்கமாய் சவாரி வரும்பொழுது ஜனங்கள் நெருக்கியதைக்கண்டு ஒரு கான்ஸ்டபிள் ஜனங்களை அடித்து விலக்கினான். அப்பொழுது சக்கிரவர்த்தி கான்ஸ்டெபிளுக்கு சமிக்கை செய்து ஜனங்களை இம்சிக்காதபடி செய்தது மன்னியில் தன்னை ஜனங்கள் கண்ணாரக்கண்டு ஆனந்திக்கும்படி அந்த இடத்திலேயே கொஞ்ச நேரம் நின்றுகொண்டிருந்தார். சக்ரவர்த்தி இம்மாதிரிப் பல தடவைகளில் ஜனங்களால் தான் அடையும் நிர்ப்பந்தத்தைக் கவனிக்காமல், தம்மிடத்திலுள்ள பிரியத்தாலும், பக்தியினாலும், தம்மைப்பார்க்கவரும் ஜனங்களைத் தடுக்காமல் பயமின்றியும், கூச்சமின்றியும் தன்னைப்பார்க்கும்படி செய்தார். பவானிபூரிலுள்ள சந்து பொந்துகளெல்லாம் தனிமையாக நுழைந்து சென்றுபார்வை யிட்டார்.

கல்கத்தா யூனிவர் விட்டியார் சக்ரவர்த்திக்கு ஒரு அட்ரெஸ் வாசித்துக்கொடுத்தார்கள். அதைப்பெற்றுக்கொண்டு சக்ரவர்த்தி சொன்ன பதிலில் குறிப்பிடத்தக்க விஷயம் ஒன்றுண்டு சக்ரவர்த்தியின் பேச்சின் அந்தபாகத்தைமட்டும் இங்கு எழுதுகிறோம்.

"ஆறு வருஷத்திற்கு முன்னால் இங்கிலாந்திலிருந்து என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துச் செய்தி அனுப்பினேன். அதில் இந்தியா இன்னும் அன்பாய் ஆளப்படவேண்டும் என்று குறிப்பிட்டேன். இன்றைக்கு இந்தியாவிலிருந்து கொண்டு நான் இந்தியாவிற்குத்தென்பு (Hope) பிரத்திய வார்த்தையை (Watch word) அளிக்கிறேன். நாலாபக்கங்களிலும் நவீனவாழ்க்கையைக் குறிக்கும் குறிகளும் கிளர்ச்சிகளும் என் கண்ணில் விழுகின்றன. படிப்பினால் உங்களுக்குத் தென்பு வந்திருக்கின்றது. படிப்பு திருந்தி உயரும்போது உயர்ந்து திருந்தின தென்புகள் உண்டாகும்." இப்படியாக இந்தியர்களிடம் அன்பு காட்டிப் பேசிய சக்ரவர்த்திப்பெருமானுக்கும், இந்திய உயர்தரமாதர்களுடன் அன்பும் ஆதரவுங் காட்டிப்பேசிய மகாராரணியவர்களுக்கும் இந்தியர்களாகிய நாம் வாக்குமனம் சரீரமாகிய திரிகரணங்களாலும் தோத்திரஞ் செய்யமுடியுமேயல்லாமல் வேறென்ன செய்யமுடியும். நம்மகாராஜா சக்ரவர்த்தியவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் தீர்க்காயுளையும் ஆரோகதிடகாத்திரத்தையும் கொடுத்து இரட்சிக்க ஜெகதீசனைப் பிரார்த்திப்போமாக.

இப்படியாக நமது காருண்ய சக்ரவர்த்தி தம்பதியடன் டில்லி நகர்வந்து இந்திய கிரீடத்தைத் தரித்துக்கொண்டு தர்பார் நடத்தியதல்லாமல் கல்கட்டாவிலும் தர்பார் நடத்தி அநேக பேரரசர்களுக்கும், சிற்றரசர்களும், பிரபுக்களுக்கும், தேசாபிமானிகளுக்கும் பேட்டிகொடுத்து அவர்களுடன் கலந்து பேசினார். பிறகு தம் ஜென்மதேசத்துக்கு செல்ல முக்கியமானவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு பம்பாய்நகருக்குத் திரும்பினார். அங்குள்ள முக்கியமானவர்களோடும், இராஜபிரதிநிதியோடும், கவர்ணர்களோடுமிருந்த சக்ரவர்த்தி, தம்பதிகள் இந்தியர்களைவிட்டுப்பிரிய மனமில்லாதவர்களாய் 'ஆனந்தகண்ணீர்ததும்ப பிரிவுரைகூறி விடைபெற்று மெடீனாஸ்டீமரில் இந்தியா மந்திரியவர்களுடனும் பரிவாரங்களுடனும் இங்கிலாண்டு தேசத்துக்குச் சென்றார்.

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் நம்சக்ரவர்த்தி சுகஜீவியாய் இங்கிலண்டுக்குச் சென்றவுடன் பார்லிமெண்டு மெம்பர்களும் உயருத்தியோகஸ்தர்களும், மந்திரிகளும், லார்டுகளும், பலதேச ராஜப்பிரதிநிதிகளும் எதிர்கொண்டழைத்து நல்வரவு கூற அதிர்வெடி முழங்க பக்கிங்ஹாம் அரண்மனைக்கு யெழுந்தருளினார், அங்குள்ள தம் குழந்தைகளையும், நண்பர்களையும், பந்துக்களையும் பார்த்து சந்தோஷமாய் தாங்கள் இந்தியாவிற்பெற்ற பூஜிதைகளையும் விசேஷங்களையுங்கூறி சந்தோஷப்பட்டார்கள்.

சிலநாட் கிருமித்து இந்தியாவிற்குப்போய் வந்த சந்தோஷத்தை தெரிவிக்கும் பொருட்டு ஒரு இராஜவிருந்து நடத்தினர். அதில் சுமார் எண்ணுயிரம் பிரபுக்கள் ஆஜராயிருந்தார்கள். அதில் சக்ரவர்த்தியும் சிலரும் விருந்துப்பேச்சுப்பேசி இந்தியாவையும் இந்திய அரசாட்சியையும் புகழ்ந்துபேசி ஆனந்தங்கொண்டாடினார்கள்.

## இந்தியாவின் எதிர்காலம்.

பரதகண்டமென்னும் நம்மிந்துதேசமானது எதோ யீஸ்வர கிருபையால் பலவித மாறுதல்களுண்டாக வேண்டுமென்பதற்குட்பட்டிருந்தது. அப்படியே சுமார் இரண்டாயிரவருஷகாலம் பலவித சங்கடங்களையுமனுபவித்த தென்றாலும் இடையிடையே அப்பர், சுந்தரர், சம்மந்தர், மாணிக்கவாசகர் முதலிய சமயாசாரியர்களும், ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியார் முதலிய ஞானிகளும் ஆழ்வாராதிகளும், புத்தர், கௌதமசாக்கியர் முதலிய நல்லபக்தர் ஞானிகள் அவதரித்து ஜாதி மத வித்தியாசங்களை நீக்கி அநீதங்களைக் கண்டித்து காலசக்ர சுழர்ச்சிக்குத்தக்கபடி நியாயங்களையும் தர்மங்களையும் போதித்துவந்தார்கள். உலகத்தில் சாந்தகுணமும் ஈஸ்வர பக்தியுமுள்ள நல்லஜனங்களை எவராலும் ஜெயிக்கமுடியாது. அவர்கள் இயற்கையான சர்வசக்தியின் சுழர்ச்சியால் உலகம் நடப்பதாக நம்பியிருக்கிறார்கள். அதை பரதகண்ட பெரியோர் தெளிவாய் உணர்ந்திருக்கின்றமையால் இராஜாங்க விஷயங்களில் தலையிடுகிறதில்லை. நன்மைவந்தாலும், தீமைவந்தாலும் எல்லாம் கடவுளின் திருவிளையாட்டு என்று நம்பும் சுபாவமுடையவர்கள், நிற்க இப்பொழுது உலகமுழுதும் பரவியிருக்கும் ஐரோப்பியர், ஆரியரென்றும், ஒருகாலத்தில் சிந்துநதிக்கரையில் வசித்த இவர்களில் சிலர் ஐரோப்பாவுக்குச்சென்றவர்கள் ஐரோப்பியரென்றும், இமய மலைக்குத்தென்பாகத்தில் குடியேறிய இவர்களுக்கு ஆரியரென்று பெயர்பெற்றார்களென்றும், இந்திய இராஜப்பிரதிநிதியாகவிருந்த லார்டுகர்சென் ஒரு பிரசங்கத்தில் கூறினர். அதன் உண்மை எப்படியிருந்தாலும், இந்தியாவில் இங்கிலீஷ்பிரஜைகளும் ஆரியர்களும் தற்காலம் முன்னிற்கிறார்களென்பதை மறுக்க முடியாது. ஆனாலும் திராவிடர்களே இந்தியாவின் பூர்வீகர்களென்பதையும் யதவைராக்கியமும் தன்மறுப்புமுடையவர்களென்பதையு மெடுத்துச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. இங்கிலீஷ் அரசாட்சி இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டதால், இந்தியர் மொத்தத்தில்

சுகமடைந்து வருகிறார்கள். அவர்களின் அறிவை மறைத்துக் கொண்டிருந்த சில ஜாதியாரின் சுயநன்மைக் கருத்துக்களான மேகப் படலங்கள் விலகி வருகின்றன. உண்மைகளை அறியவும் அந்நெறியைப்பற்றி நடக்கவும் தூண்டியது இங்கிலீஷ் அரசாட்சியும் இங்கிலீஷ்பாஷையுமென இந்தியர் உணர்ந்துவருகிறார்கள்.

இந்தியர்கள் காலவித்தியாசத்தாலும் அந்நியர் சேர்க்கைகளாலும் புது நாகரீகமுண்டாகி பழய மதாசாரங்கள் அழிந்து வருகின்றனவென்றும், புது நாகரீகவெள்ளத்தை அணையிட்டு தடுப்பாரில்லையென்றும் பலர் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், அப்படி எண்ணுபவர்கள் அறியாமையும் காலச்சக்கரத்தின் உரிமையை தெரியாதவர்களுமாய் இருக்கிறார்கள். என்று எண்ணவேண்டியதாயிருக்கிறது. எப்படியெனில் இப்போது நம்மிந்தியதேசம் உலகத்திலுள்ள மற்றத்தேசங்களோடு பிணைக்கப்பட்டு சங்கிலி கோர்வையிலிருக்கின்றது. வியாபாரங்களும் தொழில்களும் பந்தித்து நிற்கின்றன. இந்தியர்களாகிய நம்மில் பெரும்பாலர் அந்நியர் முன் செல்வதற்கு காரணங்களையறியாமலிருக்கிறார்கள். இவ்வாறு அந்நியதேசங்களினுடைய அனுபோகமில்லாத நம் முன்னோர்களும் இப்போதிருப்பவர்களும் செய்ததும் செய்வதுமான ஆசார அனுஷ்டானங்களை அப்படியே அனுஷ்டிக்க முடியுமா? அந்நிய நாடுகளோ தினமொரு புதிய ஏற்பாட்டை ஏற்று முன்சென்றுகொண்டிருக்க நாம் மட்டும் பூர்வீக கொள்கைகளை அப்படியே வைத்துக்கொண்டிருக்க எப்படி முடியும். நம்மிந்தியாவை "உலகசக்தி வளைத்துநின்று என்னை உட்கொள்" அன்றேல் உன்னை தின்றுவிடுவேன் என்று சொல்லுகின்றது. அப்படிச் சொல்லும் உலகசக்திக்கும் புதிய இந்தியா என்ன பதில் சொல்லவேண்டுமென்றால் "நீ காலகர்மமல்லவா" உன்னை நானறிவேன், உன்னை நான் உட்கொள்ளுவதுமல்லாமல் உன்னையுமடக்கி முன் செலுத்துகிறேன் என்று பதில் சொல்லவேண்டும்.

அதாவது இந்தியமதாசாரங்களின் உண்மைக்கருத்துக்கு மாறுபடாவண்ணம் எவ்வளவு ஆசார அனுஷ்டானங்களில் திருந்திக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு திருந்திக்கொள்ள வேண்டுமென்பதேயாம். இப்போதிய அனுஷ்டானங்களிற்பல வேதத்திற்கும், சாஸ்திரங்களும் விரோதமானவை அவ்வித அனுஷ்டானங்கள் தடிப்பேறியதால் சங்கடப்பட வேண்டியவர்களாயிருக்கிறோம். அதை சர்வசக்தியுள்ள ஈஸ்வரன் திருத்திக்கொள்ளும்படி அறிவையளித்துக் காப்பாற்றுவாராக.

# முடிவுரை.

இச்சரித்திரத்தை நம்மிந்திய சகோதர சகோதரிகள் யாவரும் படிக்கவேண்டுமென்றே முதல் முதல் இதை எழுதினேம். இதைப் படிப்பதால் ஒற்றுமை, ராஜவிசுவாசம், பெரியோர்களிடம் மரியாதை பாராட்டல், பாஷாபிமானம் முதலிய நற்குணங்கள் பெருகும், குருகியபுத்தியும், துற்குணங்களும் விலகும். இப்போதிய நிலமையில் நம்தேசத்தில் கிராமத்தலைவர், தாலூகாத் தலைவர், ஜில்லாத் தலைவர், இராஜதானித் தலைவர், கலைவல்லார் ஆகிய இவர்கள் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படவேண்டியவர்களாயிருக்கிறார்கள். அப்படித் தெரிந்தெடுக்கும் பொருப்பேற்ற பொதுஜனங்கள், இராஜாங்க விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும், தங்களைத்தாங்களே காப்பாற்றிக்கொள்ளவும் பொதுஜன க்ஷேமத்தை விருத்திசெய்து கொள்ளவும், பின்னும் பல உலக விருத்தாந்தங்களையும் அறியவும் சமாச்சாரப் பத்திரிகைகளை பிரதி கிராமத்திலும் படிக்கப்படும்படி செய்யவேண்டும், அப்படி படித்து வந்தாலதுவே ஜனங்களின் அறிவை விசாலிக்கச்செய்யும். அவ்வழிவால் தேசநன்மைகளும் வரும்படிகளும் அதிகரிக்கும், துர்க்குணங்களும் நீங்கும். மற்றத்தேசத்தாரின் மதிப்பும், இராஜபக்தியும், கைத்தொழிற்பெருக்கும் உண்டாகும. நமது தேசத்தில் எப்போது ஜாதி பேதமும், உணவுபேதமும் குருகிய புத்தியும் நீங்கி பிரதி ஆண்பெண்களும் தேச க்ஷேமத்தில் கவலை வைப்பார்களோ அக்காலமே தேசத்திற்கு நற்காலமாகும். தவிர நம்தேசத்தில் கைத்தொழிலும் விவசாயமும் விருத்தியாகி நமக்கு வேண்டிய சாமக்கிரிகைகளை நம் நாட்டிலேயே நாம் செய்துகொள்ளும் வண்ணம் கைத்தொழிலை விருத்தி செய்யவேண்டும். இப்போது நம்மையாளும் 5-வது ஜார்ஜ் சக்ரவர்த்தி இந்தியாவை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமென்ற பெருங் கருணை வள்ளலாகையால் இவர் காலத்தில் இந்தியர்களும் சீரடைந்து இந்தியாவும் பூரண க்ஷேமத்தையடையுமென்று நம்புகிறோம். எல்லாம் வல்ல இறைவன் அரசரையும பிரஜைகளையும் இரட்சிப்பாராக.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமர நாமமே
சூழ்க வையமுந்துயர்தீர்கவே.

சுபம், சுபம், சுபம்.

# நோட்டீஸ்.

இதிற்கண்ட புத்தகங்களை அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | H. M. 5-வது ஜார்ஜ் சக்கிரவர்த்தி சரித்திரம் படங்களுடன் ... ... | 0 | 6 | 0 |
| 2. | சைவசமய ஒழுக்கம் முதற்பகுதி ... | 0 | 1 | 0 |
| 3. | ஷை 2-ம் பாகம் ... ... | 0 | 2 | 0 |
| 4. | சேனை வேளாளர் மரபு விளக்கம் ... | 0 | 6 | 0 |
| 5. | கனம் தாதாபாய் நௌரோஜியின் சரித்திரம் படமுள்பட ... ... ... | 0 | 4 | 0 |
| 6. | இந்தியா கவர்ண்மெண்டின் திருத்தங்கள் | 0 | 8 | 0 |
| 7. | தமிழர் சரித்திரம் ... ... | 0 | 1 | 0 |
| 8. | வைசிய குல விளக்கம் ... ... | 0 | 4 | 0 |
| 9. | வேளாண் மரபு விளக்கம் ... ... | 0 | 2 | 0 |
| 10. | வேளாளர் சிந்தாமணி ... ... | 0 | 4 | 0 |
| 11. | சைவமும் சைவ அத்வைத சித்தாந்தமும் | 0 | 2 | 0 |
| 12. | கடவுளின் சொரூபம் ... ... | 0 | 2 | 0 |
| 13. | பாஞ்சாலி சபதம் Mr. C. சுப்பிரமணிய பாரதி இயற்றியது. | 0 | 8 | 0 |

☞ 2, 3, 4, இலக்கமிட்ட புத்தகங்கள் அடுத்த ஜூலை மாதத்தில் வெளியாகும்.

சிவ. மா. நாராயணசாமி செட்டி,
லேட் சுதேச சம்ரக்ஷணி எடிட்டர்,
2499, ஜவுளிசெட்டி தெரு,
தஞ்சாவூர்.